# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10th Standard | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID –** Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

# கவிமணி இன்பத்தமிழ்

## மாதிரி வினா - விடை



12

மலிவு விலையில் மாணவர் பதிப்பு !

2019-20

www.Padasalai.Net

**பேரன்புமிக்க மாணவமணிகளே,**

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வை எதிர்நோக்கிக் காத்திருக்கும் உங்களை வாழ்த்தி வரவேற்கிறோம். நீங்கள் சந்திக்க இருக்கும் பொதுத்தேர்வை, அச்சமின்றி, பதற்றமின்றி உற்சாகத்துடன் எதிர்கொள்ள வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கில், இந்நூலை உருவாக்கியுள்ளோம்.

தமிழ்ப்பாடநூலில் இடம்பெற்றுள்ள செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம், மொழியை ஆள்வோம் ஆகியவற்றிலிருந்து, மிகமிக முக்கிய வினாக்களைத் தேர்ந்தெடுத்து, எளியசொற்களைப் பயன்படுத்தித் தெளிவான மொழிநடையில், சிறந்த முறையில் வழங்கியுள்ளோம்.

கொடுக்கப்பட்டுள்ள மாதிரி வினா விடைகளைக் கற்று, எதிர்வரும் பொதுத்தேர்வை மகிழ்ச்சியுடன் சந்தித்து, உயர் மதிப்பெண்பெற, உங்களை வாழ்த்துகிறோம்.

– பதிப்பாளர்

---

**இந்நூலைச் சலுகை விலையில் பெற விரும்புவோர் தொடர்பு கொள்க.**

**97100 02490 / 70102 31425 / 99415 16187**

---

# MERCY **Publications**

## Educational Publishers

43, Bunder Street, Chennai - 600 001

---

இந்நூல் பற்றிய கருத்துகள் ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.
தொடர்பு கொள்க : **744 92 000 92**

---

**Bank Details for Direct Deposit**

| | | |
|---|---|---|
| Account Name | : | **Mercy Publications** |
| Bank Name | : | Karur Vysya Bank |
| Branch | : | Godown Street, Chennai - 600 001 |
| Account Number | : | **1755135000013300** |
| IFSC | : | **KVBL0001755** |

**விலை ரூ. 40/–**

www.Padasalai.Net

# கவிமணி இன்பத்தமிழ் மாதிரி வினா – விடை

# அரசு மாதிரி வினாத்தாள்

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

## பகுதி – I பொதுத்தமிழ்

நேரம் : 15 நிமிடங்கள் + 3 மணி | மதிப்பெண் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினைமட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி – I

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **(14 × 1 = 14)**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. நரம்புகளுக்குள் மீட்டிக் கொண்டிருக்கிறது என அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்

இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

**விடை :** இ) மழைத்துளிகள்

2. கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி ஈ) மறந்து விட்ட உதவி

**விடை :** ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

3. தேயிலைத் தோட்டப்பாட்டு என்னும் நூலின் ஆசிரியர்

அ) முகம்மது இபுராகிம் ஆ) முகம்மது அப்துல் காதர்

இ) முகம்மது இராவுத்தர் ஈ) அப்துல் ரகுமான்

**விடை :** இ) முகம்மது இராவுத்தர்

4. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால்மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் – இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.

ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது.

இ) காலநிலை மாறுபடுகிறது.

ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

**விடை :** அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது.

5. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்றும் சரி, காரணமும் சரி

**விடை :** ஈ) கூற்றும் சரி, காரணமும் சரி

www.Padasalai.Net



6. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

**விடை :** ஈ) கிறித்தவமும் தமிழும்

7. இயற்சீர் வெண்டளை என்பது

அ) மாமுன் நிரை ஆ) காய்முன் நேர்

இ) மாமுன் நேர் ஈ) விளம்முன் நிரை

**விடை :** அ) மாமுன் நிரை

8. **Metro Train** – என்பதன் தமிழ்ச்சொல்

அ) நகரத் தொடர்வண்டி ஆ) மின்தொடர் வண்டி

இ) மாநகரத் தொடர்வண்டி ஈ) நவீனத் தொடர்வண்டி

**விடை :** இ) மாநகரத் தொடர்வண்டி

9. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கின.

**விடை :** இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

10. வளர்தலம் – என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

**விடை :** ஆ) வினைத்தொகை

11. சரியான நிறுத்தக் குறியுடைய தொடரைக் கண்டறிக.

அ) "தமிழ் இமயம்" என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர் வ. சுப. மாணிக்கம்.

ஆ) இவர் தமிழ்க்காதல், வள்ளுவம், உள்ளிட்ட பல நூல்களை இயற்றியவர்.

இ) ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கவிதை, உரை, கடித இலக்கியம், பதிப்பு எனப் பல்துறை ஆளுமை கொண்டவர்.

ஈ) 'தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவித் தமிழ்ச் சுற்றலா மேற்கொண்டவர்.

**விடை :** இ) ஆராய்ச்சி, கட்டுரை, நாடகம், கவிதை, உரை, கடித இலக்கியம், பதிப்பு எனப் பல்துறை ஆளுமை கொண்டவர்.

12. "உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" என்னும் விதிக்கான சான்று

அ) ஆங்கவற்றுள் ஆ) எத்திசை

இ) வெங்கதிர் ஈ) பூம்பாவாய்

**விடை :** அ) ஆங்கவற்றுள்

13. 'முதல்கல்' என்னும் சிறுகதையின் மையக்கருத்து

அ) இயற்கையைப் போற்றுதல் ஆ) தன்னலம் காத்தல்

இ) பொதுநலன் பேணல் ஈ) இயற்கையை அழித்தல்

**விடை :** இ) பொதுநலன் பேணல்

www.Padasalai.Net



14. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான் போ ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ) இந்தா போறான் தருமன்

**விடை :** ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!

## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** (3 × 2 = 6)

**15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாடத் தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

➤ மலைமேட்டில் தலைசாய்க்கும் செங்கதிரால் சிவக்கும் வானம், உழைப்பில் சிவந்த கைகளை உடைய தொழிலாளர், பருத்த தோள்மீதில் முத்துமுத்தாக வீற்றிருக்கும் வியர்வைத் துளிகள் ஆகியவற்றைப்பற்றி வியந்துபாடத் தமிழின் துணைவேண்டும் எனக் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

**16. மறக்கக் கூடாதது மற்றும் மறக்கக் கூடியது எது, எது?**

➤ மறக்கக் கூடாதது, ஒருவர் நமக்குச் செய்த நன்மையை; மறக்கக் கூடியது, ஒருவர் செய்த தீமையை.

**17. திருமயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்களுள் நான்கினை எழுதுக.**

➤ விளக்குத் திருவிழா, திருவாதிரை விழா, தைப்பூச விழா, பங்குனி உத்திர விழா.

**18. அறிவுடை வேந்தனின் நெறிகுறித்துப் பிசிராந்தையார் கூறுவன யாவை?**

➤ அறிவுடை வேந்தன், வரி திரட்டும் நெறிமுறை அறிந்து மக்களிடம் வரியைத் திரட்டினால், நாடு பெருஞ் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படைவதோடு, அவன் எண்ணமும் நிறைவேறும் எனப் பிசிராந்தையார் கூறுகிறார்.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** (2 × 2 = 4)

**19. மையாடல் விழாக் குறித்து எழுதுக.**

➤ ஓலைச் சுவடியில் உள்ள எழுத்துகள் தெளிவாகத் தெரிவதற்காக, மை தடவி வாசிக்கத் தொடங்குவர்.

➤ இந்த ‘அக்ஷராப்பியாசமே’, ‘மையாடல் விழா’ எனப்படும்.

**20. திரைப்பட உத்திகள் சிலவற்றைக் கூறுக.**

➤ காட்சிகள் மாறுவதை உணர்த்த, ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாக மாற்றி, இருளாகக் காட்டுவதைக் காட்சி மறைவு (fade out) என்பர்.

➤ அடுத்த காட்சி தொடங்கும்போது, இருட்டாக இருந்த பகுதியைச் சிறிது சிறிதாக வெளிச்சமாக மாற்றி, முழுக்காட்சியையும் வெளிப்படுத்துவதைக் காட்சி உதயம் (fade in) என்பர்.

**21. ‘தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்’ நூல் பற்றிக் குறிப்பு வரைக.**

➤ கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முதல்நூல், ‘தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்’.

➤ தமிழ்ச் சமுதாயம், தனது பழைய அழகுக்கலைச் செல்வங்களை மறந்து, தன் பெருமை அறியாச் சமூகமாக இருந்த நிலைகண்டு, அறவே மறந்துவிடாது இருக்கவேண்டும் என்பதை நினைவூட்டும் வகையில், மயிலை சீனி. வேங்கடசாமி இந்நூலை எழுதினார்.

www.Padasalai.Net



## பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **(7 × 2 = 14)**

**22. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**எலியும் பூனையும் போல :** அண்ணனும் தம்பியும் உறவை மறந்து எலியும் பூனையும்போல் எப்போதும் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர்.

**23. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், அஃறிணைப் பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

இக்காலத் தமிழில் உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருகின்றன.

எ – கா : இரண்டு மனிதர்**கள்** போனார்**கள்.** நான்கு வீரர்**கள்** போரிட்டார்**கள்.**

**24. தேவையான இடங்களில் வல்லின மெய்யை இட்டும், தேவையற்ற இடங்களில் வல்லின மெய்யை நீக்கியும் எழுதுக.**

நம் வாழ்க்கையின் தரம், நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்போது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

**விடை :** நம் வாழ்க்கையின் தரம், நமது கவனத்தின் தரத்தை**ப்** பொருத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் போது கூர்ந்த கவனம் அறிவை**ப்** பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை**த்** தேவையாகும்.

**25. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) ஐப்பசி **அடமழையில் ஊருனி** நிறைந்தது.

ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.

ஆ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

வானம் பார்த்த பூமியில் பயறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) வைத்து – வை + த் + த் + உ

வை – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

ஆ) அமர்ந்தான் – அமர் + த் (ந்) + த் + ஆன்

அமர் – பகுதி; த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;

ஆன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**

அ) **Animation** – இயங்குபடம்

ஆ) **Tips** – சிற்றீகை

**28. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) கற்பகம் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தாள்.

கற்பகம் சோறு உண்டு பால் பருகினாள்.

ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர்.

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக.**

அ) ஏழையென (ஏழை + என) – "உயிர்வரின்... இ ஈ ஐ வழி யவ்வும்" (ஏழைய் + என)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (ஏழையென)

ஆ) அருங்கானம் (அருமை+கானம்)– "ஈறுபோதல்" – (அரு + கானம்); "இனமிகல்" – (அருங்கானம்)

**30. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களுள் இரண்டனை எழுதுக.**

- சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.
- சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்.
- இத்தொடர்பின் வாயிலாகக் குறியீட்டுப்பொருள், நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

www.Padasalai.Net



## பகுதி – III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **(2 × 4 = 8)**

**31. நெடுநல்வாடை – குறிப்பு வரைக.**

- நெடுநல்வாடை, சங்க இலக்கியம் சார்ந்த 'பத்துப்பாட்டு' நூல்களுள் ஒன்று. இப்பாட்டின் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன். இதனை, இயற்றியவர் மதுரைக் கணக்காயனார் மகனாராகிய நக்கீரர்.
- இதனை 188 அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவாக நக்கீரர் இயற்றியுள்ளார். 'நெடுநல்வாடை' என்பதை, 'நெடியவாடை' எனவும், 'நல்லவாடை' எனவும் அமைத்துப் பொருள் கொள்வர்.
- இப்பாட்டுள் வரும் தலைவி, தன் தலைவனைப் பிரிந்து மிகுதியாகத் துன்புற்றதனால், 'நீண்டவாடை' (நெடுவாடை) ஆயிற்று.
- தலைவியைப் பிரிந்து போர்ப் பாசறையில் தங்கி இருந்த தலைவனுக்கு வெற்றிபெற ஏற்றதாக இருந்ததால், 'நல்லவாடை' (நல்வாடை) ஆயிற்று என்பதாம். எனவே, நூலுக்கு 'நெடுநல்வாடை' என்பது பெயராயிற்று.

**32. "மூன்றான காலம்போல் ஒன்று" – எவை? ஏன்? விளக்குக.**

- எண்ணம், வெளியீடு, கேட்டல் என்னும் மூன்றும் 'மூன்றான காலம்போல் ஒன்று' ஆகும்.
- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்றும் வெவ்வேறு நிகழ்வுகளைக் குறிப்பதாயினும், 'காலம்' என்று குறிப்பிடும்போது, ஒன்றாகவே தோன்றுகிறது.
- எண்ணம் என்பது வேறு; வெளியீடு என்பது வேறு; கேட்டல் என்பது வேறு.
- இவை மூன்றும் தனித்தனி விளைவுகளைக் குறிப்பதாயினும், இவற்றின் விளைவு ஒன்றாகவே உள்ளது.
- எனவே, இவை எப்போதும் ஒன்றல்ல! ஆனால், ஒன்று என எண்ணும்போது, காலம்போல் ஒன்றாகிறது.

**33. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.**

- சனி, ஞாயிறு இரண்டுநாள் விடுமுறையில் செய்து முடிக்குமாறு ஆசிரியர் கொடுத்திருந்த வேலைகளை முடிக்காமல், திங்கள்கிழமை காலையில் எழுந்ததும் நினைவுக்கு வந்து, அன்று விடுப்பு எடுத்துப் பணிகளை முடித்துவிட்டு, மறுநாள் பள்ளி செல்லலாம் என நினைத்துத் தன் பெற்றோரிடம் தனக்கு உடல் நலமில்லை என்று பொய் கூறுவது, அச்சத்திற்கு நல்ல சான்றாக இருக்கும்.
- தன் பிறந்த நாளன்று காலை எழுந்து, தன் கடமைகளை எல்லாம் முடித்து, பெற்றோரிடம் ஆசிபெற நிற்கும்போது, தந்தை "இந்தா உனக்குப் பிறந்தநாள் பரிசாக மிதிவண்டி" என்று கூறிச் சாவி ஒன்றைக் கொடுக்கும்போது, பையனின் முகத்தில் தோன்றும் மலர்ச்சியை மருட்கை (வியப்பு) எனக் கூறலாம்.

**34. 'ஈசன் மகன் நின்றனம் ஓர் ஏழையென ஓர்மின்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :** இறைமகன் இயேசுவைப் பொல்லாதவர்கள் கயிற்றால் கட்டியபோது, உடன்பட்டு நின்றதை விளக்கும் இடத்தைச் சுட்டும்போது, ஆசிரியர் கூறியது இது.

**பொருள் விளக்கம் :** "பகை கொண்டவர்கள், இத்தகைய இழிசெயலைச் செய்கிறார்களே, இதற்காக வாழும் காலம் முழுவதும் துன்பத்தில் வருந்துவார்களே" என எண்ணி இரக்கப்பட்டார் இயேசு. அப்போதும் மனித குலத்தின்மீது கொண்ட உறுதியான அன்பின் காரணமாகத் தம்மை விடுவித்துக் கொள்ளாமல் நின்றார். அப்போது ஈசன்மகன் நின்ற அமைதியான நிலையானது, எந்த உதவியும் பெற இயலாத, ஓர் ஏழைபோல் இருந்தது என, ஆசிரியர் கூறுகிறார்.

www.Padasalai.Net



## பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. (2 × 4 = 8)**

**35. சங்கப் பாடல்களில் 'ஒலிக்கோலம்' குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.**

- ஒலி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் மொழி பிறக்கிறது. கவிதையும் இசையோடு உருவாகிறது. ஓசையும் பொருளும் கலைவடிவம் பெறுகிறது. சங்கப்பாடல்களில்,

'கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே'' (புறம். 110)

என்ற வரிகளில், க, த, ட, ற என்ற வல்லின மெய்களில் உணர்ச்சியின் ஒலிக்கோலங் காணலாம்.

படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக. (புறம். 145)
புணரின் புணராது பொருளே........ நற். 16

இப்பாடல் வரிகளில், ஒலிகளும் சொற்களும் மீண்டும் மீண்டும் வந்து, சொல் விளையாட்டு நிகழ்த்துவதைக் காணலாம். இவ்வாறு, சங்கப் பாடல்களில் குறிப்பிடத்தக்க பண்பாக 'ஒலிக்கோலம்' அமைந்துள்ளதைக் காணலாம்.

**36. வாழிடம் பற்றிச் சங்க இலக்கியம் கூறுவது யாது?**

- தொல்காப்பியம் இல், மனை என்னும் இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள், வாழிடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன.
- அகநானூற்று மருதநிலப் பாடல் ஒன்று, மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் முறையே தம்மனை, நும்மனை எனப் பிரித்துப் பேசுகிறது.
- புறநானூற்றுப் பாடல், தற்காலிகத் தங்குமிடத்தைப் 'புக்கில்' எனவும், திருமணத்திற்குப் பிறகு கணவனும் மனைவியும் பெற்றோரைப் பிரிந்து தனியே வாழ்ந்த இடத்தைத் தன்மனை' எனவும் குறிப்பிடுகிறது.
- 'மனை' என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளது. நம்மனை, தம்மனை, எம்மனை, இம்மனை, உம்மனை, நின்மனை, நுந்தை மனை, நன்மனை, வறுமனை, வளமனை, இடிமனை, தாய்மனை என்பன, சங்க இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

**37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்று நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**

- இந்திய 'சாரசனிக் கட்டடக்கலை' முறையில் கட்டப்பெற்ற உயர்நீதி மன்றக் கட்டடங்கள்,
- எழும்பூர், கோட்டை அருங்காட்சியகங்கள், கன்னிமாரா நூலகம்,
- திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள், தொடர்வண்டி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள்

ஆகியவை, சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவாகும்.

**38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

- மனிதகுல நாகரிக வளர்ச்சியில் வேளாண்மை பெரும்பங்காற்றியுள்ளது. இயற்கையோடு ஒருங்கிணைந்த மேலாண்மையே, மனித இனத்தின் வெற்றிக்குக் காரணமாகும்.
- ஆதலால், சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய பருவத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், உரமிடுதல், பூச்சிகளிடமிருந்து பாதுகாத்தல், உரிய நேரத்தில் அறுவடை செய்தல், தக்க விலை வரும்வரை இருப்பு வைத்தல் போன்ற செயல்களின் விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் நிருவாக வழிமுறைகளும் கொண்ட மேலாண்மையால், வேளாண்மைத் தொழிலை வெற்றிபெறச் செய்யலாம் எனப் பரிந்துரைக்கிறேன்.

www.Padasalai.Net



## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **(3 × 4 = 12)**

**39. 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுது.**

வெற்றியும் தளபதியும், உறவில் அண்ணன் தம்பி முறையினர். பாகப் பிரிவினை இருவரையும் பகைவராக்கி விட்டது. தளபதி, தன் மகனுடன் நகரத்திற்குச் சென்றுவிட்டு, மகனுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அன்று திடீரென்று பேருந்துகள் நிறுத்தப்பட்டன. நகரில் படித்துக் கொண்டிருந்த வெற்றியின் மகள், வீடு திரும்ப முடியாமல் பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்தாள். இதனைக் கவனித்த தளபதியின் மகன் முருகவேள், தந்தையிடம் கூறினான். தளபதி, தான் செலுத்திக் கொண்டிருந்த காரை நிறுத்தி, அண்ணன் மகளை அழைத்துவரச் சொன்னார். முருகவேள், "தேவையா? நாம் போகலாம்" என்றான். தளபதி, "அப்படிச் செய்வது தவறு. இதுபோன்ற நேரத்தில் பகைவனுக்கும் உதவுவதுதான் மனிதப் பண்பு. இது பழிவாங்கும் நேரம் இல்லை! அத்துடன் 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என நீ படிக்கவில்லையா? யாரோ ஒருவருக்கு உதவி செய்வதுபோல் உதவுவதே நல்லது. நாம் நல்லதே செய்வோம். அதனால் கெட்டுப்போக மாட்டோம்" என்று கூறினார். தந்தையின் அறிவுரையை ஏற்று முருகவேள் பேருந்து நிலையம் நோக்கி நடந்தான். 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்னும் ஔவைப் பாட்டியின் நல்லுரையை மனத்தில் பலமுறை சொல்லிக் கொண்டான்.

**40. தமிழாக்கம் தருக.**

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underpriviliged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep - rooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

பெரியார், பெருமைக்குரிய சமூகப் புரட்சியை உருவாக்கியவர்மட்டும் அல்லர்; ஒருவகையில் அதற்கும் மேலான சீர்திருத்தவாதி. பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்வுக்கு நெறிகாட்டிய வீரராக அறியப்படுகிறார். இவ்வகையிலும் அவருக்கு இணை அவரே எனக் கூறுமாறு திகழ்கிறார். அவர் எந்தப் பிரச்சனையைத் தொட்டாலும், அதை முடிப்பதில்மட்டும் கவனம் செலுத்தவில்லை; அப்பிரச்சனையின் அடிமட்டத்துள் புகுந்து துருவித் துழாவி, அதன் விளைவுகள் குறித்து ஆராய்ந்து தெளிவுபெற்றபின், அதற்கு ஒரு நிரந்தர முடிவு கட்டுகிறவரை ஓய்ந்தது கிடையாது. சாதியத் தொடர்பான ஏற்றத்தாழ்வு வேறுபாடுகள் நம் சமூகத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தது. பெரியார் தலைஎடுத்து அதற்கொரு தீர்வு கண்டபிறகே, சமூகத்தின் நிரந்தரச் சாபக்கேடான அது களையப்பட்டது.

**(குறிப்பு : செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா, வினா எண் 40க்குப் பதிலாகக் காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைப் படித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.**

தொடர்நிலைச் செய்யுள் வரிசையில் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும், தமிழ் மக்களின் வாழ்வியலைச் சொல்லும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. மணிமேகலை, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. மணிமேகலையின் துறவுவாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு 'மணிமேகலை துறவு' என்னும் பெயரும் உண்டு. இது, பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம். பண்பாட்டுக் கூறுகளைக் காட்டும் தமிழ்க்காப்பியம். இக்காப்பியம், சொற்சுவையும், பொருட்சுவையும், இயற்கை வருணனைகளும் நிறைந்தது. கதை அடிப்படையில் மணிமேகலையைச் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியெனக் கூறுவர். மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவர் என்பர். தண்டமிழ் ஆசான், நன்னூற் புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.

**அ) இரட்டைக் காப்பியங்கள் எவை?**

சிலப்பதிகாரம், மணிமேகலை.

**ஆ) இந்நூலுக்கு வழங்கப்படும் வேறு பெயர் யாது?**

மணிமேகலை துறவு.

www.Padasalai.Net



**இ) சாத்தனாரின் சமகாலப் புலவர் யார்?**

இளங்கோவடிகள்

**ஈ) இளங்கோவடிகள் சாத்தனாரை எவ்வாறெல்லாம் பாராட்டியுள்ளார்?**

தண்டமிழ் ஆசான், நன்னூற் புலவன் என்று, இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.

**41. சொற்பொருள் பின்வருநிலை அணி அல்லது உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.**

**சொற்பொருள் பின்வருநிலை அணி :**

**இலக்கணம்** : செய்யுளில் முன்னர் வந்த சொல்லே பின்னரும் பலமுறை வந்து, ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரு நிலையணி ஆகும்.

**எ – கா** : எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

**விளக்கம்** : இக்குறளில் 'பொருள்' என்னும் ஒரு சொல் அதே பொருளில் பலமுறை இடம்பெற்றுள்ளமையால் சொற்பொருள் பின்வருநிலையணி அமைந்துள்ளது.

**உவமை அணி :**

**இலக்கணம்** : உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைய, இடையில் உவம உருபைக் கொடுத்துக் கூறுவது, உவமை அணியாகும்.

**சான்று** : "உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று"

'குடங்கருள் பாம்போடு உடன்உறைதல்' உவமானம். 'உடம்பாடு இலாதவர் வாழ்க்கை' – உவமேயம். அற்று – உவம உருபு. எனவே, உவமை அணி ஆயிற்று.

**42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.**

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

**– கவிமணி தேசிக விநாயகம்**

**ஆசிரியர் :** இப்பாடலைப் பாடியவர், கவிமணி தேசிக விநாயகம். 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு' எனத் தொடங்கும் பாடலைத் தொடக்க வகுப்பில் படித்ததை நாம் மறந்திருக்க முடியாது. குழந்தைகளுக்கு மனத்தில் நிற்கக்கூடிய அரிய செய்திகளை எளிய சொற்களில் கவிதை வடிவில் தந்ததில் முன்னோடியாகத் திகழ்ந்தவர். இவரைக் 'கவிமணி' எனப் போற்றுவதில் தவறு இல்லை. இங்கு இடம்பெற்றுள்ள பாடல், நம் சமுதாயத்தில் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் முறையைச் சாடுவதாக உள்ளது. இளம்பருவத்தில் இத்தகைய செய்திகளைக் கற்பது, எதிர்காலத்தில் நல்ல சமுதாயம் அமைய வழிவகுக்கும். இனிப் பாடல் நயத்தைக் காண்போம்.

**திரண்ட பொருள் :**

இவ்வுலகில் வாழும் எவருக்கும், அவரவர் பிறந்த பிறப்பினால் பெருமை ஏற்படுவதில்லை. ஒருவர் சிறப்பைப் பெறவேண்டுமானால், அவர் நல்ல செயல்களைச் செய்பவராக இருத்தல் வேண்டும். எவர் ஒருவர் நற்செயல்களைச் செய்கிறாரோ, அவரே எல்லாராலும் விருப்பப்படுகின்ற உயர்குலத்தில் பிறந்தவராவார். "தீமை தரும் செயல்களைச் செய்பவர், எவரும் நெருங்கித் தீண்ட விரும்பாத இழிகுலத்தில் பிறந்தவராவார்" என்பது, பாடலின் திரண்ட பொருள்.

www.Padasalai.Net



**மையக்கருத்து :**

“பிறப்பினால் உயர்வு தாழ்வு வராது! செய்யும் செயலால்மட்டுமே சிறப்பு ஏற்படும். நல்லது செய்பவரை எல்லாரும் போற்றுவர். நல்லது அல்லாததைச் செய்பவரை எவரும் விரும்பார்” என்னும் திரண்ட கருத்து கூறப்பட்டுள்ளது.

**நயம் :**

இப்பாடலில் எளிய சொற்களைப் பயன்படுத்தி அரிய கருத்துகள் கூறப்பட்டுள்ளன. பெருமைபெற என்ன செய்ய வேண்டும், எல்லாரும் விரும்ப என்ன செய்ய வேண்டும் என்பனவற்றைக் கூறி, நல்லொழுக்க நெறிக்கு வழிகாட்டுகின்றார். இளமையில் கற்பதனால் விளையும் பயனைத் தெளிவாக அறியமுடிகிறது. ‘பெருமை வராது, நல்ல செய்கை வேண்டும், உலகம் நாடுதல், அண்டித் தீண்டத் தகாதவர்’ என்பன, சிந்தனைக்குரிய தொடர்கள்.

**தொடைநயம் :**

அடிதோறும் முதல் சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து எதுகை அமைந்துள்ளது. பிறப்பினால், சிறப்பு – என்பனவற்றிலும், நன்மை, தின்மை என்பனவற்றிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து, ‘அடிஎதுகை’ அமைந்துள்ளது.

3, 4–ஆம் அடிகளில் முதல் சீர்களில் நன்மை, தின்மை என்னும் சொற்களில் முரண்தொடை அமைந்துள்ளது.

அடிதோறும் ஈற்றுச்சீர் பொருந்திவந்து அமைவது இயைபுத்தொடை. வாராதப்பா, வேண்டுமப்பா என்னும் ஈற்றுச்சீர்கள் ஓசைநயத்தில் பொருந்தியதால், இயைபுத்தொடை அமைந்துள்ளது.

எளிய சொற்களில், ஓசை நயம் பொருந்தப் பாடப்பட்டுள்ளதால், பாடி மகிழ்வதற்கு உகந்ததாக அமைந்துள்ளது. இதில் பொருந்தியுள்ள சந்த நயம், இது ‘சிந்துப்பா’ வகையைச் சார்ந்தது என்பதைப் புலப்படுத்தும்.

**43. பொன்மாலைப்பொழுது அல்லது விடாமுயற்சி என்னும் தலைப்பில் புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.**

**பொன்மாலைப்பொழுது**

விண்ணின் மணி மேற்கில் விழுந்தது
வானமெங்கும் பொன்நிறம் பூத்தது
அதுவெறும் மாலைப்பொழுது அன்று
அதுவே பொன்மாலைப் பொழுது என்பேன்!
அடிவானத்தில் ஒளிமின்னல் பரவியதோ?
செவ்வானம் பெருங்கடலோ! அன்றித்
தீப்பற்றி எரிகிறதோ! புகைத்திட்டுபோல்
பொன்னிறம் விரிக்கும் மேகக்கூட்டம்!
காணுதற்கு அரிய காட்சி!

**விடாமுயற்சி**

ஊக்கமுடையார் உயர்வு பெறுவர்
ஊக்கமிலார் உழைக்க அஞ்சுவர்
ஊக்கம் என்பதே உழைப்புக்கு வித்து
ஊக்கம் தழைக்க முயற்சி வேண்டும்!
முயற்சி என்பதே முன்னெடுத்துச் செல்லும்!
முன்னேற்றம் தழைக்க அதுவே கொழுகொம்பு
‘ஊக்கமது கைவிடேல்’ என்றார் ஔவைப்பாட்டி
விடாது முயன்றால் வெற்றி நிச்சயம்
விடாது முயன்று வெற்றி காண்போம்.

www.Padasalai.Net



## பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. (3 × 6 = 18)**

**44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையை நும்பாடப்பகுதி வழி விளக்குக.**

கம்பன், தான் படைத்த காப்பியத்தின் தலைவனான இராமனைப் பண்பின் படிமமாகப் படைத்துள்ளான். தந்தை தாய் மீதான அன்பு, உடன்பிறப்பியம், பிற எல்லைகள் என அனைத்தையும் கடந்து, இவனுக்கு முன்போ, பின்போ இப்படி ஒருவர் இருந்தார் எனச் சுட்டிக் காட்ட முடியாத இயல்புகளைக் கொண்டவனாகப் படைத்துள்ளார்.

காடு செல்லும் இராமன், வேடுவர் தலைவன் குகனைக் காண்கிறான். கங்கை ஆற்றைக் கடக்க அந்தக் குகன் உதவுகிறான். கானகத்தில் இராமன் துன்பமடைவானே எனக் குகன் வருந்துகிறான். 'துன்பம் இருந்தால்தானே இன்பம் புலப்படும்' என்று கூறி, வேடனான குகனை இராமன் உடன்பிறந்தானாக ஏற்று, "அன்பு உள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்" எனக் கூறினான். இவ்வுறவைப் பின்னர்க் குகனைச் சந்தித்த பரதனும் உறுதி செய்தான்.

சீதையைப் பிரிந்து வாடிய இராமன், தம்பி இலக்குவனோடு தேடிச் சென்றபோது, காயப்பட்டுக் கிடந்த கழுகுவேந்தன் சடாயுவைக் கண்டான். சீதையை மீட்க இராவணனோடு தான் போராடிக் காயப்பட்டதைக் கூறிச் சடாயு உயிர் துறந்தான். இராமன், தன் தந்தையின் நண்பரான சடாயுவைத் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையிலிருந்து இறுதிச் சடங்குகளைச் செய்தான். தொடர்ந்து சீதையைத் தேடிய இராம இலக்குவர், சவரி என்னும் வயது முதிர்ந்த பெண்ணைக் கண்டனர்.

சவரி செய்த விருந்து உபசரிப்பால், அவள் தன்னைக் காணத் தவமிருந்தவள் என்பதை அறிந்து மனம் நெகிழ்ந்து, "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாயல்லவா?" என விசாரித்தான். கண்ணீர் பெருக்கிய சவரி, " என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; என் தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது" என மகிழ்ந்து கூறி, இராமனைச் சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளுமாறு அறிவுறுத்திச் சீதையைத் தேடுதலில் ஒரு திருப்பத்தை உண்டாக்கினாள்.

சவரியின் அறிவுரையை ஏற்றுச் சீதையைத் தேடிப் புறப்பட்ட இராம இலக்குவரைக் கண்ட அனுமன், நண்பனாக ஏற்கத்தக்க சுக்ரீவனை அழைத்து வந்தான். வானரராயினும் சுக்ரீவனிடம், "உன் கிளை எனது! என் சுற்றம் உன் சுற்றம்! நீ என் இன்னுயிர்த் துணைவன்" என்று கூறி, உறவு பூண்டான்.

இலங்கையில் கால் பதித்தபோது, தான் கூறிய நல்லுரையை ஏற்காது கடிந்துரைத்த அண்ணன் இராவணனை வெறுத்து, வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்தான். அரக்கர் குலத்தில் பிறந்தவனாயினும், அவனைத் தன் உடன்பிறந்தானாக ஏற்ற இராமன், தன் உறவுகளை எல்லாம் கூறி, "குகனொடும் ஐவர் ஆனோம்; குன்று சூழ்வான் மகனொடும் அறுவரானோம்! நின்னொடும் எழுவர் ஆனோம்" என்று, உடன்பிறந்தாரை உறுதி செய்தான்.

இவற்றை எல்லாம் நோக்க இராமன், தாய் தந்தை மீதான அன்பு உடன்பிறப்பியம் என்னும் எல்லைகள் அனைத்தையும் கடந்து, அன்பு செலுத்துகிறான். இராமனின் அன்பிற்கு வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்னும் வேலிகள் இல்லை என்பதைத் தெளியலாம்.

**(அல்லது)**

**ஆ) எச். ஏ. கிருட்டிணனார் 'கிறித்துவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.**

எச். ஏ. கிருட்டிணனார் படைத்த 'இரட்சணிய யாத்திரிக'க் காப்பியத்தின் குமார பருவத்தில் உள்ள இரட்சணிய சரித படலத்தில் இடம்பெற்றுள்ள இறைமகனின் இறுதிக்கால நிகழ்ச்சிகள், பாடப்பகுதிகளாக இடம்பெற்றுள்ளன.

இறைமகன் நேசம் எனும் வல்லியதை நீக்க வசமின்றி ஓர் ஏழை என நின்றநிலை, ஆளுநர் பொந்தியு பிலாத்து தன்முன் குற்றவாளியாக நிறுத்தப்பட்டவருக்கு மரண தண்டனை விதித்தல், பொல்லாத யூதர்களும் போர்ச் சேவகர்களும் பலவகைகளில் இழிவுபடுத்திக் கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லுதல், அவர்கள் செய்த பொல்லாங்கை எல்லாம் இறைமகன் பொறுத்தல் என்பன, பாடப்பகுதிகளாக வந்துள்ளன.

கிறித்தவ சமயம் சார்ந்த இலக்கியம் தமிழ்மொழியில் இல்லாக் குறையைப் போக்க விரும்பிய எச். ஏ. கிருட்டிணனார், இயேசு பெருமானின் வாழ்வு முழுவதையும் எடுத்துரைக்கும் வகையில், ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் இயற்றிய 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்னும் நூலைத் தழுவி, இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூலைப் பாடினார்.

www.Padasalai.Net



இது பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நூல்வடிவம் பெற்றது. திருத்தக்க தேவரைப் பின்பற்றிக் கம்பர் விருத்தப்பாவில் இராமாயணம் பாடினார். இவ்வகையில் எச். ஏ. கிருட்டிணனார், கம்பரை அடியொற்றி விருத்தப்பாக்கள் வாயிலாக இறைமகன் இயேசுவின் வாழ்வை இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூலாகப் படைத்தார்.

கம்பர், வடமொழிக் காப்பியமான இராமாயணத்தைத் தமிழ் மரபுக்கு ஏற்பத் தமிழில் பாடிப் பெருமைப் படுத்தினார். எச். ஏ. கிருட்டிணனார், ஆங்கில நூலைத் தழுவி, இயேசு பெருமானின் வாழ்வைத் தமிழில், 'இரட்சணிய யாத்திரிகம்' எனப் படைத்தார்.

கம்பர் பாடல்கள்போலக் கிருட்டிணனாரின் பாடல்களும் எளிதில் கற்கும் வகையில் பாடப்பட்டுள்ளமையால், எச். ஏ. கிருட்டிணனாரைக் 'கிறித்தவக் கம்பர்' எனக் கூறல் பொருத்தமானதே.

**45. அ) பண்டைக்கால கல்விமுறையில் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.**

**முன்னுரை :**

ஒரு நாட்டின் முன்னேற்றம், கல்வி மேம்பாட்டுடன் தொடர்புடையது. கல்வியின் நோக்கமும், அமைப்பு முறைகளும் மாற்றம் அடைந்து வந்துள்ளன. இலக்கிய, இலக்கணங்கள், காலநிலை வளர்ச்சியைக் காட்டுகின்றன.

**கற்றலும் கற்பித்தலும் :**

பண்டைக்காலத்தில் கற்பித்தல் என்பது, ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே நடைபெறும் கருத்துப் பரிமாற்றம் ஆகும். திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியரே, அதிக முக்கியத்துவம் வாய்ந்தவராக இருப்பார்.

சரளமாக எழுத, பேசுகின்ற மொழித்திறன் மிக்கவராய் இருப்பார். ஆசிரியரே கற்பித்தல் தன்மையை முடிவு செய்வார். முதலில் நெடுங்கணக்கு முறைகளிலே கற்பித்தல் நிகழும். இலக்கியம், இலக்கணம், வாய்பாடு ஆகிய அனைத்தையும் முழுமையாக மனனம் செய்து, தெளிவுபெறச் செய்வார்.

வினாக்கள் கேட்பதன் வாயிலாக, மாணவர்களிடம் மதிப்பீடும் செய்வார். மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்பப் பாடத்திட்டங்களும் மாற்றம் பெறும். மாணவர்களின் ஆர்வத்திற்கேற்ப, வியாபாரம் பற்றிய செய்திகளும், கணிதமுறைகளும் கற்பிக்கப்படும்.

**கற்றல் செயல்பாடுகள் :**

மாணவரது கற்றல் தன்மைக்கு, முக்கியத்துவம் அளிக்கப்பட்டதோடு மொழித்திறனும் செயல்திறனும் கண்காணிக்கப்பட்டது. மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து செயல்பட, வாய்ப்புகள் அளிக்கப்பட்டது. மாணவர்கள், வினாக்கள் கேட்டும் விடைகள் கூறியும் கற்றுத் தெளிவு பெறுவார்கள்.

அடிப்படையான நூல்கள் எல்லாம், மனனமாகவே இருக்கும். நிகண்டு, வாய்பாடுகளை எல்லாம், தலைகீழ்ப் பாடமாக மனனம் செய்வர். அகராதி, அந்தாதி, எதுகை, மோனை வகையில் செய்யுட்களை ஞாபகத்தில் கொள்வர். ஞாபக சக்தி அதிகரிப்பதற்காகப் பூ, மிருகம், ஊர் போன்ற பெயர்களை மறுநாள் வந்து சொல்லுவர்.

கற்றல் என்பது, பள்ளியில்மட்டுமே என்றில்லாமல், வாழ்நாள் முழுவதும் இருக்கும். குருவை மிஞ்சிய சீடர் என்று சொல்லும்வகையில், மாணவர்கள், புதியன படைக்கும் ஆற்றல் பெற்றிருப்பர்.

(அல்லது)

**ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.**

**திரைப்படம் :**

திரை அரங்கிற்குச் சென்று, நாம் காண்பதே 'திரைப்படம்'. இன்று திரைப்படம் காண்பது என்பது மிக எளிதாக உள்ளது. திரையில் காண்பதால் அதற்குத் திரைப்படம் என்பது பெயராயிற்று. அதன்பின் எவ்வளவு கடின உழைப்பு இருக்கிறது, எத்தனை பேர்களின் கூட்டு முயற்சி இருக்கிறது என்பது சிந்திக்கத்தக்க ஒன்றாகும்.

**பெருந்தொழில் :**

திரைப்படம் தயாரிப்பது என்பது, பெருமுதலீட்டில் செய்யப்படுகின்ற ஒரு பெருந்தொழிலாகும். கதை உருவாக்கம், நடிகர்கள் தேர்வு, உரையாடல் எழுதுதல், பாடல் எழுதுதல், பாடலுக்கு இசை அமைத்தல், நடிப்பதற்குரிய நடிகர்களோடு, படம் எடுப்பதற்குரிய இடங்களைத் தேர்வு செய்தல், அவற்றைப் படமாக்கல், படத்தைச் சீரமைத்து ஒலி, ஒளிப்பதிவுகள் செய்தல், தேர்வுக் குழுவுக்கு அனுப்புதல், படத்தை வெளியிடத் திரைஅரங்குகளைத் தேடிக் கண்டுபிடித்தல், பத்திரிகையாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் செய்தி தெரிவித்தல் என, எத்தனையோ செயல்களைச் செய்த பிறகுதான், ஒரு படத்தைத் திரை அரங்கில் காட்டமுடியும்.

www.Padasalai.Net



**பலரை வாழவைக்கும் தொழில் :**

மேலே குறிப்பிட்ட செயல்களைச் செய்வதற்குப் பல நூறு ஆள்களைத் தேர்வு செய்து, வேலை வாங்க வேண்டும்; அவர்களுக்கு உரிய நேரத்தில் உணவளிக்க வேண்டும்; ஊதியம் தரவேண்டும். இவ்வகையில் எண்ணற்ற குடும்பங்களைக் காக்கின்ற தொழிலாகத் திரைப்படத்தொழில் விளங்குகிறது. படப்பிடிப்பு என்றால் பணியாற்றப் பலர் தேவைப்படுவர். அவர்களின் குடும்பங்கள் இந்தத் தொழிலை நம்பித்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

**கலைவளர் தொழில் :**

திரைப்படத்தில் நடிப்பு, வசனம்மட்டும் இல்லாமல் இசையும் சேர்கிறது. ஆடல், பாடல் கலைகள் அதனால் புத்தாக்கம் பெறுகின்றன. சில படங்களில் சண்டைக் காட்சிகள் இடம்பெறும். அதில் பணிபுரியச் சில குறிப்பிட்ட பயிற்சி பெற்ற கலைஞர்கள் இருப்பர். சில காட்சி அமைப்புகளை உருவாக்க இயற்கை அழகு நிறைந்த இடங்களைத் தேர்வு செய்வர். அன்றி இயற்கைக் காட்சிகளை வரைந்தோ, குறிப்பிட்ட வகையிலான அரங்குகளை அமைத்தோ படப்பிடிப்பை மேற்கொள்வர். இவ்வகையில் உற்று நோக்கினால் திரைப்படத்தொழில் என்பது, எண்ணற்ற கலைகளை வளர்க்கும் தொழிற்கூடமாக மட்டும் இல்லாமல், ஆயிரக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றும் தொழிலாக விளங்குவது புலப்படும்.

**46. அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?**

**சாலை விபத்துகளில் முதன்மை மாநிலம் :**

உலகிலேயே அதிகச் சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு இந்தியா. இந்தியாவில் மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. இந்தியாவில் ஏற்படும் மொத்தச் சாலை விபத்துகளில் 15 விழுக்காடு விபத்துகள், தமிழ்நாட்டில் நடப்பது என்பது வேதனைக்குரியது.

**சாலை விபத்துகளுக்கான காரணங்கள் :**

விபத்துகள், எதிர்பாராமல் ஏற்படுகின்றன. எனினும், மனிதத் தவறுகளே மிகுதியான விபத்துகளுக்குக் காரணங்களாக அமைகின்றன. ஒவ்வொருவரும் தாங்கள் செய்யும் தவறுகளைத் திருத்திக் கொள்ளுதல், விதிகளைப் பின்பற்றுதல் வாயிலாகமட்டுமே, சாலை விபத்துகளைத் தவிர்க்க முடியும்.

**இருசக்கர ஊர்தி விபத்துகள் :**

தமிழ்நாட்டில் நடைபெறும் மொத்த விபத்துகளில் 35 விழுக்காடு, இருசக்கர ஊர்திகளால் ஏற்படும் விபத்துகளாக உள்ளன. எனவே, இருசக்கர ஊர்தி ஓட்டுநர்கள், அதற்கான சாலை விதிமுறைகளைக் கட்டாயம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

- பதினெட்டு வயது நிறைந்தவர், முறையான பயிற்சிமூலம் ஓட்டுநர் உரிமம் பெறுதல் அவசியம்.
- பள்ளி மாணவர்கள், இருசக்கர வாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும்.
- இருசக்கர வாகன ஓட்டிகள், தலைக்கவசம் கட்டாயம் அணியவேண்டும்.
- இருசக்கர வாகனத்தில் இரண்டு பேருக்கு மேற்பட்டோர் பயணித்தல் கூடாது.
- கைப்பேசியில் பேசிக்கொண்டே ஓட்டுவது கூடாது.
- சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்குதல் கூடாது.
- போட்டிப் பந்தயம் நடத்தி, உச்ச வேகத்தில் ஓட்டுவது கூடாது.
- காதணி கேட்பிகள் பொருத்திக்கொண்டு, ஊர்தியினை ஓட்டக்கூடாது.

இந்த விதிமுறைகளை மீறுவதால், இருசக்கர வாகன விபத்துகள், பெருமளவில் நடக்கின்றன. இவற்றை முறையாகக் கடைப்பிடித்தால் விபத்துகள் ஏற்படாது.

**விழிப்புணர்வு இல்லாததும் விபத்துகளுக்குக் காரணமாகும் :**

சாலை விதிகள் குறித்து விழிப்புணர்வு இல்லாததுதான், விபத்துகள் ஏற்படக் காரணங்களாக அமைகின்றன.

- ஓட்டுநரின் கவனக் குறைவு
- போதிய பயிற்சியின்மை
- தட்பவெப்பநிலை அறியாமை

www.Padasalai.Net


- இயந்திரக் கோளாறு
- மிகுதியான ஆட்களையோ சரக்குகளையோ ஏற்றிச் செல்வது
- தொடர்வண்டி இருப்புப் பாதைகளைக் கவனிக்காமல் கடப்பது

இப்படிப்பட்ட விழிப்புணர்வுக் குறைபாடுகளால், விபத்துகள் மிகுதியாக ஏற்படுகின்றன. குறிப்பாக மது அருந்திவிட்டு ஊர்தி ஓட்டுவதால், நிறையவே விபத்துகள் நிகழ்கின்றன. ஓட்டுநர்கள் விழிப்புணர்வோடு இத்தகைய குறைகளைத் தவிப்பார்களேயானால், விபத்துகள் நிகழாமல் பாதுகாக்கலாம்.

**பள்ளி மாணவர்களிடம் காணப்படும் குறைபாடு :**

பள்ளி மாணவர்களிடையே சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அண்மைக் காலங்களில் பள்ளி மாணவர்கள்மூலம் ஏற்படும் விபத்துகள், அதிகரித்து வருகின்றன. சாலை விதிமுறை குறித்த விழிப்புணர்வு இல்லாத நிலையில்,

- மாணவர்கள் சிலர் சாலைகளில் விளையாடுவது,
- சாலைப் போக்குவரத்து ஊர்திகளைக் கவனிக்காமல் திடீரென்று கடப்பது,
- நடைமேடையில் செல்லாமல் சாலையின் நடுவே நடந்து செல்வது,
- சாலையை அடைத்துக்கொண்டு செல்வது,
- வேகமாகச் செல்லும் வாகனத்தின் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு, மிதிவண்டியில் பயணிப்பது,
- ஓடும் பேருந்தில் ஏறுவது, இறங்குவது,
- பேருந்தின் படிக்கட்டில் தொங்கிக்கொண்டு பயணம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

இந்த நிலை எதிர்வரும் காலங்களில் முற்றிலும் மாறுமானால், விபத்தில்லாத் தமிழ்நாட்டைக் காணலாம்.

(அல்லது)

**ஆ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது – விளக்குக.**

**சங்ககாலத்தைக் காட்சிப்படுத்தும் கல்வெட்டுகள் :**

சங்ககாலத்தை அறிய, இலக்கியங்கள் மட்டுமே துணைபுரியும் என்றிருந்த நிலையில், கல்வெட்டுகளும் துணையாக இருக்கின்றன என்று, கண்டறிந்துள்ளனர். சங்ககாலத் தமிழ் மன்னர்கள், முதன்முதலாகத் தமிழகக் கல்வெட்டுகளில் தோன்றிய செய்திகளை இக்கட்டுரை விளக்குகிறது.

**கல்வெட்டுப் புதிர் :**

கரூரை அடுத்துள்ளது புகளூர். அங்கு ஆறுநாட்டான் குன்றில் குகைகள் உள்ளன. அக்குகைகள் ஒன்றில், நான்கு வரிகளில் எழுதப்பட்ட ஒரு பிராம்மிக் கல்வெட்டு இருந்திருக்கிறது. பொதுவாகக் கல்வெட்டை ஆய்வது எளிதன்று. புலப்படாத எழுத்து, அகராதியில் அடங்காத சொற்கள், வழக்கிலில்லாத செய்திகள் எனப் பல தடைகளைக் கடந்து, கல்வெட்டுகளைப் படித்து, உண்மைகளை அறிதல் கடினம். கல்வெட்டில் இடம்பெற்றுள்ள எழுத்துருக்களை ஆய்வது மிகக் கடினமான பணி.

**புகளூர்க் கல்வெட்டின் செய்தி :**

புகளூரில் உள்ள ஆறுநாட்டான் குன்றில், பிராம்மி எழுத்துருக்களில் கல்வெட்டு ஒன்று இருப்பதாகவும், அதுவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால் சரிவரப் படிக்கமுடியவில்லை என்றும் கூறப்பட்டது. அக்கல்வெட்டு, சேர மன்னர்களைப் பற்றியதாக இருக்கலாம் என்றும் கண்டறியப்பட்டது.

**தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டு ஆய்வு :**

தமிழ் பிராம்மிக் கல்வெட்டுகள், பெரும்பாலும் மிகச் சுருக்கமாக ஒரே வரியில், மூன்று அல்லது நான்கு சொற்களைக்கொண்டு மட்டுமே பொறிக்கப்பட்டிருக்கும். இந்நிலையில், நான்கு வரிகளாலான மிக நீளமான கல்வெட்டு, அதிலும் சேர மன்னர்களைக் குறிக்கக்கூடிய ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. நாற்பது ஆண்டுகள் இக்கல்வெட்டுச் செய்திகள் படிக்கப்படாமலே இருந்து வந்தன. தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள், மனித நடமாட்டமற்ற முள்புதர்கள் நிறைந்த குன்றுகளில்தான் இருக்கும்.

www.Padasalai.Net



**ஆறுநாட்டான் குகைக் கல்வெட்டின் குறிப்புகள் :**

நான்கு வரிகள் கொண்ட பிராம்மி எழுத்துகளில் முதல்வரி, யாற்றூர் என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான செங்காயபன் வசிக்கும் இடம் இது என்று, குறிப்பிடப்பட்டிருந்தது. இரண்டாவது வரியில் 'கோ' என்ற முதல்சொல்லில் தொடங்கி, அடுத்தடுத்துப் 'பெருங்கடுங்கோ', 'இளங்கடுங்கோ', 'இளங்கோ' என்ற பெயர்களும் இடம்பெற்றிருந்தன. சங்கநூல்களில் மட்டுமே இதுவரை காணப்பட்ட பண்டைய தமிழ் மன்னர்களின் பெயர்களைத் தமிழகத்தில் முதன்முறையாக ஒரு கல்வெட்டில் காணக்கிடைப்பது புகளூர்க் குகைக் கல்வெட்டில்தான். இது, கருவூரிலிருந்து ஆட்சி செய்த சேரல் இரும்பொறை மன்னர்கள் பொறித்ததாகக் குறிக்கப்படுகிறது. பதிற்றுப்பத்திலும் ஏனைய சில சங்கநூல்களிலும் பாடப்பெற்ற பழந்தமிழ் மன்னர்கள் இவர்கள். இக்கல்வெட்டு, ஏறத்தாழ இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என அறியப்படுகிறது.

**ஆய்வின் முடிவை உறுதிப்படுத்துதல் :**

புகளூர்க் கல்வெட்டுச் செய்தியைத் தம் ஆய்வின்மூலம் வெளிப்படுத்தியவர், திரு. ஐராவதம் மகாதேவன் ஆவார். தம் ஆய்வை வரலாற்றுப் பேராசிரியர் திரு. நீலகண்ட சாஸ்திரியிடம் காட்டி, மேலும் சில கருத்துகளைப் பெற்றுள்ளார். அதன்படி கல்வெட்டுகளைத் தெளிவாகப் படியெடுத்து, ஆராய்ச்சி பற்றிய சிறு குறிப்பாக 'இந்து' நாளிதழில் வெளியிட்டார். தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக் கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர், கோவை திரு. கே. வி. சுப்பிரமணியனார் ஆவார். அவரைச் சந்தித்து அவருடைய வாழ்த்துகளையும் பெற்றதன்மூலம், இவருடைய ஆய்வு உறுதிப்படுத்தப்பட்டது.

## பகுதி – V

**47. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **(1 × 6 = 6)**

**1. அ) 'வையகம் பனிப்ப' – எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடல்.**

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென,
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர்அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க,

(அல்லது)

**ஆ) 'சினம்' – என முடியும் குறள்.**

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 1

## பகுதி – I பொதுத்தமிழ்

நேரம் : 15 நிமிடங்கள் + 3 மணி | மதிப்பெண் : 90

### பகுதி – I

**குறிப்பு** : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14 × 1 = 14**

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

அ) உரிமைக்காகவும் – பாரசீகக் கவிஞர்
ஆ) அஞ்ஞாடி – பூமணி
இ) ஜலாலுதீன் – பாரதி
ஈ) தமிழர் குடும்ப முறை – சாகித்திய அகாதெமி

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**விடை** : இ) 2, 4, 1, 3

2. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" – இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள் ______.

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

**விடை** : இ) இசைக்கருவி

3. 'உள்ளொன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு ______.

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

**விடை** : இ) முரண் பண்பு

4. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் ______.

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இஸ்லாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்துவமும் தமிழும்

**விடை** : ஈ) கிறித்துவமும் தமிழும்

5. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் ______.

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

**விடை** : ஆ) மணல் அள்ளுதல்

6. "குழிமாற்று" எந்தத் துறையோடு தொடர்புடைய சொல் ______.

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

**விடை** : ஆ) கணிதம்

7. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

**விடை** : அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

www.Padasalai.Net



8. தமிழில் திணைப் பாகுபாடு, ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

**விடை :** அ) பொருட்குறிப்பு

9. '**பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தென' – தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு ______.

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**விடை :** ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

10. பொருத்துக.

அ) மாச்சீர் – கருவிளம், கூவிளம்

ஆ) காய்ச்சீர் – நாள், மலர்

இ) விளச்சீர் – தேமாங்காய், புளிமாங்காய்

ஈ) ஓரசைச்சீர் – தேமா, புளிமா

அ) 1, 2, 3, 4 ஆ) 4, 3, 1, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

**விடை :** ஆ) 4, 3, 1, 2

11. படிமம் என்பதன் பொருள் ______.

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

**விடை :** இ) காட்சி

12. தவறான இணையைத் தேர்க.

**பாவகை** **இலக்கியம்**

அ) விருத்தப்பா – நாலடியார்

ஆ) ஆசிரியப்பா – அகநானூறு

இ) கலிவெண்பா – தூது

ஈ) குறள்வெண்பா – திருக்குறள்

**விடை :** அ) விருத்தப்பா – நாலடியார்

13. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர் ______.

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்

இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

**விடை :** ஆ) புதுமைப்பித்தன்

14. மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

**விடை :** அ) குறியீடு

## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 2 = 6**

**15. அணி இலக்கணத்தைமட்டும் கூறும் இலக்கண நூல்கள் எவை?**

➤ தண்டி அலங்காரம், மாறன் அலங்காரம், குவலயானந்தம் என்னும் இலக்கண நூல்கள், அணி இலக்கணத்தைக் குறித்துமட்டும் விளக்கிக் கூறுகிறது.

www.Padasalai.Net



**16. ஞாலத்தின் மாணப் பெரியது எது?**

- உரிய காலத்தில் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், உலகத்தைவிட மிகப் பெரியதாகும்.

**17. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.**

- மாதவியின் நாட்டிய அரங்கேற்றத்திற்காக அமைக்கப்பட்ட மேடையில், ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குச் செல்லுமாறு திரை அமைக்கப்பட்டது. இது ஒருமுக எழினி எனப்பட்டது.
- அந்த நாடக மேடையின் இருபுறத்திலிருந்தும் நகர்த்தப்பட்டு, நடுவில் ஒன்றோடு மற்றொன்று பொருந்துமாறும் திரை அமைக்கப்பட்டது. இது பொருமுக எழினி எனப்பட்டது.

**18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?**

- "இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இந்த உலகம் பிளந்து வெடிக்காதது ஏனோ?
- வானம் இடிந்து விழாதது ஏனோ? கடல்நீர் வற்றிப் போகாததும் ஏனோ?
- இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ?" என்று, மக்கள் பலவிதமாகப் புலம்பினர்.

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

**19. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' எனும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

- மரம் என்பது நிழல் தரும்; காய், கனி தரும்; நீரைவழங்கும் மழைக்கு ஆதாரமாக விளங்கும்; உயிரினங்களின் உயிர்வாழ்க்கைக்குத் தேவையான உயிர்வளியை உற்பத்தி செய்யும்; காற்றில் கலந்துள்ள மாசுகளைத் தூய்மைப்படுத்தும்; மண் அரிப்பைத் தடுக்கும்; நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்கத் துணைபுரியும்.
- இச்செய்திகளை எல்லாம் 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' முழக்கத்திற்குப் பயன்படுத்துவேன்.

**20. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?**

- தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியனவும், கணிதத்தில் கீழ்வாய் இலக்கம், மேல்வாய் இலக்கம், குழி முதலிய பலவகை வாய்பாடுகளும் அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்களாகும்.

**21. பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**

- பருவத்தே பயிர்செய் என்பது, காலத்தின் அருமையை உணர்ந்து, பொறுப்புடன் நிருவாக நெறியை இணைத்தால், வேளாண்மை செழிக்கும் என்பதை உணர்த்தும் தொடராகும். அதாவது, சரியான பயிரைத் தேர்ந்தெடுத்து, உரிய காலத்தில் விதைத்தால்தான், அவ்விதை முளைத்துப் பயனைத் தரும்.

## பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

**22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

- எழுத்து ஒலிகளைத் தெளிவாக உச்சரித்து எழுதவேண்டும்.
- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அமையத் தொடர்களை எழுதவேண்டும்.
- தொடர்களில் வினைச்சொற்களில் கால வேறுபாடு உணர்ந்து எழுதவேண்டும்.
- திணை, பால், எண், இடம் என்பனவற்றை எழுதும்போது, தெளிவாக உணர்த்த வேண்டும்.
- நிறுத்தக் குறிகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

**23. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

- எ – கா : இரண்டு மனிதர்கள் போனார்கள். நான்கு வீரர்கள் போரிட்டார்கள்.

**24. வல்லின மெய்களை இட்டு எழுதுக.**

**எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய் நிறைய தன்னம்பிக்கை கொள்.**

**விடை :** எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி**ச்** செல்வதனை**க்** கண்டு, ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி**த்** துன்புறுவாய்? நிறைய**த்** தன்னம்பிக்கை கொள்.

www.Padasalai.Net



**25. செல்லிடத்து – புணர்ச்சிவிதி கூறுக.**

செல்லிடத்து – செல் + இடத்து

"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" – (செல்ல் + இடத்து)

"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" – (செல்லிடத்து)

**26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.**

அ) தாமரை – தாமரை மலர் அழகானது. காட்சிச் சாலையில் தாவும் மரை (மான்) கண்டுமகிழ்ந்தேன்.

ஆ) தலைமை – ஒருகுழு செம்மையாகச் செயல்படத் தலைமை தேவை.

இன்று பலர், தலைவெளுத்தால் மை (தலைக்கு மை) தடவிக் கொள்கின்றனர்.

**27. பேச்சுவழக்கை எழுத்துவழக்காக மாற்றுக.**

அ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

பிள்ளைக்கு உடம்பு சரி இல்லை; மூன்று நாள்களாகச் சிரமப்படுகிறது.

ஆ) ரவைக்கு சித்தப்பன் காவலுக்குப் போவ சொல்.

இரவுக்குச் சிறிய தந்தையைக் காவலுக்குப் போகுமாறு சொல்.

**28. காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

➤ காப்பியம், இரண்டு வகைப்படும். அவை : பெருங்காப்பியம், சிறுகாப்பியம்.

**29. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

**அ) வழிவழியாக** : மக்களின் வாழ்க்கை நெறிமுறைகள், நாகரிகம், பண்பாடு முதலானவை, **வழிவழியாகத்** தொடர்ந்து நின்று, பெருமை சேர்க்கின்றன.

**ஆ) அகலக்கால்** : தொழில் தொடங்குமுன் சிந்தித்து, **அகலக்கால்** வைக்காமல் சிறிதளவேனும் முதலுடன் தொடங்கவேண்டும்.

**30. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.**

➤ குறியீட்டு உத்தியில், சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் அடிப்படையில் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.

➤ சுட்டும் பொருள் எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும். இவற்றிடையே உள்ள தொடர்பின் வாயிலாகக் குறியீட்டுப் பொருள் நுணுக்கமாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

## பகுதி – III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

**31. பின்வரும் இரு பாக்களிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

i. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே! – நன்னூல்.

ii. மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்கு தற்கு
மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே கூவி வாவா! – **சிற்பி பாலசுப்பிரமணியம்.**

➤ "பழையனவாகிவிட்ட சில நடைமுறைகள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்படுவனவும், புதியனவாகிவிட்ட சில நடைமுறைகளைப் பயன்பாட்டில் இணைத்துக் கொள்வனவும் குற்றம் ஆகாது; காலத்திற்கு ஏற்ப மாறுதல்களை ஏற்றுக்கொள்வது கட்டாயமாகும்" என்பது, முதல் பாடலால் பெறப்படும் செய்தி.

➤ "அந்தப் பழமை நலத்தை மீண்டும் புதுக்குவதற்கு, உடல் சிலிர்த்து எழுமாறு தமிழ்க்குயில் கூவி வரவேண்டும்" என்பது, இரண்டாம் பாடலின் இலக்கியச் சாரம்.

www.Padasalai.Net



- பழமை எல்லாம் தேவையற்றவை என்று ஒதுக்கிவிடவும் கூடாது. பழமையானவற்றுள்ளும் பல நலம்பயக்கும் செய்திகள் இருக்கலாம். அவற்றை மீண்டும் புதுப்பித்துச் சமுதாயத்திற்கு விழிப்புணர்வை உருவாக்கத் தமிழ்க்குயில் குரல் கொடுக்க வேண்டும் எனக் கவிஞர் கருதுகிறார். பழமையைப் புதுக்குவதன்மூலம், சமுதாயம் மறுமலர்ச்சி பெறத் தமிழ் உதவ வேண்டும் என்பது கருத்து.

**32. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- செங்கதிர்களைப் பரப்பும் மாலைநேரத்துச் சூரியன், மேற்கில் மலைமேட்டின்மேல் தலையைச் சாய்ப்பான்; அதாவது, மறைவான். அவ்வேளையில், அந்தி நேரத்தில் வானம் முழுவதும் செந்நிறம் பரவும்.
- அதே வேளையில், விண்ணில் மீன்கள் கண்சிமிட்டும். இக்காட்சி, நாளும் நடைபெறும்.
- இதனைக் கண்டு சுவைத்த கவிஞர், தாமும் அவ்வுணர்வைப் பெறவேண்டும் என்பதற்காக, நயமான சொற்களைக் கொண்டு, கவி பாடியுள்ளார்.
- இந்த வரிகளைப் படிக்கின்றபோதே, மனக்கண்களால் இக்காட்சியைக் கண்டு சுவைக்க முடிகிறது.

**33. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.**

- காட்டிற்குப் போன இராமன், கங்கையைக் கடக்க வேடுவர் தலைவன் குகன் உதவினான். பேரரசனாக இருப்பினும், வேடன் குகனிடம் நட்பு முகிழ்த்ததால், உடன்பிறந்தானாக ஏற்றான்.
- கிட்கிந்தையில் அனுமன் அழைத்துவந்த சுக்ரீவனை "உன் கிளை எனது. என் சுற்றம் உன் சுற்றம்; நீ என் இன்னுயிர்த் துணைவன்" எனக் கூறி, உடன்பிறந்தானாக இராமன் ஏற்றான்.
- சீதையைக் கவர்ந்துவந்தது தவறெனக் கூறியதை ஏற்காமல், அதற்காகக் கடிந்த அண்ணன் இராவணனை விலக்கித் தன்னிடம் அடைக்கலம் வேண்டி வந்த வீடணனை இராமன், உடன்பிறந்தானாக ஏற்றான். இவையே, "குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான" நிகழ்வாகும்.

**34. எவற்றை எல்லாம்விட நன்றி உயர்ந்தது? குறள்வழி விளக்குக.**

- வானகம், ஞாலம், கடல் ஆகியவற்றை எல்லாம்விட, நன்றி உயர்ந்தது என, வள்ளுவர் கூறுகிறார். அதாவது, தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும், தனக்கு உதவி செய்த ஒருவருக்கு இந்த மண்ணுலகையும் அந்த விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.
- செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், உரிய காலத்தில் செய்யப்பட்டதாயின், அது உலகத்தை விட மிகப்பெரியதாகும். பயனை எதிர்பார்க்காமல், ஒருவர் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும் எனக் கூறியுள்ளார்.
- ஆதலால், நன்றி என்பது, மிகப் பெரியது என்பது புலப்படும்.

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 × 4 = 8**

**35. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.**

- பேரிடர் மேலாண்மை ஆணையத்தை நடுவண் அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று அமைத்தது. புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, ஆழிப்பேரலை, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான இயற்கைப் பேரிடர்கள் நிகழும்போது, பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.
- இதற்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என, அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துச் செயலாற்ற, இவ்வாணையம் வழிவகை செய்துள்ளது.

www.Padasalai.Net



**36. மணலில் எழுதியதுமுதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.**

- திண்ணைப் பள்ளிக்கூடத்தில், ஆற்றுமணல் பரப்பி, அதன்மீது எழுதக் கற்றுக் கொடுப்பர். எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும். ஆசிரியர் முதலில் தரையில் எழுத, அதன்மேல் பிள்ளைகள் எழுதுவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.
- ஓலையில் எழுத்துப் பதியுமாறு எழுத்தாணி கொண்டு எழுதினர். தனியாகப் பனை ஓலையில் எழுதப்பட்டதை ஏடு என்றும், ஏடுகளின் தொகுப்பைச் சுவடி என்றும் வழங்கினர்.
- அதன்பிறகு பலகையும் பலப்பமும் வந்தன. அதைத் தொடர்ந்து காகிதத்தில் எழுதப் பயிற்சியேடுகளும் பென்சிலும் வந்தன. கட்டைப்பேனாவும் மைக்கூடும் பயன்படுத்தப்பட்டு, அவையும் மறைந்த பின்னர், மையூற்றுப் பேனாவும் பந்துமுனைப் பேனாவும் வந்தன.

**37. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

- மனிதகுல நாகரிக வளர்ச்சியில் வேளாண்மை, பெரும்பங்காற்றியுள்ளது. இயற்கையோடு ஒருங்கிணைந்த மேலாண்மையே, மனித இனத்தின் வெற்றிக்குக் காரணமாகும்.
- ஆதலால், சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய பருவத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், உரமிடுதல், பூச்சிகளிடமிருந்து பாதுகாத்தல், உரிய நேரத்தில் அறுவடை செய்தல், தக்க விலை வரும்வரை இருப்பு வைத்தல் போன்ற செயல்களின் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும், நிருவாக வழிமுறைகளும் கொண்ட மேலாண்மையால், வேளாண்மைத் தொழிலை வெற்றிபெறச் செய்யலாம் எனப் பரிந்துரைக்கிறேன்.

**38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.**

**மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழ்**

- சித்த மருத்துவர் சீனிவாசன் மகனாக மயிலாப்பூரில் பிறந்தவர். தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இலக்கிய ஆய்விலும், தமிழர் வரலாற்று ஆய்விலும் ஈடுபட்டவர். தமிழ் அறிஞர்களுடன் தொடர்புடையவர். தம் ஆய்வுகள் குறித்துக் குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச் செல்வி, ஆரம்பாசிரியன், லஷ்மி என்னும் இதழ்களில் எழுதியவர்.
- கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும், தமிழ் வளர்த்த கலைகள், நந்திவர்மன், களப்பிரர் காலம் முதலான பல ஆய்வு நூல்களை எழுதியவர். நூலுக்காகத் தமிழக அரசின் முதல் பரிசு, மற்றும் தமிழ்ப் பேரவைச் செம்மல், ஆராய்ச்சிப் பேரறிஞர் முதலான விருதுகளையும் பெற்றவர்.

## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 4 = 12**

**39. ‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’ என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.**

முருகனும், முனியனும் எதிர்எதிர் வீடுகளில் வாழ்ந்தனர். முருகன், எதிலும் போட்டி போட்டுச் செயல்படுவான். முனியன், நூறு கோழிகளை வளர்த்து, சிறுபண்ணை நடத்தினான். முருகன், ஆயிரம் கோழிகளை வாங்கிவைத்து, பெரிய பண்ணை நடத்தினான். முருகன் பண்ணையில் பல கோழிகள் இறந்தன. முனியனின் பண்ணையில், இழப்பு ஏதும் இல்லை. முருகனுக்கு ஏற்பட்ட இழப்புக்கு வருந்திய முனியன், பயனை எதிர்பார்க்காமல், முருகனுக்கு உதவி செய்தான். முனியனை வெறுத்துவந்த செயலுக்கு முருகன் வருந்தினான். தன் இயல்பை மாற்றிக்கொண்டு, முனியனின் அறிவுரைகளை ஏற்றுச் செயல்பட்டான். அதனால் பேரிழப்பிலிருந்து மீண்டான். **கூடிவாழ்ந்தால் கோடிநன்மை** என்னும் உண்மையை உணர்ந்தான்.

**40. தமிழாக்கம் தருக.**

அ) A new language is a new life.
புதியதொரு மொழியை அறிவது, புது வாழ்வுக்கு வழியாகும்.

ஆ) Knowledge of languages is the doorway to wisdom.
பலமொழி அறிவு என்பது, அறிவு வளம்பெற வாயிலாகும்.

இ) The limits of my language are the limits of my world.
மொழிக் குறைபாடு என்பது, உலகை அறியத் தடையாகும்.

ஈ) If you want people to understand, you speak their language.
மக்கள் உன்னைப் புரிந்துகொள்ள விரும்பினால், நீ அவர்கள் மொழியில் பேசு.

www.Padasalai.Net


**41. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது. – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

இக்குறளில், **நிரல்நிறைஅணி** பயின்று வந்துள்ளது.

ஒரு செய்யுளில் முன்னர் கூறியவற்றோடு தொடர்புடைய செய்திகளைப் பின்னர்க் கூறும்போது, முன்னர்க் கூறிய வரிசையில், நிரலே நிறுத்தி, நேரே பொருள் கொள்ளுமாறு கூறுவது, 'நிரல்நிறைஅணி'யாகும்.

இக்குறளில், 'இல்வாழ்வு சிறக்க அன்பும் அறமும் இன்றியமையாதன; அவை 'இல்வாழ்வின் பண்பும் பயனுமாகும்' என்பது வலியுறுத்தப்பட்டது. இவ்வகையில், 'இல்வாழ்க்கைக்கு அன்பு, பண்பு என்றும் அறம், பயன் என்றும் இயையுமாறு கூறியுள்ளமையால், (முறை) நிரல்நிறைஅணி பயின்று வந்துள்ளது.

(அல்லது)

**உவமை அணிக்குச் சான்று தந்து விளக்குக.**

**இலக்கணம்** : உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைய, இடையில் உவம உருபைக் கொடுத்துக் கூறுவது, **உவமை அணி**யாகும்.

**சான்று** : "உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று"

**விளக்கம்** : 'குடங்கருள் பாம்போடு உடன்உறைதல்' **உவமானம்.** 'உடம்பாடு இலாதவர் வாழ்க்கை' **– உவமேயம்.** அற்று **– உவம உருபு.** எனவே, **உவமை அணி** ஆயிற்று.

**42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.**

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளிப்
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.

– பாரதிதாசன்

**முன்னுரை :**

பாரதியின் சிறப்பைப் போற்றும் இப்பாடலைப் பாடியவர் நாமக்கல் கவிஞர். இவரது இயற்பெயர் வெ. இராமலிங்கம் பிள்ளை. இவர் பிறந்து வாழ்ந்தது நாமக்கல். அதனால், 'நாமக்கல் கவிஞர்' எனப்பட்டார். இவர் பாரதியின் காலத்தில் வாழ்ந்தார். இவர், பாரதியாரின் சிறப்புக் குறித்துப் பாடியுள்ளதைக் காண்போம்.

**பாடலின் திரண்ட பொருள் :**

"தம்மைப் பெற்றெடுத்த தாயை ஒதுக்கி வாழும் பிள்ளைகளைப்போல், தாய்மொழியை ஒதுக்கி வைத்துப் பிறமொழியில் கல்வி கற்பதையும், பிறமொழி இலக்கியங்களைப் பாராட்டுவதையும் பெருமையாகக் கருதி, பிறமொழிக்குச் சிறப்புச் செய்த மக்களின் பிழையைச் சுட்டிக் காட்டித் திருத்த வீறுகொண்டெழுந்து வந்து, அன்புரை கூறித் தமிழ்மக்களை வருந்தித் திருந்தச் செய்தவர் பாரதி. அத்துடன் உலகிலுள்ள மொழிகளைக் கற்றுணர்ந்து, அவை தமிழ்மொழிக்கு இணை இல்லை என்பதனைத் தெளிவுபெறுமாறும், தமிழ்மொழியின் சுவை இனிமையைக் காணுமாறும் கூறியதோடு, அதற்காகக் கம்பனையும், (கம்பராமாயணத்தையும்) வள்ளுவனையும் (திருக்குறளையும்) குறித்து நினைவு ஊட்டித் தெளிவான அறிவைப் பெறும்வகையில், கண்களைத் திறக்கச் செய்தார் தெய்வக்கவி பாரதியார். இவ்வகையில் மக்களின் அறியாமை இருளைப் போக்கி அறிவுக்கண்ணைத் திறந்ததனால், பாரதியார் உறுதியாக ஒரு நல்லாசானும் ஆவார்" என்பது, பாடலின் திரண்ட கருத்து.

**தொடைநயம் :**

இப்பாடல் அடிகளின் முதல் சீர்களான 'பெ**ற்**றெடுத்த', 'ஊ**ற்**றெடுத்த','க**ற்**றுணர்ந்தே', 'தெ**ற்**றெனநம்' என்பனவற்றில், இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து, 'அடிஎதுகை'த் தொடை அமைந்துள்ளது.

www.Padasalai.Net



**43. ‘தாயன்பு’ அல்லது ‘மழை’ என்னும் தலைப்பில் புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.**

| தாயன்பு | மழை |
|---|---|
| தாய்தரும் அன்பி னைப்போல்<br>தந்திட யாரே உள்ளார்?<br>சேய்படும் பாட றிந்தே,<br>செய்திடும் சேவை என்னே!<br>பால்நினைந் தூட்டு வாளாம்;<br>பாசமே காட்டு வாளாம்!<br>அன்னையின் அரவ ணைப்பே,<br>அதற்கிலை விலைம திப்பே! | வான்முகில் வழங்கும் நீரை<br>வான்சிறப் பென்று சொன்னார்!<br>வானமும் பொய்த்து விட்டால்,<br>வாழ்வது கடின மாகும்!<br>மாமழை போற்றி னாரே,<br>மாக்கவி இளங்கோ தாமும்!<br>நீரது குன்றிப் போனால்,<br>நிலவுல கென்ன வாகும்? |

## பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3 × 6 = 18**

**44. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.**

**புதுப்பெயல் :**

மேகமானது தான் தங்கி இருந்த பெரிய மலையை வலமாகச் சுற்றிக்கொண்டு, விண்ணில் எழுந்தது. அதனைத் தொடர்ந்து உலகம் குளிர்ச்சி பெறுமாறு மழையைப் பொழிந்தது. அதனால் தாழ்வான பகுதிகளில், பெருவெள்ளம் புரண்டது. காற்றும் மழையும் தொடர்ந்ததால், பருவநிலை மாறியது.

**வாழ்வு மாற்றம் :**

புதுப்பெயலால் ஆயர் இனமக்கள் தங்கியிருந்த நிலப்பரப்பில் நீர் சூழ்ந்தது. தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த கோவலர், தம் ஆநிரைகளோடு மேடான நிலங்களைத் தேடினர். அவற்றைக் காப்பதற்கும், மேயவிடுவதற்கும் தாம் முன்னர் வாழ்ந்த நீர்ப்பகுதியிலிருந்து புலம்பெயர நேர்ந்தது.

**வாடைக்கால வாழ்வு :**

பெருமழை பெய்த வாடைக்காலத்தில், ஆயர்கள் சூடியிருந்த காந்தள்மலர் மாலைகள் கசங்கின. மலையையே குளிரால் நடுங்கச் செய்வது போன்ற குளிர் வாட்டியது. எனவே, பாதுகாப்பைத் தேடி ஆயர் பலர் ஒன்று சேர்ந்து கொள்ளி நெருப்பு கொண்டு கைகளுக்குச் சூடு ஏற்றினர். எனினும், அவர்களின் பற்கள் நடுங்கின.

விலங்கினங்கள் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கிக் கொண்டிருந்தன. பறவைகள் தங்கி இருந்த மரங்களிலிருந்து நிலத்தில் விழுந்தன. பசுக்களோ தம் கன்றுகளுக்குப் பாலூட்ட மறுத்தன. இவ்வகையில் நக்கீரர், தமது நெடுநல்வாடையில் மக்கள் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

(அல்லது)

**‘செய்ந்நன்றி அறிதலே அறம்’ என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.**

- ‘செய்ந்நன்றி’ மறத்தலாகாது என்பதைச் சான்றோர் வலியுறுத்துவர். இங்கு வள்ளுவர் கூறும் வாயுறை வாழ்த்தின் கருத்துவழி, ‘செய்ந்நன்றி அறிதலே அறம்’ என்பது குறித்துக் காண்போம்.
- உதவி ஏதும் செய்யாதிருந்தும், கைம்மாறு கருதாமல் தனக்கு ஒருவர் செய்த உதவிக்கு, மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது.
- உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும், அது செய்யப்பட்ட காலத்தை நோக்க, உலகத்தின் அளவைவிடவும் மிகப் பெரியதாகும்.
- ‘செய்வதனால் என்ன பயன் கிடைக்கும்?’ என்று ஆராயாமல், ஒருவர் நமக்குச் செய்த உதவியினை ஆராய்ந்தால், அதனால் விளையும் நன்மை, கடலைவிடவும் பெரிதாகும்.
- ஒருவர் செய்த உதவி தினைஅளவினதாக இருந்தபோதிலும், அதனால் விளையும் பயனைத் தெரிந்தவர்கள், அத்தினைஅளவைப் பனைஅளவினதாகக் கருதிப் போற்றுவர்.

www.Padasalai.Net



- நமக்கு ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று. ஆனால், அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிடுவது நல்லதாகும்.
- எந்த அறத்தை அழித்தவருக்கும் அதன் விளைவிலிருந்து தப்பிப் பிழைக்க வாய்ப்பு உண்டு. ஆனால், செய்த நன்றியை மறந்த மகனுக்கு, அதன் விளைவிலிருந்து தப்பிப் பிழைக்க (உய்ய) வாய்ப்பே கிடையாது. இவையே, 'வாயுறை வாழ்த்தா'கிய திருக்குறள், 'செய்ந்நன்றி அறிலே அறம்' என்பது குறித்துக் கூறும் செய்திகளாகும்

**45. குடும்பம் என்னும் பெரிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்ப படுகிறது – எவ்வாறு? விளக்குக.**

**குடும்பம் என்னும் அமைப்பு :**

குடும்பம் எனும் அமைப்பு, குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என விரிவு பெறுகிறது. குடும்பமே, மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. குடும்பம், திருமணம் இரண்டும் இணைந்தே செயல்படுகின்றன. சங்க இலக்கியத்தில் இல், மனை, குரம்பை, முன்றில், குடில் போன்ற சொற்கள், குடும்பங்களின் வாழ்விடங்களைச் சுட்டுகின்றன. மனைவியின் இல்லம், 'தம்மனை' என்றும், கணவனின் இல்லம் 'நும்மனை' என்றும் பிரித்தே காணப்படுகின்றன.

**தாய், தந்தைவழிக் குடும்பம் :**

சங்க காலத்தில் கண சமூகத்திற்குத் தாயே தலைமை தாங்குகிறாள். தாய் வழியாகவே குலத்தொடர்ச்சி வளர்கிறது. சேரநாட்டு 'மருமக்கள் தாயமுறை' சிறந்த சான்றாகும். 'சிறுவர் தாயே; முதியோள் சிறுவன்' 'இவளது மகன்' முதலான தொடர்கள், தாய்வழிச் சமூக நிலையைக் காட்டுகிறது. சங்க காலத்திலேயே ஆண்மையச் சமூகமுறையும் காணப்படுகிறது. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" எனும் குறுந்தொகைப் பாடலால், தந்தைவழிக் குடும்ப முறையைக் காணலாம்.

**தனி, கூட்டுக் குடும்பங்கள் :**

தாய், தந்தை, குழந்தை என மூவருள்ள தனிக்குடும்பம், விரிவு பெற்றுக் கணவன், மனைவி, மகன், கணவனின் பெற்றோர் சேர்ந்து வாழ்ந்த குடும்ப முறையைப் புறநானூற்றுப் பாடலால் அறியலாம். சங்க காலத்தில் இல்லற வாழ்வின் இறுதியில் பெருமைமிகு மக்களுடன் நிறைந்து, சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே, இல்வாழ்வின் பயனாகும். குடும்பம் என்ற அமைப்பு, தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் என விரிந்தது. தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டு, பண்பாட்டின் அடையாளமாக மனித சமூகம் கட்டமைக்கப்படுகிறது.

(அல்லது)

**புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரிய மேலாளருக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

ஊர்ப் பொதுமக்கள்,<br>
2, கம்பர் தெரு,<br>
கடலூர் – 1.

பெறுநர்

மேலாளர்,<br>
மின்வாரிய அலுவலகம்,<br>
கடலூர் – 1.

ஐயா,

பொருள் : மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோருதல் – குறித்து.

வணக்கம். எங்கள் பகுதியில் ஏறத்தாழ 300 குடியிருப்புகள் உள்ளன. வார்தா புயல், எங்கள் குடியிருப்புகளையே புரட்டிப் போட்டுள்ளது. வாழ்நாளில் காணமுடியாத சீரழிவைக் கண்டது. கடல் பக்கத்தில் இருந்தாலும், கவலையில்லாமல் செம்மாந்து இருந்தோம். சூறாவளியாய்ப் புறப்பட்ட வார்தா புயல், சாலைகளைச் சீரழித்தது; வீடுகளை மூழ்கடித்தது; வீட்டுப் பொருட்களையெல்லாம் காட்டாற்று வெள்ளமென அடித்துச் சென்றது. மரங்களும், மின்கம்பங்களும் சாய்ந்தன. மனிதர்களும், செடிகொடிகளும், விலங்குகளும் தப்பவில்லை.

www.Padasalai.Net



மின்விளக்கு வசதியில்லாததால், அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. வயதானவர், குழந்தைகள், பள்ளி மாணவர்கள் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, மிக விரைவில் போர்க்கால நடவடிக்கையாக, அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்து தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

இடம் : 2, கம்பர் தெரு, கடலூர் – 1. ஊர்ப் பொதுமக்கள் சார்பாக,

நாள் : 10.08.2018 க. சரவணன்

**46. 'கோடைமழை' கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.**

**பேரனுக்குப் பாதுகாவலர் :**

நாலுநாள் காய்ச்சலில் கட்டியவள் கண்மூடினாள். அவள் போனபின் வாழப் பிடிக்கவில்லை என, விஷத்தைச் சாப்பிட்டு, அரைநாள் கழித்து அவனும் போய்ச் சேர்ந்துவிட்டான். இருவருக்கும் பிறந்த குழந்தையைத்தான் பெரியவர் வளர்த்து வருகிறார். தன் மனைவி இறந்தபின்பு தன் மகனை ஒற்றை ஆளாய் வளர்த்து ஆளாக்கியவர். அவன் மறைவிற்குப்பின் அவனுடைய குழந்தையை வளர்க்க வேண்டிய கடமை தொற்றிக்கொண்டது. வயதான காலத்திலும் குழந்தையைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வருகிறார் ஆறுமுகம்.

**அழுகைக்கு அருள்சுரக்கும் மாந்தர்கள் :**

அரசு மருத்துவமனையில் விடிந்தும் விடியாததுமாய்க் கூட்டம் வரிசை கட்டிக்கொண்டு நின்றது. வரிசையின் அசைவு, ஆமை வேகத்தில் நகர்ந்தது. திடீரென அழுகைக்குரல் கேட்க... என்ன ஏது என்று அனைவரும் கவனமாய்ச் சுற்றுமுற்றும் பார்த்தனர். ஒற்றைக்குரல் அழுகை, பல்குரலாய் ஒலித்தது. சற்றே தொலைவில் கூட்டம். வரிசையிலிருந்தவர் பலரும் இடபயத்தை அடியோடு மறந்துபோய், நெஞ்சில் அருள்சுரக்க, அடித்துப் பிடித்துக்கொண்டு ஓடினர்.

**முதியவர் நலனில் இளையவர் :**

முதியவர் ஆறுமுகம், டாக்டரை நெருங்கிவிட்டார். மருந்து எழுதி வாங்கிக்கொண்டார். ஊசி போட்ட இளம் செவிலி, "உங்க கை இப்படி நடுங்குதே பெரியவரே...வீட்ல வேற யாரும் இல்லையா?" எனக் கேட்டது மனத்திற்கு ஆறுதலாய் இருந்தது அவருக்கு. வழக்கமாய் வாங்கும் மருந்துக்கடை நோக்கிப் பயணப்பட்டார். "வாங்கய்யா உட்காருங்க. புள்ளைக்கு உடம்பு சரியில்லையா? இப்படிக் கொடுங்க...." என்று, கைச்சுமையை வாங்கிக்கொண்டான் இளையவனான பாபு.

**தத்துப் பிள்ளையாய்த் தாத்தாவும் :**

மருந்துக்கடையில் இருந்த பாபு, தனக்குத் தெரிந்தவர்கள் குழந்தையை எடுத்து வளர்க்க ஆசைப்பட்டார். இதை முதியவரிடம் பலநாள் எடுத்துச் சொல்லியிருக்கிறான். செவிசாய்க்காத ஆறுமுகம், இப்பொழுது அவராகவே பாபுவிடம், "தெரிந்தவர்களை வரச்சொல். அம்மா பாசம் தெரியாமல் இருக்க, இது மட்டும் என்ன பாவம் செய்தது? அவங்கள உடனே வரச் சொல்லிடு. ஆக வேண்டியதைப் பார்க்கலாம்" என்று, மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு சொல்லிவிட்டார். மறுநாள் வந்தவர்கள், "ஐயா, ரொம்ப பெரிய மனசோட எங்க வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கொடுத்திருக்கீங்க. இன்னுமோர் உதவி கேட்கிறோம். குழந்தையைப் பிரிந்து சிரமப்படாமல் எங்களோடு வந்திடுங்கய்யா. எங்க மூணு பேருக்குமே ஒரு பெரிய துணையா, பலமா இருக்கும். நாம ஒருத்தருக்கு ஒருத்தர் முடிந்த அளவில் உதவியாய் இருப்போம். சரின்னு சொல்லுங்கய்யா" என்று கேட்டுத் தங்கள் பண்பின் மேன்மையை வெளிப்படுத்தினர்.

**'பேறுபெற்றோர்' – பெற்றோர் :**

குழந்தைகள், பெற்றோரால் கொண்டாடப்படுகிறார்கள். பெற்றோர் என்ற சொல்லே, 'பேறுபெற்றோர்' என்ற பொருள் கொண்டதுதான் எனலாம். தாய் தந்தை இல்லாத ஏதிலிக் குழந்தைகளின் நிலை, மிகக் கொடியதாகும். அக்குழந்தைகளை ஏற்று வளர்க்கும் மனிதப்பண்பு, வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. பிள்ளைகள் இல்லாத முதியோர்களும், இத்தகைய ஏதிலி நிலையில் தவிப்பவர்கள்தாம். அவர்களையும் ஏற்று அரவணைப்பவர்கள், மனிதத்தை மேம்படுத்துபவர்களே!

(அல்லது)

www.Padasalai.Net



**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை 'முதல்கல்' கதை எவ்வாறு வலியுறுத்துகிறது?**

**ஊருக்கு வந்த சோதனை :**

காவிரிக் கரையின் கடைமடையில் அமைந்ததுதான் அந்தக் கிராமம். எந்த மழையின் உதவியில் 'சம்பா'ப் பயிர்களை நட்டார்களோ, அதே மழையின் 'அதிகப்படியான அன்பினால்' இப்போது அப்பயிர்களெல்லாம் நீரில் தத்தளிக்கின்றன. இது போதாதென்று வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஒன்று, அச்சுறுத்தக் காத்திருக்கிறது. கடன்மேல் கடன் வாங்கி நட்ட பயிர்கள் தத்தளிக்க, மேலும் மழை என்றால், பயிர்கள் நீரில் மூழ்கி அழுகும் நிலை உருவாகும்.

**சோதனையைச் சாதனையாக்க நினைத்த மருதன் :**

மழை பெய்வது இயற்கை. மழைநீரை வடித்தெடுத்துத் தற்காத்துக் கொள்வது மனிதனின் கடமை. வெள்ளைக் காரன் கட்டிய வடிமதகு, எவ்வளவு நீர் வந்தாலும் விழுங்கி அமைதியாய் வடிவாய்க்கால் வழியாக வெளியேற்றும். வடிவாய்க்கால் முழுக்கக் காட்டாமணக்குச் செடிகள் முளைத்து, நீரை வடியவிடாமல் தடுத்து நிற்கின்றன. இதனால் மழைநீர் வயல்வெளிகளில் தேங்கிப் பயிர்களைப் பாழ்படுத்துகிறது. இந்தச் சோதனையிலிருந்து விடுபட, மருதன் செடிகளை அகற்றிச் சாதனை படைக்க விரும்பினான்.

**தனிமரம் தோப்பாகாது :**

பெருவெள்ளத்தை வடியச் செய்யத் தனிமனிதனால் முடியுமா? எனவே, மருதன் ஊர்மக்களின் உதவியை நாடினான். உதவிக்கரம் நீட்ட எவரும் முன்வரவில்லை. தானே தனித்து நின்று, பணி செய்யத் துணிந்தான்.

**சமூகப் பற்றின்மை :**

பயிர்களை வாழவைப்பது மழை. அது பெருமழையாகி வெள்ளமாய்த் திரண்டு தேங்குகையில், தான் உயிர்ப்பித்த பயிர்களையே இல்லாமல் ஆக்கிவிடுகிறது. அது மழையின் குற்றமன்று; வெள்ளம் தேங்காமல் வடிய வழிவகை செய்யாதது மனிதனின் குற்றம். அந்தப் பழியிலிருந்து விடுபட, மருதன் சொன்ன கருத்தை எவரும் ஏற்கவில்லை. இது, சமூகப் பற்றின்மையைக் காட்டுகிறது.

**ஊர் கூடித் தேரிழுத்தல் :**

தேரை வடம்பிடித்து இழுக்கப் பல கைகள் தேவைப்படும். அதுபோன்று மூன்றுமைல் தொலைவு வளைந்து செல்லும் வாய்க்காலில் மண்டியுள்ள காட்டாமணக்குச் செடிகளைப் பிடுங்கி எறிந்து, நீரை வடியச் செய்ய வேண்டும். இது ஊர்கூடிச் செய்ய வேண்டிய பணியல்லவா? மருதனின் விடாமுயற்சியும் சமூகப்பற்றும் ஊரைக் கூட்டிப் பணிசெய்யத் தூண்டின. இப்பொழுது ஊர் ஒன்றுபட்டுள்ளது. பயிர்ப் பாதுகாப்பின்மூலம் ஊர், மகிழ்ச்சியின் வாழ்விற்குத் திரும்பியுள்ளது.

## பகுதி – V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1 × 6 = 6**

**அ) "துன்பு உளதுஎனின்...." எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிமாறாமல் எழுதுக.**

'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம்உளது? அதுஅன்றிப்
பின்பு உளது;இடை மன்னும்
பிரிவுஉளது எனஉன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவுஉளது எனஉன்னா
அன்பு உள,இனி, நாம்ஓர்
ஐவர்கள்உளர் ஆனோம்.

**ஆ) "செயல்" என முடியும் குறட்பாவை எழுதுக.**

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 2

## பகுதி – I பொதுத்தமிழ்

நேரம் : 15 நிமிடங்கள் + 3 மணி | மதிப்பெண் : 90

### பகுதி – I

**குறிப்பு** : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14 × 1 = 14**

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது ______.

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள்

இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

**விடை** : இ) மழைத்துளிகள்

2. சுரதா நடத்திய கவிதை இதழ் ______.

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

**விடை** : ஆ) காவியம்

3. ஏழாண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்.... தொடர்களில் வெளிப்படும் செய்திகள் ______.

1. மாதவி ஏழு ஆண்டுகள்வரை நாட்டியம் பயின்றாள்.

2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி; 2 தவறு. ஆ) 1 தவறு; 2 சரி. இ) இரண்டும் தவறு. ஈ) இரண்டும் சரி

**விடை** : ஈ) இரண்டும் சரி

4. "மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்குதற்கு" – கவிஞர் குறிப்பிடும் பழமைநலம் ______.

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

**விடை** : ஈ) க, ங இரண்டும் சரி

5. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ______.

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும், குடும்பமும்

இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும், சுங்கமும்

**விடை** : ஆ) திருமணமும், குடும்பமும்

6. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

அ) தனித்தமிழ்த் தந்தை – 1. மு. வரதராசனார்

ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் – 2. மயிலை சீனி. வேங்கடசாமி

இ) தமிழ்த்தென்றல் – 3. திரு. வி. க.

ஈ) மொழிஞாயிறு – 4. தேவநேயப் பாவாணர்

**விடை** : அ) தனித்தமிழ்த் தந்தை – 1. மு. வரதராசனார்

www.Padasalai.Net



7. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னோர் இல்லாத தமிழ்!" பயின்று வந்துள்ள தொடைநயம் ______.

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

**விடை :** இ) அடிஎதுகை, சீர்மோனை

8. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே ______.

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

**விடை :** ஆ) உயர்திணை, அஃறிணை

9. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

அ) பாலை பாடினான் – தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்.

ஆ) பாலைப் பாடினான் – தேரினைப் பார்த்தான்.

இ) தேரை பார்த்தான் – பாலினைப் பாடினான்.

ஈ) தேரைப் பார்த்தான் – பாலைத்திணை பாடினான்.

அ) 4, 1, 3, 2 ஆ) 2, 3, 1, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 1, 3

**விடை :** இ) 4, 3, 1, 2

10. மெய்ப்படிமத்துக்கு உரிய பாடலைத் தேர்வு செய்க.

அ) நெருஞ்சி கட்கின் புதுமலர் முட்பயத் தாங்கு....

ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது....

இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்.....

ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப....

**விடை :** இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்.....

11. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர் ______.

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர்

இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

**விடை :** ஆ) மயிலைநாதர்

12. திண்ணியர் என்பதன் பொருள் ______.

அ) அறிவுடையார் ஆ) மனஉறுதியுடையவர்

இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

**விடை :** ஆ) மனஉறுதியுடையவர்

13. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க.

அ) கர்ணன் தோற்றான் போ. ஆ) வயதில் சிறியவள் ஆனாலும் தலைவி!

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு. ஈ) இந்தா போறான் தருமன்.

**விடை :** ஆ) வயதில் சிறியவள் ஆனாலும் தலைவி!

14. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களில் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள் ______.

அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

**விடை :** ஈ) உள்ளுறை உவமை

www.Padasalai.Net



## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 2 = 6**

**15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.**

- பெய்த மழையால், நகர மாசுகள் அகற்றப்பட்டன.
- மழைக்காலமாயினும், திடீரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால், புதுப்பொலிவு பெறுகிறது.
- இதனை, 'நகரம், பட்டை தீட்டிய வெள்ளை வைரமாய்' விளங்குகிறது என்கிறார் கவிஞர்.

**16. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பது யாது?**

- செல்வம் குறையாமல் இருப்பதற்கான வழி, பிறருடைய கைப்பொருளை விரும்பாது இருத்தலாகும் என, வள்ளுவம் உரைக்கிறது.

**17. கலிவிழா, ஒலிவிழா – விளக்கம் தருக.**

- விழாக்கள் மலிந்த ஊராக விளங்கிய திருமயிலாப்பூரில் நடைபெற்ற எழுச்சி தரும் விழாவைக் 'கலிவிழா' எனவும், ஆரவாரம் நிறைந்த விழாவை 'ஒலிவிழா' எனவும் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

**18. அறிவுடை வேந்தனின் நெறி குறித்துப் பிசிராந்தையார் கூறுவன யாவை?**

- அறிவுடை வேந்தன், மக்களிடம் வரி திரட்டும் நெறிமுறை அறிந்து வரியைத் திரட்டினால், நாடு பெருஞ் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படைவதோடு, அவன் எண்ணமும் நிறைவேறும் எனப் பிசிராந்தையார் கூறுகிறார்.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

**19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

- அழகியலை உருவாக்குவதற்குத் தொல்காப்பியம் தளம் அமைத்துத் தருகிறது.
- எழுத்து, சொல், தொடர், பொருள் என, ஓர் உள்ளமைப்பைத் தொல்காப்பியம் கொண்டுள்ளது.

**20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.**

- தற்காலிகத் தங்குமிடம் அல்லது தற்காலிகப் புகலிடம் 'புக்கில்' எனப்படும்.
- திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' எனப்படும்.

**21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' பற்றிக் குறிப்பு வரைக.**

- கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முதல்நூல், 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்'.
- தமிழ்ச்சமுதாயம் தனது பழைய அழகுக் கலைச் செல்வங்களை மறந்து, தன் பெருமை அறியாச் சமூகமாக இருந்த நிலைகண்டு, அறவே மறந்துவிடாது இருக்கவேண்டும் என்பதை நினைவூட்டும் வகையில், மயிலை சீனி. வேங்கடசாமி இந்நூலை எழுதினார்.

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

**22. விடியல், வனப்பு இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

- சூரியன் தன் செங்கதிர்களைப் பரப்பும் **விடியலில்,** கீழ்வானத்தில் ஒருவகை **வனப்பைக்** காணலாம்.

**23. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன யாவை?**

- மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் மொழியின் அடிப்படைப் பண்புகளான திணை, பால், எண், இடம் ஆகியவை உதவுகின்றன.

www.Padasalai.Net



**24. ஏதேனும் ஒன்றுக்குப் புணர்ச்சிவிதி தருக.**

அ) அருங்கானம் (அருமை+கானம்):"ஈறுபோதல்"–(அரு + கானம்); "இனம்மிகல்" – (அருங்கானம்)

ஆ) தலைக்கோல் (தலை+கோல்): "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" – (தலைக்கோல்)

**25. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**அ) சாய்ப்பான் – சாய் + ப் + ப் + ஆன்**

**சாய்** – பகுதி; **ப்** – சந்தி; **ப்** – எதிர்கால இடைநிலை;

**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

**ஆ) வைத்து – வை + த் + த் + உ**

**வை** – பகுதி; **த்** – சந்தி; **த்** – இறந்தகால இடைநிலை; **உ** – வினையெச்ச விகுதி.

**26. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

எங்கள் ஊரில் நூலகக் **கட்டடம்** கட்ட, **அரசு** நிதி ஒதுக்கியது.

ஆ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

**வானம்** பார்த்த பூமியில், **பயறு** வகைகள் பயிரிடப்படுகின்றன.

**27. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

**திண்மை, தின்மை** : உடல் **திண்மை**யுடையார், எளியவர்க்குத் **தின்மை** செய்தல் கூடாது.

**புள், புல்** : **புல்** தரையில் **புள்** இரை தேடியது.

**28. பாவிகம் – விளக்குக.**

- 'பாவிகம்' என்பது, காப்பியப் பண்பு எனத் தண்டியலங்கார நூற்பா கூறுகிறது.
- 'பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுமே' எனக் கம்பராமாயணம் சுட்டுவதுபோல, காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே 'பாவிகம்' என்பர்.

**29. பேச்சுவழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.**

- பேச்சுவழக்கில் மரபுத்தொடர்களாகத் தொன்மங்கள் வெளிப்படுகின்றன.
- இதோ போகிறான் அரிச்சந்திரன்; இவனிடம் கர்ணன் தோற்றுவிடுவான்.

**30. விடைக்கேற்ற வினா அமைக்க.**

அ) 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் எப்போது, எங்கு அமைக்கப்பட்டது?

ஆ) சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள், போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.

சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் எவற்றிற்கு உதவுகின்றன?

## பகுதி – III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

**31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

- வாடைக் காலத்தில் பெய்த பெருமழையால் வெள்ளம் பெருகியது. தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த கோவலர், பெருகிய வெள்ளத்தை வெறுத்துத் தம் நிரைகளோடு மேடான நிலங்களில் மேயவிட்டனர்.
- அவர்கள் சூடியிருந்த காந்தள்மலர் மாலைகள் கசங்கின. மலையையே நடுங்கச் செய்வதுபோன்ற குளிரில் பாதுகாப்பைத் தேடிய ஆயர் பலர் சேர்ந்து, கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். எனினும், அவர்களின் பற்கள் வாடைக் குளிரில் நடுங்கின.

www.Padasalai.Net



**32. "வாயிலோயே" எனத் 'தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் 'பாடாண் திணை'க்கு உரியது என்பதை நிறுவுக.**

- புறப்பொருளில் ஒருவனுடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது, 'பாடாண் திணை' என்னும் திணையுள் அடங்கும்.
- "வாயிலோயே" எனத் தொடங்கும் ஔவையாரின் பாடலுள், அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் வள்ளலின் புகழ், கொடை முதலான பண்புகள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.
- எனவே, இப்பாடல், புறத்திணைகளுள் 'பாடாண் திணை'க்கு உரியதாகும்.

**33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**

- நாட்டிய அரங்கு என்பது, நிகழ்வை அனைவரும் கண்டுகளிக்கத்தக்க முறையில் அமைய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஆடும் அரங்கு, ஆட்டத்தைக் கண்டு சுவைப்பவர் அமரும் அவையைவிட உயரமாக, எங்கிருந்து கண்டாலும் அரங்கு நிகழ்ச்சி காணத்தக்க வகையில் திட்டமிடப்பட வேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்துகிறது.
- அரங்கின் நீள, அகலம், உயரம் என்பவை எவ்வாறு அமைவது சிறப்பு என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. நிகழ்வு நடைபெறும்முன், அந்நிகழ்வை அனைவரும் காணத்தக்க வகையில் காட்சிப் படுத்தவே அரங்கு அமைக்கப்படுகிறது. இத்தகைய எண்ணற்ற காரணங்களை இளங்கோவடிகள் தெளிவுபடக் காட்சிப்படுத்தியுள்ளமையை அறியமுடிகிறது.

**34. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.**

- தீமையான விளைவுகள், சினத்தினாலேயே ஏற்படுகின்றன. எனவே, எவரிடத்திலும் சினம் கொள்வதை மறந்துவிட வேண்டும். முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொன்று அழிக்கின்ற சினத்தைவிடவும் பகை என்பது வேறு இல்லை.
- ஒருவன் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும். அப்படிக் காக்காவிட்டால், கொண்ட சினமே அவனை அழித்துவிடும்.
- சினம் தன்னைச் சேர்ந்தவனை அழிப்பதோடு, அவனுக்குப் பாதுகாப்பாக விளங்கும் சுற்றமாகிய தெப்பத்தையும் சுட்டு அழிக்கும் என, வள்ளுவர் கூறியுள்ளார்.

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

**35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.**

- ஒலி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் மொழி பிறக்கிறது. கவிதையும் இசையோடு உருவாகிறது. ஓசையும் பொருளும் கலைவடிவம் பெறுகிறது. சங்கப்பாடல்களில்,

  'கடந்தடு தானை மூவிருங் கூடி
  உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே" (புறம். 110)

- என்ற வரிகளில், க, த, ட, ற என்ற வல்லின மெய்களில் உணர்ச்சியின் ஒலிக்கோலங் காணலாம்.

  படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
  கடாஅ யானைக் கலிமான் பேக. (புறம். 145)
  புணரின் புணராது பொருளே........ நற். 16

- இப்பாடல் வரிகளில், ஒலிகளும் சொற்களும் மீண்டும் மீண்டும் வந்து, சொல் விளையாட்டு நிகழ்த்துவதைக் காணலாம். இவ்வாறு, சங்கப் பாடல்களில் குறிப்பிடத்தக்க பண்பாக ஒலிக்கோலம் அமைந்துள்ளதைக் காணலாம்.

www.Padasalai.Net



**36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் – விளக்கம் தருக.**

- கணவன், மனைவி, மகன் ஆகிய மூவரும் வாழ்கின்ற தனிக்குடும்பம் வளர்ச்சி அடைந்தபோது, தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்பமே, மேலும் வளர்ந்து, கூட்டுக் குடும்பமாக அமைந்தது.
- கணவனின் சகோதர சகோதரிகள், தாய், தந்தையர் இணைந்த குடும்பம் வளர்ந்து, இன்றைய கூட்டுக் குடும்பமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வகையில் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியாக இன்றைய கூட்டுக்குடும்பம் விளங்குகிறது.

**37. திரைப்படத்தில் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**

- திரைப்படத்தில் காட்சி சிறப்பாக அமைந்தால், வசனம் இரண்டாம் பட்சமாகிவிடும். திரைப்படத்தில் வசனம் இன்றி, காட்சிகளை அடுத்தடுத்து வைத்துக் கதையை நகர்த்துவர். திரைப்படத்தில் நடிப்பவரை முப்பரிமாணத்தில் காட்டும் காட்சிகள் இடம்பெறும்.
- ஒருவன் ஓடிவருவதாகக் காட்டிவிட்டு, 'என்னாச்சி' என்று கேட்டால் போதும். இது காட்சி மொழியாகி விடும். ஒருவன் உணர்ச்சியைக் காட்ட முகத்தைக் காட்சியாகக் காட்டினால்போதும். கட்டுப்படுத்த முடியாத கோபத்தைக் காட்ட நடிகன் கத்த வேண்டியது இல்லை; கண்ணாடிக் குடுவையை இறுகப்பிடித்து உடைப்பதைக் காட்டினால்போதும். இப்படியாகக் கதை நகர்வுக்குத் திரைப்படக் காட்சி உதவுகிறது.

**38. மயிலை சீனி. வேங்கடசாமியின் படைப்புகள் குறித்து எழுதுக.**

- தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நடத்திய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில், ச. த. சற்குணர், 'கிறித்தவமும் தமிழும்' என்ற நூலை எழுதினார். 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' ஆகிய நூல்களையும் இயற்றினார்.
- தமிழின் தொல்இலக்கியம், கலைமீது கொண்ட ஈடுபாடு காரணமாகத் 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்னும் நூலை எழுதினார். கல்வெட்டு ஆய்வில் பயிற்சி பெற்றுப் பல்வேறு நூல்களைப் படைத்தார். மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் போன்ற வரலாற்று ஆய்வு நூல்களையும் வெளியிட்டார்.

## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 4 = 12**

**39. ஏகதேச உருவக அணியைச் சான்று தந்து விளக்குக.**

**இலக்கணம் :** செய்யுளில் கூற எடுத்துக்கொண்ட பொருள்களில் ஒன்றைமட்டும் உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் கூறுவது, ஏகதேசஉருவகஅணியாகும்.

**சான்று :** சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**விளக்கம் :** தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் சினமாகிய நெருப்பு, ஒருவனுக்குப் பாதுகாப்பாக அமையும் சுற்றமாகிய தெப்பத்தையும் சுட்டு அழித்துவிடும். இக்குறளில் சுற்றத்தவரைப் புணையாக உருவகம் செய்தவர், சினத்தை நெருப்பாக உருவகம் செய்யாமையால், ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது.

(அல்லது)

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு. – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

இக்குறளில் **சொற்பொருள் பின்வரு நிலையணி** அமைந்துள்ளது.

செய்யுளில் முன்னர் வந்த சொல் பின்னரும் அதே பொருளில் பலமுறை வருவது **சொற்பொருள் பின்வரு நிலையணி** ஆகும்.

இச்செய்யுளில், '**பொருள்**' என்னும் சொல், அதே பொருளில் பலமுறை இடம்பெற்றுள்ளது. எனவே, சொற்பொருள் பின்வரு நிலையணி அமைந்துள்ளது.

www.Padasalai.Net



**40. 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுது.**

விவசாயி கந்தப்பனுக்கு நிலங்கள் இருந்தன. இரண்டு பெண்களுக்குப்பின், ஆண்குழந்தை பிறந்தது. 'அழகன்' எனப் பெயரிட்டு வளர்த்தார்; பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். படிக்கும்போது ஆசிரியர் கண்டித்ததால் பள்ளி செல்ல மறுத்தான். பெற்றோர், அவன் போக்கில் விட்டுவிட்டனர். அவன் தமக்கையர் இருவரும், திருமணமாகி வெளியூர் சென்றுவிட்டனர்; கந்தப்பனும் நோயுற்றார். அழகன் விவசாயம் செய்யத் தெரியாமல் துன்புற்றான். அவனைப் பார்த்தோர், **'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?** எனப் பேசிக்கொண்டனர்.

**41. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்களை எழுதுக.**

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்!
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்!
இரவில் விண்மீன் காசினைச் – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்.

**– நா. காமராசன்**

**ஆசிரியர் குறிப்பு :**

இப்பாடலைப் பாடிய கவிஞர் நா. காமராசன், எளிய சொற்களைக் கொண்டு, அரிய செய்திகளை விளக்கும் திறன் உடையவர். இவர்தம் கவிதைகள், புதுமை கொஞ்சும் சிறப்புடையவை. தமிழில் புதுக்கவிதை என்னும் வெள்ளம் பெருகியதற்குக் காரணமானவர்களுள் இவரும் ஒருவர்.

**திரண்டபொருள் :**

"பசுமையான பூமியில் சருகாகக் காட்சிதரும் நிலப்பகுதியான பாலைவனத்தை, முத்துத் தோன்றும் கடலாக மாற்றிக் காட்டுவேன். கொடுமையாக வீசும் புயலைச் சிறுசிறு துண்டுகளாக உடைத்துச் சிதைத்து, புதிதாக வீசும் பலகோடி தென்றல் காற்றாக மாற்றிக் காட்டுவேன். இரவு வானத்தில் ஒளிவீசும் விண்மீன்களாகிய காசுகளைக் கொடுத்து, யாசிக்கும் நிலையில் உள்ளவர்களோடு பேசுவேன். இரவுவேளையில் மறைந்து கொள்ளும் சூரியனைக் கொண்டுவந்து, ஏழைமக்களின் அடுப்புகளில் விறகாக எரிக்க வீசுவேன்" என்பது, பாடலின் திரண்ட கருத்தாகும்.

இச்செய்யுளில், அடிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இறுதி இரண்டு அடிகளில் முதல் சீர்களின் முதலெழுத்து ஒன்றி **அடிமோனையும்,** இரண்டாம் எழுத்து ஒன்றி **அடிஎதுகையும்** அமைந்துள்ளன. ஓரளவுக்குச் சந்தநயம் பொருந்தியதாகவும் உள்ளது.

சொற்களை எடுத்தாண்டுள்ள முறை, நயம் தருவதாக உள்ளது. எதையும் சாதிக்க முயற்சி செய்ய வேண்டும் என்பதைக் கற்பவர் மனத்தில் இப்பாடல் உருவாக்கத் துணைபுரியும்.

**42. கீழ்க்காணும் பகுதியைப் படித்துப் பார்த்துப் பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப்படுத்துக.**

**சர்க்கார்** கொடுக்கும் சம்பளம் **ஜீவனத்துக்குப்** போதுமா? அதற்குள் **ஜீவனம்** நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் மாயை; உள்ளூர நிற்கும் **ஆத்மா** மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்தப் **பிரபஞ்சத்தை** ஆட்டிவைக்கும் சக்தியின் ஓர் **அம்சம்** என்று திடமாக நம்பி இருந்தார். ஏனென்றால், அவரது **ஆத்ம விசாரத்தைச்** சோதனை போட்டுப் பார்க்க, இதுவரை தெய்வத்துக்கோ மனுசனுக்கோ **அவகாசம்** கிடைத்ததில்லை. **மனுஷ வர்க்கம்** முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை **ஸ்புடம்** போட்டுப் பார்ப்பதுபோலத் தவறுக்குமேல் தவறு செய்து கொண்டிருந்தது.

சர்க்கார் – அரசினர், ஜீவனம் – வாழ்க்கை, ஆத்மா – உயிர், பிரபஞ்சம் – உலகம், விசாரம் – கவலை, அம்சம் – கூறு, அவகாசம் – சமயம், மனுஷவர்க்கம் – மனிதச்சமூகம், ஸ்புடம் – சோதனை.

www.Padasalai.Net


**43. வெண்ணிலா (அல்லது) வானவில் என்ற தலைப்பில் 8 வரிகளுக்கு மிகாமல் மரபுக்கவிதை / புதுக்கவிதை எழுதுக.**

| வெண்ணிலா | வானவில் |
|---|---|
| வட்ட மான வெண்ணிலா | காலையில் மேலை வானில் |
| வானில் காணும் வெண்ணிலா! | காண்பது வான வில்லே! |
| தட்டுப் போன்ற வெண்ணிலா | மாலையில் கீழை வானில், |
| தாவிச் செல்லும் வெண்ணிலா! | மாண்புறு வான வில்லே! |
| பாதி மாதம் தேய்கிறாய் | வான்முகில் தவழும் வேளை, |
| பாதி மாதம் வளர்கிறாய்! | வானவில் வண்ணம் ஏழே! |
| சோதி காட்ட வருகிறாய் | ‘விப்கியார்’ என்று சொன்னால், |
| சொல்லி நாங்கள் மகிழுவோம்! | விளங்கிடும் வண்ணங் கள்தாம்! |

## பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3 × 6 = 18**

**44. சிறுபாணாற்றுப்படையால் பெறப்படும் செய்திகளைக் தருக.**

புலவர் நல்லூர் நத்தத்தனார், பரிசில் பெற்ற சிறுபாணன் ஒருவன் தன் எதிர்ப்பட்ட மற்றொரு பாணனை ஒய்மா நாட்டை ஆண்டவனும், கொடை வள்ளலுமாகிய நல்லியக் கோடனிடம் ஆற்றுப்படுத்துவதாகப் பாடிய நூல் சிறுபாணாற்றுப்படை. இதில் தலைவன் நல்லியக்கோடனின் பெருமையைக் கூறும்முன், கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த வள்ளல்கள் எழுவரைப் பற்றியும், அவர்கள் பெயர் நிலைக்கக் காரணமான கொடைகள் குறித்தும் கூறியுள்ளார்.

ஆவியர் குடியில் தோன்றிக் கொல்லி என்னும் பெரிய மலைக்குத் தலைவனாகப் பெருவலிமையோடு விளங்கியவன் ஓரி. தன் நாட்டின் வளமலையில் வாழ்ந்த மயில், பருவமழை பெய்தபோது குளிரால் நடுங்குவதாக எண்ணி, தன் ஆடையை அதன்மேல் போர்த்தித் தன் அருள் உள்ளத்தை வெளிப்படுத்தினான். வெள்ளருவிகள் பெருகிய பறம்பு மலையை ஆண்ட பாரி, பூத்துக் குலுங்கிய முல்லைக்கொடி ஒன்று நெடுவழியில் படர்வதற்குக் கொழுகொம்பின்றித் தவித்ததைக் கண்டு, தான் ஊர்ந்துவந்த தேரை அதற்குக் கொடையாக வழங்கினான்.

வீரக்கழலணிந்து நெடுவேலைக் கையில் ஏந்தி மலையமான் நாட்டை ஆண்ட திருமுடிக்காரி என்பான், இரவலர்க்கு இல்லை என்னாது இன்மொழி கூறி, வேண்டுவன வழங்கி வாழ்ந்தான். பொதியமலையைத் தன் ஆளிடமாகக் கொண்ட ஆய் என்பான், ஒளிமிக்க நீலக்கல்லையும், நாகம் கொடுத்த ஆடையையும் ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுக்கு ஆர்வமுடன் கொடுத்துப் பெருமை பெற்றான்.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதிகன், பெரிய மலைச்சரிவில் விளைந்த அமிழ்து விளை நெல்லிக்கனி கொண்டு, அதன் சிறப்புணர்ந்து தான் உண்ணாது ஔவை நெடிது வாழ வழங்கிப் பெயர் பெற்றான். நனிமலை நாடாண்ட நள்ளி என்பான், தன் பொருட்செல்வத்தைத் தான்மட்டுமே அனுபவிக்க வேண்டும் என எண்ணாது, தன் நண்பர்க்கெல்லாம் வேண்டும்போது, காலம் தாழ்த்தாது பெய்யும் மழைபோல் வழங்கி வாழ்ந்தான்.

கொல்லிமலையை ஆண்டவனும், காரி என்னும் வலிமைமிக்க வீரனை எதிர்த்துப் போரிட்டவனுமாகிய ஓரி என்பான், தன் மலை நாட்டைக் கூத்தர்க்குப் பரிசாக வழங்கியவன். இந்த எழுவரும் இழுத்துச் சென்ற ஈகை என்னும் பாரத்தைமட்டுமே இழுத்துச்செல்லும் நல்லிக்கோடன் தான் ஒருவனாக வலிமை உடையவனாகத் திகழ்ந்தான் என, நல்லூர் நத்தத்தனார், தம் சிறுபாணாற்றுப்படையில் விளக்கியுள்ளார்.

(அல்லது)

www.Padasalai.Net



**தம்மீது பகை கொண்டவர் இழைத்த துன்பங்களை, 'இவர்கள் தாங்கள் இழைக்கும் கொடுமைகளுக்காக வாழும் காலம் முழுவதும் துன்புறுவார்களே' என இறைமகன் இரக்கப்பட்டாரே அன்றி, தம்மை விடுவித்துக்கொள்ள முயலவில்லை.**

கொடியவர்கள் ஒன்றுகூடிப் பேசிய இழிமொழிகள், கொடிய தீக்கொள்ளிபோல் அவர் இதயத்தில் அழுந்தின. எனினும், தம்மைத் துன்புறுத்துவோர்மீது வருத்தம் கொள்ளாமல், தாம் கருதிவந்த பணியை நிறைவேற்றவே காத்திருந்தார். இறைமகனைக் கொல்லவேண்டும் என்கிற எண்ணம் கொண்டோர், ஆளுநர் போந்தியு பிலாத்துமுன் கொண்டு நிறுத்தினர். வற்றிய கிணறு பெருங்கடலைத் தனக்குள் அடக்க முயல்வதுபோல், அவர்கள் தண்டனை பெற்றுத் தருவதில் உறுதியாக இருந்தார்கள்.

தண்டனையை நிறைவேற்ற இழுத்துச் சென்ற கொடியவர்கள், இறைமகன் உடுத்தியிருந்த வெள்ளாடையைக் களைந்து, செவ்வாடையால் போர்த்தினார்கள். துன்பம்தரும் கூர்மையான முள்செடி கொண்டு ஒரு முடியைச் செய்து, அவர் தலைமேல் அழுத்தி, இரத்தம் சிந்தச் செய்தார்கள். கொடுமனம் படைத்த முரடர்கள், இறைமகனின் கையிலிருந்த கோலினைப் பிடுங்கினார்கள். முள்முடி சூட்டப்பட்ட தலைமேல் வன்மையாக அடித்தார்கள்; இழித்தும் பழித்தும் பேசியதோடு, அவர் திருமுகத்தில் எச்சில் துப்பிக் கேலி செய்தார்கள்.

நகரில் திரண்டிருந்த மக்கள், "இக்கொடுமைகள் நிகழ்ந்த பிறகும், இவ்வுலகம் வெடித்துப் பிளக்கவில்லையே! வானம் இடிந்து விழவில்லையே! கடல்நீர் வற்றிப் போகவில்லையே! இவ்வுலகம் இன்னும் அழியாமல் இருப்பதன் காரணம் என்னவோ?" என்றெல்லாம் வருந்தி உரைத்தார்கள்.

பொல்லாத யூதர்களும் போர்ச் சேவகர்களும் எல்லா வல்லமையும் படைத்த இறைமகனை இழித்தும் பழித்தும் புறக்கணித்தும் வாயால் கூறத் தகாத மொழிகளைக் கூறிப் பழித்துரைத்தார்கள். என்றாலும், இறைமகன் இயேசு, அவர்கள் செய்த எல்லாப் பொல்லாங்குகளையும் பொறுத்துக் கொண்டிருந்தார்.

**45. மயிலை சீனி. வேங்கடசாமி குறித்து நீவிர் அறிவன யாவை?**

**பிறப்பும் வாழ்வும் :**

திருமணம் புரியாமல் இல்லறத் துறவியாக வாழ்ந்த வேங்கடசாமி, தம் வாழ்வைத் தமிழ் ஆய்வுக்கு ஒதுக்கினார். தம்மைத் தாழ்த்திக்கொண்டு, தமிழும் தமிழினமும் மேன்மை பெற ஆய்வுகளை மேற்கொண்டார்.

**ஆய்வுப்பணி :**

தொடக்கத்தில் இதழாசிரியராக வாழ்வைத் தொடங்கியவர். பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்தார். ஒய்வு கிடைத்தபோதெல்லாம் ஆய்வாளராகவும் எழுத்தாளராகவும் மாறினார். 'கிறித்தவமும் தமிழும்' என்னும் நூலை எழுதினார். தொடர்ந்து சமயக் காழ்ப்பு இன்றிப் 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' என்னும் ஆய்வு நூல்களையும் எழுதினார்.

**பன்முக ஆய்வு :**

தமிழ் இலக்கியம், தமிழ்மொழி, சமயம், மானுடவியல், தமிழர் வரலாறு, தொல்லியல் ஆய்வு, மொழிகளில் ஒப்பாய்வு எனப் பல துறைகளிலும் தம் கவனத்தைச் செலுத்தினார். தமிழ் எழுத்து வளர்ச்சி குறித்து ஆய்ந்து, வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி ஆகியன குறித்துத் தெளிவான புலமை பெற்றார். கல்வெட்டுகளையும் ஆராய்ந்தார். அதனால் இலக்கியச் சொல்லாய்வு, வரலாறு, கலைஇயல், சமயம் எனப் பல துறைகளிலும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதித் தமிழரின் பண்டைப் பெருமைகளை வெளிக்கொணர்ந்தார்.

**வரலாற்று ஆய்வு :**

சங்க காலத்தை அடுத்துத் தமிழகத்தில் ஆட்சிபுரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபாடு காட்டினார். அதனால் சங்ககால மூவேந்தர்கள், கொங்கு நாட்டு மன்னர்கள், துளுநாட்டு மன்னர்கள், களப்பிரர் சார்ந்த நூல்களை எழுதினார். இலங்கை குறித்தும் அதன் வரலாறு குறித்தும் எழுதினார். தமிழகத்தில் இருண்ட காலமாக வரலாற்று ஆசிரியர்கள் கூறிவந்த காலத்தில், 'களப்பிரர்' என்னும் இனத்தார் ஆண்டது குறித்து ஆய்வு செய்து வெளிப்படுத்தினார்.

www.Padasalai.Net



**பெற்ற சிறப்பு :**

தமிழக வரலாற்றுக் கழகத்திலும் தமிழகப் புலவர் குழுவிலும் உறுப்பினராக இருந்த மயிலை வேங்கடசாமி அவர்களுக்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம், 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் சிறப்பை 1962இல் வழங்கியது. ஓயாத தேடலாலும், கடுமையான உழைப்பாலும் அரிய பல தகவல்களைக் கொண்ட நூல்களை எழுதிய மயிலையாருக்குச் சென்னை கோகலே மண்டபத்தில் தமிழறிஞர்கள் திரண்டு, 'ஆராய்ச்சிப் பேறறிஞர்' பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினர்.

(அல்லது)

**நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**மனித இனமும் மேலாண்மையும் :**

மனித இனம் தோன்றியபோதே மேலாண்மையும் தொடங்கிவிட்டது. இயற்கையோடு இயையவும், இடர்களைத் தாண்டவும், சூழ்நிலையை எதிர்கொள்ளவும் மேலாண்மை அவசியம் தேவை. மனிதனுடைய மேலாண்மைப் பண்பு, எச்செயலையும் திட்டமிட்டுச் செய்வதில்தான் உள்ளது. ஏற்ற காலத்தை அறிந்து செயல்பட்டால், உலகத்தையே அடைய நினைத்தாலும் அதுவும் கைகூடும். எது எந்த நேரத்தில் முக்கியம் என்று, சரியான முடிவெடுப்பதில்தான் வாழ்வின் வெற்றி அடங்கியிருக்கிறது.

**நிருவாக மேலாண்மை :**

உயர் பதவியில் இருப்பவர் நிபுணத்துவம் பெற்றவராக இருப்பது சாத்தியமில்லை. ஆனால், இச்செயலைச் செய்து முடிக்கும் திறமைசாலி யார் என்று அறிந்து முடிவு எடுப்பதே, சிறந்த நிருவாக மேலாண்மை ஆகும். நாலடியார் கூறுவதுபோலக் கல்லாதவராக இருந்தாலும், கற்ற சான்றோருடன் சேர்ந்து பழகினால், நற்பண்புகள் நாளும் வளரும்; நிருவாக மேலாண்மை சிறப்படையும்.

**நிதி மேலாண்மை :**

நிருவாகத்தில் வரவே, செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டிச் செலவு செய்பவர், அடுத்தவரிடம் கையேந்த வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்படுவர். ஷேக்ஸ்பியர் எழுதிய 'டைமன்' நாடகத்தில், வரவைவிடச் செலவு அதிகம் செய்ததால், முடிவில் மனித இனத்தையே வெறுத்து ஒதுங்க வேண்டிய இழிநிலையை அடைய நேரிடும் என்பது விளக்கப்பட்டது. ஔவையாரும், "ஆனமுதலில் அதிகம் செலவானால், மானம் அழிந்து மதிகெட்டு அழிந்துபோவான்" என்று கூறியுள்ளார்.

**மேலான மேலாண்மை :**

மேலாண்மை என்பது, புத்தக அறிவுடன் முடிவதில்லை. உலகின் சூழல், நொடிக்கு நொடி மாறிக் கொண்டே இருக்கிறது. பழமையான அனுபவம் கொண்டு, புதிய நெருக்கடியைச் சமாளிக்க முடியாது.செயலை முடிக்கச் செக்கு மாடுகளாகிவிடும் அனுபவசாலிகளைவிட, சீறிச் செயல்படும் ஜல்லிக்கட்டுக் காளைகளே தேவைப்படும். ஒவ்வொரு நாளும் புதியது என எண்ணிச் செயல்படும் தன்மையே மேலான மேலாண்மையாகும்.

**46. 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.**

**மேலூரு பங்காருசாமியின் இறுதி முடிவு :**

தன்னை வந்து சந்தித்த வெள்ளைச்சாமியிடம் இறுதியாகச் சொன்னார் பங்காருசாமி. "இந்தா பாரு, எனக்குத் தரவேண்டிய முழுப்பணத்தையும் அடச்சிட்டு அப்புறமா நிலத்துல இறங்கு. இல்லன்னா ரொம்ப சிரமப்படுவ" என, எச்சரித்து அனுப்பினார்.

**வெள்ளச்சாமியின் இயலாத் தன்மை :**

முகத்தில் அறைந்தாற்போல் பேசிய பங்காருசாமியிடம் அதற்குமேல் கெஞ்ச மனமில்லாமல் வீடு திரும்பினான். என்ன செய்வதென்றே தெரியாமல் குழம்பிப்போய் வீட்டிலிருந்த ஆட்டுரலில் உட்கார்ந்திருந்தான். "என்னங்க, மேலூர்க்காரரு என்ன சொன்னாக" என்று, அவன் பெண்டாட்டி ஆர்வத்தோடு கேட்டாள். "விதப்பு நேரம், பாடுபட்டு அதுல வர்ற வருமானத்துல பணத்தக் குடுத்திருரேனு சொன்னேன். முடிவா முடியாது, நிலத்துல இறங்கவும் கூடாதின்னுட்டாரு" என்று சொல்லிவிட்டு, இரு கைகளையும் தலைக்கு அண்டக் கொடுத்துக் குனிந்து கொண்டான்.

www.Padasalai.Net



**எல்லாம் உன்னால் வந்தது! :**

“இதுக்குக் குனிந்துகொண்டு, உட்கார்ந்திருந்தா எப்படி? என்னத்தாச்சும் வித்துக் கொடுக்க வேண்டியதுதான்” என்று, சலித்துக் கொண்டாள். வெள்ளச்சாமிக்குச் ‘சுரீர்’ எனக் கோபம் வந்து, “எல்லாம் உன் பேச்சக் கேட்டுக் கேட்டுத்தான் இந்த நிலைக்கு வந்திருக்கேன். பொறுப்பில்லாம நடந்துக்கிட்டா இப்படித்தான். என் மதினியப் பாரு. என்ன குடும்பப் பொறுப்பு! எவ்வளவு பொறுமை! பொம்பளன்னா அப்படி இருக்கணும்” என்று ஆதங்கப்பட்டான்.

**வாய்ப்பேச்சு வம்பாப் போச்சு! :**

வெள்ளச்சாமி சொன்னதுதான் தாமதம், உடனே வரிந்துகட்டிப் பொரிந்து தள்ளினாள். அவள் பேசப் பேச, வெள்ளச்சாமிக்குச் சூடேறியது. ஒரு கட்டத்தில் அவள் மதினியைப் பற்றி இழிவாகப் பேச, ஆணியில் மாட்டியிருந்த சாட்டைக் கம்பை எடுத்து விளாசினான். அம்மா அழுததைப் பார்த்துக் குழந்தைகளும் அழுதன. சாட்டையை வீசி எறிந்துவிட்டு, வீட்டிலிருந்து வெளியேறி, எங்கேயோ போய்விட்டான். அவளும் அவள் அம்மா வீட்டிற்குப் புறப்படத் தயாரானாள்.

**பங்காருசாமிக்குப் பணம் போய்ச் சேர்ந்தது :**

பக்கத்து வீட்டிலிருந்த வெள்ளச்சாமியின் மதினி மூக்கம்மா, சண்டையைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தன் கணவன் முத்தையனிடம் இரக்கத்தோடு எடுத்துச் சொல்லி, பங்காருசாமிக்குக் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுத்து வரும்படி எடுத்துச் சொன்னாள். முத்தையனும் அவ்வாறே செய்து தம்பிக்காகக் கெரையப் பத்திரத்தைத் திரும்பப்பெற்று வந்தார். இரண்டு நாட்களாக ஓட்டல் கடைகளில் சாப்பிட்டு அலைந்து கொண்டிருந்த தன் தம்பியைச் சந்தித்து, பத்திரத்தைக் கொடுத்துக் கடிந்துகொண்டார். “பொண்டாட்டிய சமாதானம் பண்ணி அழைச்சிட்டு வா” என, அறிவுரை கூறினார். “நாளைக்கு விதப்புக்கு தயாராகிக்க” என்றும் சொல்லிச் சென்றார்.

(அல்லது)

**“கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன” – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.**

**கிராமத்துச் சூழல் காணாமல் போய்விட்டது :**

இயற்கை வனப்புகளோடு அமைந்திருப்பவைதாம் கிராமங்கள். எங்குப் பார்த்தாலும் பசுமையைப் படரவிடும் மரங்களும், ஊரைச் சுற்றிப் பச்சைப்பட்டு விரித்தாற்போன்ற வயல்வெளிகளும் வனப்பை வாரி வழங்கிக் கொண்டிருப்பவை. சிறுசிறு ஏரிகள், குளங்கள், இவற்றை நிரப்ப ஓடிவரும் நீரோடைகள் இயல்பாய் அமைந்திருப்பனதாம் கிராமத்துச் சூழல். இன்றைய காலக்கட்டத்தில், இவையெல்லாம் எங்கே போயின என்று கேட்கத்தான் தோன்றுகிறது.

**விளைநிலங்கள் விலை நிலங்களாக மாறிவிட்டன :**

கிராமங்களின் முக்கியத்தொழிலே விவசாயமாக இருந்தது. நிலங்களை உழத்தொடங்கி, நெல்மணிகளை மூட்டைமூட்டையாக வீட்டில் அடுக்கிவைத்து, அகமகிழ்ந்து வாழ்ந்து வந்தனர் கிராமத்து விவசாயிகள். வயல்களில் வேலைசெய்யும் விவசாயக் கூலிகளும், மிகுந்த மகிழ்ச்சியோடு உழைப்பை முன்னிறுத்தி, கூலியினைப் பெற்று, நிம்மதியான வாழ்வு நடத்தினர். ஆனால், இன்றோ விவசாயம் செய்து வந்த உழவர்கள், விளைநிலங்களை விலைபேசிக் கட்டடங்கள் கட்டுவதற்கு, விற்பனை செய்து வருகின்றனர்.

**ஆடு மாடுகளில்லா அனாதைக் கிராமங்கள் :**

கிராமங்களில் வீட்டுக்கு வீடு ஆடுகளாகட்டும், மாடுகளாகட்டும், கோழிகளாகட்டும் நிறைந்து காணப்படும். ஆனால், இன்றோ மாட்டுத்தொழுவம், ஆட்டுப்பட்டி, கோழிக்கூடு என்பனவெல்லாம் ஏதோ புதுமையான சொற்றொடர்களாகி விட்டன. வீடுகளின் கூரைகளிலும் முற்றங்களிலும் கூடுகட்டி வாழ்ந்த பறவைகளுக்கோ, இப்பொழுது இடமில்லை. தம்முடைய இயல்புத் தன்மையை இழந்து நிற்கின்றன பல கிராமங்கள்.

**வீட்டு நிகழ்ச்சிகள் வெளியூரில் நடக்கின்றன :**

வீட்டில் நடத்தப்பெறும் சிறுசிறு நிகழ்ச்சிகளும்கூட, நகர மண்டபங்களில் நடத்தப்பெற்று வருகின்றன. உற்றார் உறவினர், நிகழ்ச்சி நாளுக்கு முன்பே வந்து தங்கி, உணவைத் தாமே சமைத்து, மகிழ்ச்சியாக அனைவரும் கூட்டாக அமர்ந்து உண்ட நிலை, இப்பொழுது இல்லை. காலையிலிருந்து இரவுவரை விருந்து நடைபெறும் கிராமத்து வீடுகளில், இப்பொழுதோ, நகர்ப்புற மண்டபங்களில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துகொண்டு, ஒருவேளை உணவைமட்டுமே அளித்துவிட்டு, உறவினரை அனுப்பிவைக்கும் நிலைக்கு மாறியுள்ளன.

www.Padasalai.Net



**நாகரிகப் போர்வைக்குள் மறைந்துவரும் கிராமங்கள் :**

ஆண்கள் வேட்டியும் பெண்கள் சேலையும், பெண்குழந்தைகள் பாவாடை சட்டையும், பையன்கள் கால்சட்டையும் அணிந்து கிராமத்திற்கே உரிய பண்பாட்டைக் காத்து வந்தனர். வேட்டிக்குப் பதில் ஜீன்ஸ், பாவாடை சட்டைக்குப் பதில் சுடிதார், குர்தா, பைஜாமா, நைட்டி என வடநாட்டு, மேனாட்டு நாகரிகத்தைக் கிராமத்துக்குள் நுழையவிட்டுவிட்டனர். ‘அம்மா’, ‘அப்பா’ என்னும் அழகிய தமிழ்ச்சொற்கள், ‘மம்மி’, ‘டாடி’ என மாற்றம் பெற்றுள்ளன. திருவிழாக்களில் கிராமிய கலைநிகழ்ச்சிகள் போய், திரைப்படக் காட்சிகள் அரங்கேறுகின்றன. மொத்தத்தில் கிராமத்து மக்கள் தங்கள் அடையாளத்தைத் தொலைத்துவிட்டனர். கிராமங்கள், தங்கள் முகவரியை இழந்து வருகின்றன.

## பகுதி – V

**அடிமாறாமல் எழுதுக.** **1 × 6 = 6**

**அ) “காய்நெல்” எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.**

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே,
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்.

**ஆ) “சுடும்” என முடியும் குறட்பாவை எழுதுக.**

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 3

## பகுதி – I பொதுத்தமிழ்

**நேரம் : 15 நிமிடங்கள் + 3 மணி** மதிப்பெண் : **90**

### பகுதி – I

**குறிப்பு :** (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14 × 1 = 14**

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பொருத்துக.

அ) தமிழ் அழகியல் – பரலி சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ – தி. சு. நடராசன்


இ) கிடை – சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி – கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**விடை :** ஈ) 2, 3, 4, 1

2. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணியர் ஆகப் பெறின்.

ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

**விடை:** ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

3. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி ______.

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

**விடை :** இ) திண்டிவனம்

4. "உவாஉற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்

இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

**விடை :** இ) இராமன், சுக்ரீவன்

5. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம் துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி; காரணம் தவறு. ஆ) கூற்று தவறு; காரணம் சரி.

இ) கூற்றும் தவறு; காரணமும் தவறு. ஈ) கூற்றும் சரி; காரணமும் சரி.

**விடை :** ஈ) கூற்றும் சரி; காரணமும் சரி.

www.Padasalai.Net



6. வேறுபட்டதைக் குறிப்பிடுக

அ) அண்மைக்காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக்காட்சித் துணிப்பு

இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

**விடை** : ஈ) காட்சி மறைவு

7. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**விடை** : இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது.

8. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ______.

அ) நன்னூல் ஆ) அகத்தியம்

இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

**விடை** : இ) தொல்காப்பியம்

9. இலக்கணக்குறிப்புத் தருக : மறத்தல்.

அ) எண்ணும்மை ஆ) பண்புத்தொகை

இ) தொழிற்பெயர் ஈ) இடவாகு பெயர்

**விடை** : இ) தொழிற்பெயர்

10. Domestic flight – என்பதன் கலைச்சொல் ______.

அ) வெளிநாட்டு வானூர்தி ஆ) உள்நாட்டு வானூர்தி

இ) ஏவுகணை ஈ) ஊர்திப்பட்டை

**விடை** : ஆ) உள்நாட்டு வானூர்தி

11. 'காலை இளம்வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' – இக்கவிதையில் ______ பயின்று வந்துள்ளது.

அ) பயன்படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

**விடை** : ஆ) வினைப்படிமம்

12. கூற்று 1 : காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

கூற்று 2 : ஐம்பெரும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி

அ) கூற்று 1 சரி; கூற்று 2 தவறு. ஆ) கூற்று 1 தவறு; கூற்று 2 சரி.

இ) இரண்டும் சரி. ஈ) இரண்டும் தவறு.

**விடை** : அ) கூற்று 1 சரி; கூற்று 2 தவறு.

13. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.

அ) உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்.

ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது.

இ) நம்ப முடியாததுபோல் தோன்றும் நிகழ்ச்சிகள், செய்திகள்.

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழிகளின்மூலம் விளக்குவது.

**விடை** : ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழிகளின்மூலம் விளக்குவது.

www.Padasalai.Net



14. 'திட்டம்' என்னும் தலைப்பில், 'வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால், இங்கே தவங்கள் எதற்காக?' என்று எழுதப்பட்டுள்ள கவிதையில், 'வரம்' எதற்குக் குறியீடாகிறது?

அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு

**விடை : இ) திட்டம்**

## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 2 = 6**

**15. நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?**

➤ இராமனைக் கண்டதால் தன் பொய்யான உலகப்பற்று அழிந்தது என்றும், அளவற்ற காலம் தான் மேற்கொண்டிருந்த தவம் பலித்துப் பிறவி ஒழிந்தது என்றும் கூறி, நிலையாமை குறித்த கருத்தைச் சவரி வெளிப்படுத்தினாள்.

**16. மனத்தை அதன்போக்கில் செல்லவிடக்கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?**

➤ மனத்தைத் தீயவற்றிலிருந்து விலக்கி, நல்வழியில் செலுத்துவதே அறிவுடைமை என்பதனால், மனத்தை அதன்போக்கில் செல்லவிடக்கூடாது.

**17. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

➤ சிரிப்பு, அழுகை, சிறுமை, வியப்பு, அச்சம், பெருமை, சினம், மகிழ்ச்சி ஆகியன, எண்வகை மெய்ப்பாடுகள் ஆகும்.

**18. முகம், முகவரி அற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணம் யாது?**

➤ முகங்களுடன் முகம் கலந்ததால், தனக்குள்ளே தன்னைத் தொலைத்தபிறகு அவரது முகம் முகவரியற்றுப் போனது. முகத்தைத் தொலைத்ததால், உடலும் மறந்துபோனது.

➤ எனவே, வெற்றுவெளியில் தன் முகத்தைத் தேடுவதாகச் சுகந்தி சுப்பிரமணியன், காரணம் கூறுகிறார்.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

**19. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று கடுமையாகச் சந்தித்துக் கொண்டிருக்கிறான் – இருதொடர்களாக்குக.**

➤ மனிதன், தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.

➤ அதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

**20. கீழ்த்திசைச் சுவடி நூலகம் குறித்து எழுதுக.**

➤ கீழ்த்திசைச் சுவடிகள் நூலகமானது, 'காலின் மெக்கன்சி'யின் தொகுப்புகளைக் கொண்டது.

➤ 1869இல் உருவாக்கப்பட்டது. இங்கு, இலக்கியம், இலக்கணம், வரலாறு, தத்துவம் அறிவியல், வானியல் முதலான பிரிவுகளைச் சேர்ந்த அரிய ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரிய தொகுப்புகள் உள்ளன.

**21. விரிபெருந் தமிழர் மேன்மை**
**ஓங்கிடச் செய்வ தொன்றே**
**உயிர்ப்பணி யாகக் கொண்டோன்' – யார், யாரைப் பற்றி எதற்காகக் கூறுகிறார்?**

➤ இவ்வடிகள், மயிலை சீனி. வேங்கடசாமி பற்றிப் பாவேந்தர் பாரதிதாசன் கூறியது.

➤ புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், "தாம் கெட நேர்ந்தபோதும், தமிழ் கெடல் ஆற்றா அண்ணல், வேங்கடசாமி என்பேன்! விரிபெரு தமிழின் மேன்மை ஓங்கிடச் செய்வது ஒன்றே உயிர்ப்பணியாகக் கொண்டோன்! வீங்கிட மாட்டான், கல்வி விளம்பரம் விழைதல் இல்லான்" எனப் போற்றிக் கூறியுள்ளார்.

www.Padasalai.Net


## பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

**22. உவமைத்தொடர் ஒன்றினைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

**அ) எலியும் பூனையும் போல :** உலகில் சில நாடுகள், அண்டை நாடுகளுடன் தேவையற்ற பூசல்களில் ஈடுபடுவதால், **எலியும்பூனையும்போலக்** காணப்படுகின்றன.

**ஆ) வழிவழியாக :** மக்களின் வாழ்க்கை நெறிமுறைகள், நாகரிகம், பண்பாடு முதலானவை, **வழிவழியாகத்** தொடர்ந்து நின்று, பெருமை சேர்க்கின்றன.

**23. இனநிரை – பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுக.**

இனநிரை – இனம் + நிரை

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்' – இனநிரை.

**24. கீழ்க்காணும் சொற்களில் ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**அ) பொலிந்தான் – பொலி + த் (ந்) + த் + ஆன்**

**பொலி** – பகுதி; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை;

**ஆன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

**ஆ) நினைக்கின்ற – நினை + க் + கின்று + அ**

**நினை** – பகுதி; **க்** – சந்தி; **கின்று** – நிகழ்கால இடைநிலை; **அ** – பெயரெச்ச விகுதி.

**25. காற்புள்ளி இடாமல் எழுதுவதால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**

சுந்தரி, அத்தை வீட்டிற்குச் சென்றாள்.

சுந்தரி அத்தை, வீட்டிற்குச் சென்றாள்.

முதல் தொடரில், 'சுந்தரி' எழுவாய். இரண்டாம் தொடரில், 'சுந்தரி அத்தை' எழுவாய். காற்புள்ளி இடைவிடில், இரண்டுமே பொருள் மயக்கம் தரும்.

**26. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?**

➤ இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை இரண்டும், வெண்பாவிற்குரிய தளைகளாகும்.

**27. காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?**

➤ பாட்டுடைச் செய்யுள், உரை இடையிட்ட பாட்டுடைச் செய்யுள், சரிதம், புராணம், கதை, மாக்கதை, காதை, காவியம், மாபெருங்காப்பியம், மாக்கவி ஆகியவை, காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்களாகும்.

**28. கீழ்க்காணும் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

அ) உங்களுக்கு ______ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?

ஆ) நம்முடைய ______ (தேவை) அளவு குறைந்தால், மகிழ்ச்சி பெருகும்.

நம்முடைய தேவையின் அளவு குறைந்தால், மகிழ்ச்சி பெருகும்.

**29. செவியறிவுறூஉத் துறையை விளக்குக.**

➤ அரசன் தவறுதலாகச் செயல்பட நேரும்போது, செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யும் வகையில், அரசனுக்கு அறிவுரையாகக் கூறுவது, 'செவியறிவுறூஉ'த் துறையாகும்.

**30. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) முருகன் சோறு **சாப்பிட்டுப்** பால் **குடித்தான்.**

முருகன் சோறு **உண்டு** பால் **பருகினான்.**

ஆ) மாட்டுத் **தொழுவத்தைச்** சுற்றிலும் எலிகளின் **பொந்துகள்** அமைந்திருந்தன.

மாட்டுக் **கொட்டகையைச்** சுற்றிலும் எலிகளின் **வளைகள்** அமைந்திருந்தன.

www.Padasalai.Net



## பகுதி – III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

**31. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : “ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்” என்னும் அடி, தண்டி அலங்காரம் என்னும் அணி இலக்கண நூல் உரைமேற்கோள் பாடலில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : தமிழுக்கும் கதிவரனுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் கூறும் இத்தொடருக்கு, “ஒலிக்கும் அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட உலகத்தில் இருள் போக்கும்” என்பது பொருள்.

**விளக்கம்** : சூரியன், தன் கதிர்களால் உலகில் பரவியுள்ள புற இருளைப் போக்கும்; தமிழோ, மக்களின் அக இருளைப்போக்கி, அறியாமையை அகற்றும் சிறப்புடையது என்பதாம்.

**32. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள்வழி நீவிர் கருதுவன யாவை?**

➤ அழிவுவராமல் காக்கும் கருவியும், பகைவரால் அழிக்கமுடியாத அரணும், தீநெறி விலக்கி மனத்தை நன்னெறியில் செலுத்த வல்லதும், மெய்ப்பொருள் காணத் துணை நிற்பதும், உலகத்தோடு ஒட்ட ஒழுகச் செய்வதுமாகிய அறிவு, பின்னர் வருவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளும் வல்லமையைக் கொடுக்கும் மேன்மை உடையதாகும் எனக் கருதுகிறேன்.

**33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமென வேண்டுகிறார்?**

➤ “ஒரு நெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். உள்ளத்தில் ஒன்று வைத்துப் புறத்தில் ஒன்றைப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாது காக்க வேண்டும்” எனக் கந்தவேளிடம் இராமலிங்க அடிகள் வேண்டுகிறார்.

**34. எங்கிருந்தோ வருகிறது**
**வண்ணத்துப்பூச்சியொன்று**
**பறவைகளும் வரக்கூடும் நாளை – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : தமிழ்நதி இயற்றிய ‘அதன் பிறகும் எஞ்சும்’ என்னும் நூலில், ‘அதிசய மலர்’ என்னும் தலைப்பில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

**பொருள்** : பூக்களைத் தேடி வண்ணத்துப்பூச்சி வருவதைப்போலப் பறவையும் வரும்.

**விளக்கம்** : ஈழத்து மக்கள் போரினால் பாதிக்கப்பட்டு, மீண்டு வாழ்வதைப் படம் பிடித்துக்காட்ட விரும்பிய கவிஞர், புதிதாகப் பிறந்த குழந்தை எவ்வாறு சிரித்துக் கொண்டிருக்குமோ, அதுபோல மொட்டுகளை விரித்திருக்கும் பூச்செடி. அந்தச் செடியின் மலரின் தேனைச் சுவைப்பதற்காக வண்ணத்துப்பூச்சிகள் வருகின்றன. இன்னும் மரங்கள் வளர்ந்ததும் பறவைகளும் நிச்சயமாக வரும் எனக் கவிஞர், இவ்வரிகளின்மூலம் நமக்கு விளக்குகிறார்.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

**35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

➤ மழை வெள்ளங்களைத் தாங்கக்கூடிய புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்.

➤ நீர்வழிப் பாதைகள் உருவாக்கப்பட்டு, அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

➤ சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைத் தொடங்கிச் சமூக இயக்கமாக வளர்க்க வேண்டும்.

➤ கடற்கரை ஓரங்களில் சதுப்புநிலக் காடுகளை வளர்த்தல் வேண்டும்.

www.Padasalai.Net



**36. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்திருப்பனவற்றைக் குறிப்பிடுக.**

- இந்திய 'சாரசனிக் கட்டடக்கலை' முறையில் கட்டப்பெற்ற உயர்நீதி மன்றக் கட்டடங்கள்.
- எழும்பூர், கோட்டை அருங்காட்சியகங்கள், கன்னிமரா நூலகம்.
- திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள், தொடர்வண்டி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவை, சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவாகும்.

**37. "யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே" – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக..**

**அறிவுறுத்திய பொருள் :**

- அரசனின் நிருவாகச் சீர்கேட்டால் நாட்டின் நலன் பாதிக்கப்படுவதைக் கண்டு, பிசிராந்தையார் அறிவுறுத்திப் பாடிய புறநானூற்றுப் பாடலில் இவ்வரி இடம் பெற்றுள்ளது.

**உவமை விளக்கம் :**

- முறையறியா மன்னன் மக்களை வற்புறுத்தி வரியை வசூல் செய்வது, யானை புகுந்து உண்ணத் தொடங்கும் நிலத்தில் விளைந்த நெற்கதிர் மணிகள், அதன் வாயுள் புகுவதைவிடக் கால்களில் மிதிபட்டு அழிவன மிகுதியாக இருப்பனபோல நலம் பயக்காது.
- அரசன் வரி வசூலிக்கும்போது முறையறிந்து கொண்டால், நாட்டுமக்கள் விருப்பத்தோடு அளித்து, மக்களும் மகிழ்ச்சியோடு வாழ, நாட்டுச் செல்வவளம் பெருகும் என்பது புலப்படுமாறு, அரசனுக்குப் புலவர் அறிவுறுத்தியதாகும். முறை அறியாது வரி வசூலிக்கும் மன்னனுக்கு யானையும், அதனால் அழியும் மக்களுக்கு மிதிபட்டு அழியும் நெற்கதிர் மணிகளும் உவமைகளாயின.

**38. திரைப்படக்கலை என்பது யாது?**

- ஒருவர் ஒரு கதையையோ, நிகழ்வையோ விவரித்துக் கூறும்போது, அதனைக் கேட்கும் மூளை, அந்த விவரிப்பில் தேவையற்றவற்றை வெட்டி, தேவையானவற்றை ஒட்டிச் சேகரித்துக் கொள்கிறது.
- அதுபோலவே கதைக்குத் தேவையான நிகழ்வுகளைப் பல கோணங்களைப் பயன்படுத்திக் காட்சிகளாகப் படம்பிடித்து, பின்னர் அவற்றை வெட்டி ஒட்டிப் படத்தொகுப்பாக்கி வெள்ளித்திரையில் ஒரு நல்ல படமாக வெளியிடப்படுகிறது. இவ்வாறு செய்வதனையே, திரைப்படக்கலை என்கின்றனர்.

## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 4 = 12**

**39. 'தன் கையே தனக்குதவி' என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுது.**

தந்தை விட்டுச்சென்ற ஆட்டோ ஒன்றுதான் வேலனுடைய சொத்து. அதை வாடகைக்கு விட்டு வாழ்ந்து வந்தான். அவனுடைய பள்ளித்தோழன் குமரன் ஒருநாள் சந்தித்தான். குமரனும் ஆட்டோ ஓட்டுபவன்தான். தன் துன்பங்களை வேலன், நண்பனிடம் கூறி வருந்தினான். "வேலா! உன் ஆட்டோவைப் பழுதுபார்க்க ஓட்டுநர் முந்நூறு ரூபாய்தானே வாங்கினார்?" எனக் கேட்டான் குமரன். "இல்லை! ஐந்நூறு ரூபாய் வாங்கினாரே" என்றான் வேலன். "நானும் இப்படித்தான் ஏமாந்திருக்கிறேன். நீ இப்படியே அடுத்தவரை நம்பி வாழ்ந்தால், இறுதியில் ஆட்டோவையே விற்கவேண்டியதாகிவிடும். நீ முயன்றால் விரைவில் ஆட்டோ ஓட்டப் பழகி ஓட்டுநர் உரிமமும் பெற்றுவிடலாம். '**தன்கையே தனக்குதவி**' என்பதை எக்காலத்தும் மறவாதே" என்றான் குமரன்.

**40. தமிழாக்கம் தருக.**

I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.

www.Padasalai.Net



மூத்தவர்களை மதிப்பது, மக்களைச் சந்திக்கும்போது முகமன் கூறுவது, பிரியும்போது நல்வாழ்த்து உரைப்பது என்னும் அடிப்படையான நல்ல பழக்கங்கள் என்னிடம் இருப்பதை உறுதி செய்கிறேன். இவை தவிர விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது, வறியவருக்கும் தாழ்நிலையில் உள்ளவர்களுக்கும் உதவி செய்வது, நோயுற்றவர்களுக்கும் உதவி தேவைபடுபவர்களுக்கும் உதவி செய்வது, தங்க இடம் இல்லாருக்கு இடம் அளிப்பது, உடல் ஊனமுற்றவருக்குத் துணையாக நிற்பது முதலான பிற நல்ல பழக்க வழக்கங்களையும் கடைப்பிடிக்கிறேன். எழுதுதல், இசையைச் சுவைத்தல், ஆட்டம் பாட்டம் முதலான உள்ளத்திற்கு நிறைவு தரும் நற்பழக்கங்களையும் நான் கடைப்பிடிக்கிறேன்.

**41. தொழில் உவமை அணிக்குச் சான்று தந்து விளக்குக.**

**சான்று :** கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து.

இதில். தொழில்உவமை அணி அமைந்துள்ளது.

**விளக்கம் :** எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்குக் கொக்கின் செயல் (தொழில்) உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது. எனவே, **தொழில்உவமை அணி** அமைந்துள்ளது.

இவ்வாறு காட்சிப்படுத்தும் உத்தியை '**வினைப்படிமம்**' எனவும் கூறுவர். புறநானூற்றுப் பாடலில், ஊரைக் கைப்பற்ற வந்த பகைவீரனுடன் நெடுந்தகை நடத்திய பெரும்போரைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'கட்டிலைப் பின்னுகின்ற ஒருவனின் கைஊசி எவ்வளவு வேகமாக வாரைச் செலுத்துமோ அவ்வளவு விரைவாகச் செயல்பட்டது என, வினைப்படிமப்படுத்தப்பட்டுள்ளது **(தொழில்உவமையாகச்)** சொல்லப்பட்டுள்ளது.

(அல்லது)

**எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**

"துஞ்சினர் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்".

- உவமானத்தை வேறாகவும், உவமேயத்தை வேறாகவும் கூறி, இடையே ஒப்புமை காட்டும் உவமஉருபு கொடுக்காமல் கூறுவது, எடுத்துக்காட்டு உவமையணியாகும்.
- துஞ்சினவர்க்கு உயிர்ப்பு இருந்தாலும் அறிவு செயல்படாது. எனவே, இறந்தார்க்கு ஒப்பாகவே கருதப்படுவர் என்பது உவமை. கள் உண்பவர்க்கு உயிர்ப்பு இருந்தாலும், அறிவு செயல்படாத நஞ்சு உண்டவராகவே செயல்படுவர் என்பது உவமேயம் (பொருள்). உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையே ஒப்புமை காட்டும் உவமைஉருபு இல்லை. எனவே, **எடுத்துக்காட்டு உவமையணி** ஆயிற்று.

**42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.**

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்.

**– கவிமணி தேசிக விநாயகம்**

www.Padasalai.Net



**ஆசிரியர் :**

இதனைப் பாடியவர், கவிமணி தேசிக விநாயகம். குழந்தைகளுக்கு மனத்தில் நிற்கக்கூடிய அரிய செய்திகளை எளிய சொற்களில் கவிதை வடிவில் தந்ததில் முன்னோடியாகத் திகழ்ந்தவர். இங்கு இடம்பெற்றுள்ள பாடல், நம் சமுதாயத்தில் பிறப்பால் உயர்வுதாழ்வு கற்பிக்கும் முறையைச் சாடுவதாக உள்ளது. இனிப் பாடல் நயத்தைக் காண்போம்.

**திரண்ட பொருள் :**

இவ்வுலகில் வாழும் எவருக்கும், அவரவர் பிறந்த பிறப்பினால் பெருமை ஏற்படுவதில்லை. ஒருவர் சிறப்புப்பெற வேண்டுமானால், அவர் நல்ல செயல்களைச் செய்பவராக இருத்தல் வேண்டும். எவர் ஒருவர் நற்செயல்களைச் செய்கிறாரோ, அவரே எல்லாராலும் விருப்பப்படுகின்ற உயர்குலத்தில் பிறந்தவராவார். தீமை தரும் செயல்களைச் செய்பவர், எவரும் நெருங்கித் தீண்ட விரும்பாத இழிகுலத்தில் பிறந்தவராவார்'' என்பது, செய்யுளின் திரண்ட பொருள்.

**மையக்கருத்து :**

''பிறப்பினால் உயர்வுதாழ்வு வராது'; செய்யும் செயலால் மட்டுமே சிறப்பு ஏற்படும். நல்லது செய்பவரை எல்லாரும் போற்றுவர். நல்லது அல்லாததைச் செய்பவரை எவரும் விரும்பார்'' என்னும் திரண்ட கருத்துக் கூறப்பட்டுள்ளது.

**தொடைநயம் :**

அடிதோறும் முதல் சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து, எதுகை அமைந்துள்ளது. பிறப்பினால், சிறப்பு – என்பனவற்றிலும், நன்மை, தின்மை என்பனவற்றிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து, '**அடிஎதுகை**' அமைந்துள்ளது.

3, 4–ஆம் அடிகளில் முதல் சீர்களில் நன்மை, தின்மை என்னும் சொற்களில் **முரண்தொடை** அமைந்துள்ளது.

அடிதோறும் ஈற்றுச்சீர் பொருந்திவந்து அமைவது **இயைபுத்தொடை.** வாராதப்பா, வேண்டுமப்பா என்னும் ஈற்றுச்சீர்கள், ஓசைநயத்தில் பொருந்தியதால், **இயைபுத்தொடை** அமைந்துள்ளது.

எளிய சொற்களில், ஓசை நயம் பொருந்தப் பாடப்பட்டுள்ளதால், பாடி மகிழ்வதற்கு உகந்ததாக அமைந்துள்ளது. இதில் பொருந்தியுள்ள சந்தநயம், இது '**சிந்துப்பா**' வகையைச் சார்ந்தது என்பதைப் புலப்படுத்தும்.

**43. 'அருவி' அல்லது 'கடற்காட்சி' என்னும் தலைப்பில் புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.**

| அருவி | கடற்காட்சி |
|---|---|
| மாமலை மீதி ருந்தே,<br>மாமழை பெய்ய வீழும்!<br>வீழ்ந்திடும் அருவி நீரால்,<br>விளைந்திடும் தாவ ரங்கள்!<br>குறிஞ்சியின் குழந்தை யன்றோ,<br>குதித்திடும் அருவி தானும்!<br>ஆறுகள் அருவி யாலே,<br>ஆவதும் உண்மை யன்றோ! | கடற்கரை மணல்ப ரப்பில்<br>காலையில் நிற்றல் இன்பம்!<br>மடல்விரி தாழை அங்கு<br>மணமதை வீசி நிற்கும்!<br>படகினைச் செலுத்தி மாந்தர்<br>பழகிடும் காட்சி இன்பம்!<br>கடல்படு பொருள்கள் யாவும்<br>காணவே இன்பம் அன்றோ! |

## பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3 × 6 = 18**

**44. தமிழின் சீரிளமைத் திறம்வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

''எம் அருமைச் செந்தமிழே!

செம்மையான சூரியன், மலைமேட்டில் தலையைச் சாய்க்கும்போது, வானமெங்கும் செந்நிறப் பூக்காடாகத் தோன்றும். அந்தச் சிவப்பு நிறத்தைத் தங்கள் உடல் பெறுமாறு கடினமாக உழைக்கும் தொழிலாளரின் பருத்த தோள்களில், வியர்வைத்துளிகள் முத்துமுத்தாக அரும்பி நிற்கும்.

இவற்றையெல்லாம் வியந்து பாடுவதற்கு, உன்னையன்றிச் சிறந்த துணை வேறு இருக்கமுடியுமா? நீயே கூறுவாயாக! எம் உள்ளத்தில் மூண்டு எழும் கவிதை வெறிக்கு நீயே உணவாக இருக்கிறாய்!

www.Padasalai.Net



இயல், இசை, நாடகமென மூன்றாகத் தழைத்து வளர்ந்த தமிழே! முன்பு ஒரு காலத்தில் நீ, பாண்டியர் உருவாக்கிய சங்கத்தில் கொலு வீற்றிருந்தாய்! பாரி, காரி, ஓரி, ஆய், அதியன், நள்ளி, பேகன், என்னும் ஏழு வள்ளல்களைப் பெற்றெடுத்தாய்!

"தமிழே! எம் மெய் சிலிர்க்குமாறு பழமை நலத்தைப் புதுப்பிப்பதற்காக நீ மீண்டும் குயிலாக வந்து, கூவ வேண்டும். தென்றல் தவழும் குளிர்ந்த பொதிகைமலையில் தோன்றி வளர்ந்த தமிழே! தடைகள் இருந்தால் அவற்றை எல்லாம் கூண்டை உடைத்து எழுந்து வெளிப்படும் சிங்கம்போல் சீறி வரவேண்டும்" என்று, தமிழின் சீரிளமைத் திறம் வியந்து, கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

(அல்லது)

**அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதனை வள்ளுவம் வழிநின்று நிறுவுக.**

'அறிவு' என்பது, இயற்கையானது. எனினும், கல்வி கேள்விகளால் பெறும் அறிவு, நன்மை தீமைகளைப் பிரித்துணரவும், நல்லனவற்றின் நன்மையையும் தீயனவற்றின் தீமையையும் பிரித்துணரவும் உதவுவதாகும்.

**அறிவின் சிறப்பு :**

அறிவு என்பது, ஒருவருக்கு அழிவு வராமல் பாதுகாக்கும் கருவியாகும். அன்றியும், அது பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாகவும் அமையும் சிறப்புடையதாகும்.

**அறிவின் இலக்கணம் :**

அறிவு என்பது, மனத்தை அது விரும்பும் போக்கில் செல்லவிடாமல் தடுத்துத் தீமைகளிலிருந்து விலக்கி, நல்வழியில் செலுத்த வேண்டும். அன்றியும், அறிவு என்பது, எவர் எப்பொருளைக் கூறினாலும், கேட்ட அப்பொருளின் உண்மைப் பொருளைத் தெளிந்து அறிவதாக இருக்க வேண்டும். உலகில் சான்றோர் எதனை உயர்ந்த நெறியாகக் கொண்டு கடைப்பிடிக்கின்றனரோ, அந்நெறியில் இயைந்து செயல்படுமாறு நெறிப்படுத்திச் செல்ல வைப்பதே, சிறந்த அறிவாகும்.

**அறிவுடையார் அடையும் பயன் :**

மெய்ப்பொருளைக் கண்டு தெளிவுபெறும் அறிவுடையார், பின்னர் வரப்போவதை முன்னரே அறிந்து, தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் வல்லமை பெற்றிருப்பர். எனவே, அவர் மனம் நடுங்கும்படியாக வரும் துன்பம் எதுவும் இருக்காது.

இவ்வகையில் மெய்ம்மை காணும் அறிவினைப் பெற்றவர், எத்தகைய இடர்ப்பாடும் எய்தாது நலம்பெற வாழ முடியும் என்பதனை வள்ளுவம், 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் தெளிவுபடக் கூறியுள்ளது.

**45. பண்டைக்காலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

ஒரு நாட்டின் முன்னேற்றம், கல்விமேம்பாட்டுடன் தொடர்புடையது. கல்வியின் நோக்கமும், அமைப்பு முறைகளும் மாற்றம் அடைந்து வந்துள்ளன. இலக்கிய, இலக்கணங்கள், காலநிலை வளர்ச்சியைக் காட்டுகின்றன.

**கற்றலும் கற்பித்தலும் :**

பண்டைக்காலத்தில் கற்பித்தல் என்பது, ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே நடைபெறும் கருத்துப் பரிமாற்றம் ஆகும். திண்ணைப் பள்ளிக்கூடங்களில், ஆசிரியரே அதிக முக்கியத்துவம் வாய்ந்தவராக இருப்பார். சரளமாக எழுத, பேசுகின்ற மொழித்திறன் மிக்கவராய் இருப்பார். ஆசிரியரே கற்பித்தல் தன்மையை முடிவு செய்வார்.

முதலில் நெடுங்கணக்கு முறைகளிலே கற்பித்தல் நிகழும். இலக்கியம், இலக்கணம், வாய்பாடு ஆகிய அனைத்தையும் முழுமையாக மனனம் செய்து, தெளிவுபெறச் செய்வார். வினாக்கள் கேட்பதன் வாயிலாக, மாணவர்களிடம் மதிப்பீடும் செய்வார். மாணவர்களின் கற்றல் திறனுக்கேற்பப் பாடத்திட்டங்களும் மாற்றம் பெறும். மாணவர்களின் ஆர்வத்திற்கேற்ப வியாபாரம் பற்றிய செய்திகளும், கணிதமுறைகளும் கற்பிக்கப்படும்.

**கற்றல் செயல்பாடுகள் :**

மாணவரது கற்றல் தன்மைக்கு, முக்கியத்துவம் அளிக்கப்படும். மொழித்திறனும் செயல்திறனும் கண்காணிக்கப்படும். மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து செயல்பட, வாய்ப்புகள் அளிக்கப்படும். மாணவர்கள், வினாக்கள் கேட்டும் விடைகள் கூறியும் கற்று வருவார்கள். அடிப்படையான நூல்கள் எல்லாம், மனனமாகவே இருக்கும். நிகண்டு, வாய்பாடுகளை எல்லாம், தலைகீழ்ப் பாடமாக மனனம் செய்வர்.

www.Padasalai.Net


அகராதி, அந்தாதி, எதுகை, மோனை வகையில் செய்யுட்களை ஞாபகத்தில் கொள்வர். ஞாபகசக்தி அதிகரிப்பதற்காகப் பூ, மிருகம், ஊர் போன்ற பெயர்களை மறுநாள் வந்து சொல்லுவர். கற்றல் என்பது, பள்ளியில்மட்டுமே என்றில்லாமல், வாழ்நாள் முழுவதும் இருக்கும். 'குருவை மிஞ்சிய சீடர்' என்று சொல்லும்வகையில், மாணவர்கள், புதியன படைக்கும் ஆற்றல் பெற்றிருப்பர்.

(அல்லது)

**"மயிலையார் ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.**

**ஆசிரியப் பணியும் ஆய்வுக் கட்டுரைகளும் :**

**தொடக்ககால ஆய்வுகள் :**

'கிறித்தவமும் தமிழும்' என்னும் நூல், மயிலை சீனி. வேங்கடசாமியின் முதல் ஆய்வு நூலாகும். சமயக் காழ்ப்புணர்வு இன்றிப் 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' ஆகிய நூல்களை இயற்றினார். வட்டெழுத்து, கோலெழுத்து, பிராமி ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தார். அதனால் கல்வெட்டுச் சாசனங்களை எளிதாக வாசித்து, 19ஆம் நூற்றாண்டு மன்னர்கள் குறித்துத் தொடர்ந்து எழுதினார். களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்துடன், 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்னும் நூலை வெளியிட்டார்.

**கலை, கல்வெட்டு ஆய்வுகள் :**

ஓவியங்கள் குறித்து ஆய்வு செய்தார். பல்லவர், சோழர்கால ஓவியங்கள், சித்தன்னவாசல் ஓவியங்கள் குறித்தும் ஆய்வு செய்துள்ளார். கட்டடம், சிற்பம், ஓவியம் குறித்த ஆய்வால், 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்னும் கவின்கலை நூல், தமிழில் முதன்முதலாக வெளிவந்தது.

இந்நூல், தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்றது. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள் ஆகியன எழுதியதோடு, நுண்கலைகளுக்குப் படங்களைத் தாமே வரைந்து வெளியிட்டார். இது இவரது கலைத்திறனுக்குச் சான்றாகும். தொல்காப்பியம், சங்க இலக்கியம், கல்வெட்டு ஆகியவற்றை ஆய்வு செய்து, நூல்களை எழுதினார். 'தமிழ்நாட்டு வரலாறு' என்னும் நூல், தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் மீட்டு உருவாக்கம் செய்தது எனக் கூறலாம்.

**பன்மொழிப் புலமை :**

மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கில மொழிகளில் பயிற்சியுடையவர். தமிழகத்தின் வரலாற்றை அடையாளப்படுத்தியவர். இவருடைய ஆய்வுகள் தமிழுலகுக்கு முதன்மையான ஆய்வாகும். மதுரைப் பல்கலைக்கழகம், 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்றும், அறிஞர் பெருமக்கள், 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்றும் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்தனர். தமது ஆய்வால் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர் ஆவார்.

**46. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.**

**மூழ்கும் பயிரும் மருதனின் பதற்றமும் :**

முற்றிய நாற்றை நட்டு அதிக உரம் போட்டு, எப்படியாவது 'சம்பா' அறுவடை செய்துவிடலாம் என எண்ணியிருந்தனர் காவிரியின் கடைமடைக்காரர்கள். அதிக மழையின் காரணமாகப் பயிர்கள் எல்லாம் தண்ணீரில் மிதக்கும் நிலைக்கு வந்தன. வளவனாற்றின் வடகரையில் நின்று, வடக்கே பார்த்த மருதனுக்குப் பதற்றம் ஏற்பட்டது. காரணம், பெய்தமழை போதாது என்று, வானிலை அறிக்கையாக வானொலி, பலத்தமழை பெய்யும் என்று அறிவித்தது.

**வழி பிறந்தது; விழி மலர்ந்தது :**

மறுபடியும் பெருமழையா என ஆயிரம் சிந்தனைகளோடு கரைவழியே நடந்தான் மருதன். உபரித் தண்ணீர் வடிய வேண்டிய வடிகால் மதகை எட்டிப் பார்த்தான். ஊரைச் சுற்றி வளைந்து ஓடிவரும் மூன்று மைல் நீள வடிவாய்க்கால் முழுவதும் காட்டாமணக்குச் செடிகள் வளர்ந்து, வாய்க்காலை ஆக்கிரமிப்புச் செய்திருந்தன. இந்தப் பேய்ச்செடிகளைப் பிடுங்கி எறிந்தாலே, உபரி நீர் வடியத் தொடங்கிவிடும். வயல்களில் தேங்கியுள்ள நீரும் வடிந்தோடும்; கிராமமும் தப்பித்துக் கொள்ளும் எனச் சிந்தித்து, வழி கிடைத்துவிட்டது என எண்ணி, மகிழ்ச்சி அடைந்தான்.

www.Padasalai.Net



**உதவி நாடலும் உதவா மக்களும் :**

வடிவாய்க்கால் வளைவில் வலை போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தான் மாரிமுத்து. அவனிடம் காட்டாமணக்குச் செடிகளை நீக்கிப் பயிர்களைக் காப்பாற்ற முடியும் என்றும், ஆளுக்கு ஒரு செடியைப் பிடுங்கும் வழியையும் சொன்னான் மருதன். மீன் பிடிப்பதிலே கண்ணாயிருந்தான் மாரிமுத்து. பொறுமையிழந்த மருதன், ஊரில் வசதி படைத்த கிழவரிடம் எடுத்துச் சொல்லி, வீட்டுக்கு ஒருவராக வந்து, செடிகளை அகற்ற வேண்டுகோள் வைக்க வேண்டும் என்றான்.

ஊராருக்குச் செலவு என நினைத்து, மகளின் ஊருக்குச் செல்வதாகக் கூறினார் கிழவர். அந்த ஊரின் முதல் பட்டதாரி பிரேம்குமார், நடிகர் மன்றத்தின் தலைவனும் ஆவான். அவனும் நடிகர் வருகிறார்; பல வேலைகள் இருக்கின்றன எனச் சொல்லித் தப்பித்தான். மருதன், சோர்ந்து வீடு சேர்ந்தான்.

**தன் கையே தனக்குதவி :**

மனமும் உடம்பும் சோர்ந்து வீடு திரும்பிய மருதனை, அவன் மனைவி அல்லி, பதட்டமாய்ப் பார்த்தாள். குடிக்கச் சுடுகஞ்சி கொடுத்தாள். "எந்த நிலம் எப்படிப்போனால் நமக்கென்ன..." என அக்கறையின்றிப் பேசினாள் அல்லி. அவசரமாய் உணவைச் சாப்பிட்டான்; ஊமையாய்ப் படுத்துவிட்டான். இரவு முழுவதும் அவனால் தூங்க முடியவில்லை. அதிகாலையில் எழுந்து சென்று, வடிவாய்க்காலில் குளிர்ந்த இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியே நின்றபடி, காட்டாமணக்குச் செடிகளை அறுத்து எறிந்துகொண்டிருந்தான்.

**ஊரைக் கூட்டிய உழைப்பாளி மருதன் :**

தனியே காட்டாமணக்குச் செடிகளை அகற்றிக் கொண்டிருந்த மருதனோடு, மனைவி அல்லியும் சேர்ந்துகொண்டாள். இருவரின் செயலைப் பார்த்த மாரிமுத்துவும், மீன் பிடிப்பதை விட்டுவிட்டுக் கை கொடுக்க முன்வந்தான். தன் மகள் ஊருக்குப் புறப்பட்டு வில்வண்டியில் போய்க் கொண்டிருந்த கிழவர் காளியப்பனின் பார்வை, வடிவாய்க்கால் பக்கம் திரும்பியது. வண்டியில் இருந்து இறங்கி, இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு, வாய்க்காலில் இறங்கினார். செய்தி ஊருக்குப் பரவி, ஒவ்வொருவராக வரத்தொடங்கினர்.

(அல்லது)

**மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.**

**நேரில் கண்ட சிவாஜி :**

சுள்ளிக்காடு என்னும் கட்டுரையின் ஆசிரியர் பாலச்சந்திரன், சிவாஜி கணேசனைச் சந்திக்க, அவர் வீட்டிற்கு ஒருமுறை சென்றிருக்கிறார். அப்பொழுதுதான் முதன்முதலாக அவரைப் பார்க்கிறார். பார்த்த காட்சியை விவரிக்கிறார். கைகள் வீசி, பார்வை இடை அசையாது மெல்ல மெல்லச் சிங்கநடை நடந்து வரும் அந்த மகாநடிகனைப் பார்த்தபொழுது, இராஜராஜசோழன் வருகையைப் போலவே இருந்தது" என்று எழுதுகிறார்.

**பிறப்பும் நடிப்பும் :**

விழுப்புரம் சின்னையா கணேசன் என்பதன் சுருக்கமே, வி. சி. கணேசனாகும். பின்னாளில் 'இமயம்', 'நடிப்புப் பல்கலைக்கழகம்' என்றெல்லாம் போற்றப்பட்ட நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் பெயர்தான் இது. கணேசன், விழுப்புரத்தில் பிறந்தார். ஆங்கிலேயரால் சிறை சென்ற தம் தந்தையை, ஒன்பதாவது வயதில்தான் முதன்முதலாகப் பார்த்திருக்கிறார். அவர், பள்ளிக்கூடத்தில் படித்ததேயில்லை. ஐந்து வயது ஆகும்போதே, குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக நாடகக் குழுவில் சேர்ந்தார்.

**நாடக நடிகர் சிவாஜி :**

அண்ணாத்துரையின் நாடகத்தில் சத்ரபதி சிவாஜியாக வேடமேற்று நடித்தார். அதைப் பார்த்த பெரியார், வி. சி. கணேசனுக்குச் 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டார். அந்தப் பெயரே, அவருக்கு இறுதிவரை நிலைத்தும் விட்டது. பல நாடகங்களில் அதிக உழைப்புள்ள பெரும் பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். வீரபாண்டியக் கட்டபொம்மன் என்ற திரைப்படம்தான், சிவாஜிகணேசனை உலகப் புகழ்பெற்ற நடிகராய் மாற்றியது.

www.Padasalai.Net



**பெற்ற விருதுகள் :**

பள்ளிப் படிப்பையே எட்டாத இந்த நடிப்பின் சிகரம், படித்தவரெல்லாம் பாராட்டும் அளவிற்குப் பல விருதுகளைப் பெற்றுப் புகழைப் பெற்றார். ஆப்பிரிக்க – ஆசியத் திரைப்பட விழா, கெய்ரோவில் நடைபெற்ற பொழுது, சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட்டது. தமிழக அரசின் கலைமாமணி விருது, மத்திய அரசின் தாமரை விருதுகள் (பத்மஸ்ரீ, பத்ம பூஷன்) மற்றும் தாதாசாகெப் பால்கே விருது, பிரெஞ்சு அரசு இவரின் நடிப்பைப் பாராட்டி அளித்த செவாலியர் விருது என்பவை, இவரது நடிப்பிற்குக் கிடைத்த நற்சான்றுகளாகும்.

**பிறவிக் கலைஞர் :**

நடிப்புலகின் சக்கரவர்த்தி என எல்லோரும் வியக்கின்ற மகத்தான நடிகர் சிவாஜிகணேசன். நவரச உணர்வுகளைத் தம் முகக்குறிப்புகளாலும் உடல்மொழிகளாலும் சிறப்பாக வெளிப்படுத்தி நடித்த மகா நடிகர். அவரை நேரில் காணச் சென்றவர்களுள் ஒருவர், "வீரபாண்டியக் கட்டபொம்மன் வசனம் ஏதும் ஞாபகம் இருக்கிறதா?" என்று, கேட்டுவிட்டார். "தலை போனாலும் மறக்கமுடியுமா?" என்று பதில் சொல்லிவிட்டு, சிறிது நேரம் கைகூப்பி அமர்ந்துவிட்டார்.

பின் மெதுவாக நிமிர்ந்து, சட்டென விசுவரூபமெடுத்ததுபோலத் திரும்பி நின்றார். மனித ஆத்மாவை நடுநடுங்க வைத்த வீரபாண்டியக் கட்டபொம்மனாகவே தோற்றமளித்தார். "நீ ஏர் பிடித்தாயா? களை வெட்டினாயா?" என வீரவசனம் தங்குதடையின்றிப் பொங்கி முழங்கியது. பிறவிக்கலைஞர் என்பதை மெய்ப்பிக்க, இதுவும் ஒரு சான்றாக அமைந்தது.

## பகுதி – V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1 × 6 = 6**

**அ) "விண்வேறு" எனத் தொடங்கும் 'இதில் வெற்றி பெற' பாடலை அடிமாறாமல் எழுதுக.**

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

**ஆ) "உடைத்து" என முடியும் குறட்பாவை எழுதுக.**

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள் – 4

## பகுதி – I பொதுத்தமிழ்

நேரம் : 15 நிமிடங்கள் + 3 மணி மதிப்பெண் : 90

### பகுதி – I

**குறிப்பு** : (i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14 × 1 = 14**

(ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. 'இளந்தமிழே' கவிதை, இடம்பெற்றுள்ள நூல் ______.

அ) ஒளிப்பறவை ஆ) சர்ப்பயாகம் இ) சூரியநிழல் ஈ) நிலவுப்பூ

**விடை** : ஈ) நிலவுப்பூ

2. பொருத்துக.

அ. குரங்குகள் – i. கன்றுகளைத் தவிர்த்தன

ஆ. பசுக்கள் – ii. மரங்களிலிருந்து வீழ்ந்தன

இ. பறவைகள் – iii. குளிரால் நடுங்கின

ஈ. விலங்குகள் – iv. மேய்ச்சலை மறந்தன

அ) i, iii, iv, ii ஆ) iii, i, ii, iv இ) iii, ii, i, iv ஈ) ii, i, iii, iv

**விடை** : ஆ) iii, i, ii, iv

3. பயன்தூக்கார் செய்த உதவி ______.

அ) வையகமும் வானகமும் ஆற்ற லரிது ஆ) ஞாலத்தின் மாணப் பெரிது

இ) பனைத்துணையாக் கொள்வர் ஈ) கடலின் பெரிது

**விடை** : ஈ) கடலின் பெரிது

4. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு யாது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

**விடை** : இ) நாய்

5. சென்னை, வெறும் நகரம் மட்டுமன்று, நம்பிக்கை மையம்; காரணம் ______.

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள் வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) அ, ஆ, இ அனைத்தும்

**விடை** : ஈ) அ, ஆ, இ அனைத்தும்

6. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) சோழன் நெடுங்கிள்ளியைப் பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையைக் கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

**விடை** : ஆ) சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார்

7. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் ______.

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

**விடை** : இ) தொல்காப்பியம்

www.Padasalai.Net


8. பொருத்தி விடை தேர்க.

அ. அவன் அவள் அவர் – 1. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ. நாங்கள் முயற்சி செய்வோம் – 2. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ. நாம் முயற்சி செய்வோம் – 3. தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ. நாங்கள், நாம் – 4. பதிலிடு பெயர்கள்

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

**விடை :** அ) 4, 1, 2, 3

9. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.

இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்.

**விடை :** இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.

10. Passport – என்பதன் கலைச்சொல் ______.

அ) குடும்ப அட்டை ஆ) ஊர்திப்பட்டை இ) கடவுச்சீட்டு ஈ) நுழைவுச்சீட்டு

**விடை :** இ) கடவுச்சீட்டு

11. ‘காசு’ என்னும் வாய்பாட்டால் முடிந்த ஈற்றடி ______.

அ) பழக்கத்தால் வாய்ப்பதுதான் பார் ஆ) கூசாமல் கண்காத்தல் கூறு

இ) ஓயாமல் நீயும் உணர்த்து ஈ) நெடிதலையில் நிற்பாய் நினை

**விடை :** ஆ) கூசாமல் கண்காத்தல் கூறு

12. கூற்று : உவமை உருவம்போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

காரணம் : எவ்வகையான படிமமாக இருந்தாலும், அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

**விடை :** அ) கூற்று சரி, காரணம் தவறு

13. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

அ) காதை – 1. கந்தபுராணம்

ஆ) சருக்கம் – 2. சீவகசிந்தாமணி

இ) இலம்பகம் – 3. சூளாமணி

ஈ) படலம் – 4. சிலப்பதிகாரம்

அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 இ) 3 4 2 1 ஈ) 4 3 1 2

**விடை :** அ) 4 3 2 1

14. கூற்று : 19ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.

காரணம் : பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள், குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.

அ) கூற்று சரி; காரணம் தவறு. ஆ) கூற்றும் சரி; காரணமும் சரி.

இ) கூற்றும் தவறு; காரணமும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

**விடை :** ஆ) கூற்று சரி; காரணம் சரி.

www.Padasalai.Net



## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 2 = 6**

**15. தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்திப் போற்றுவன எவை?**

- தமிழ் இலக்கியங்கள், கொடைத்தன்மையை வியந்து போற்றுகின்றன.
- எதிர்பார்ப்பு இல்லாமல் கொடுக்கும் தன்மையை வலியுறுத்துகின்றன.
- கொடுப்பதில் மகிழ்ச்சி காணும் பண்பைப் போற்றுகின்றன.

**16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

- எதிர்பாராத நிகழ்வுகளை, அவ்வப்போது வந்துசெல்லும் விருந்தாளியாக, ஜலாலுத்தீன் ரூமி உருவகப் படுத்துகிறார்.

**17. வசனம், கவிதை வேறுபாடு தருக.**

- சொற்களைத் தேர்ந்து சேர்க்கும்போது எதுகை மோனை இல்லாமல், அடி அளவை அறிந்திடாமல் வார்க்கின்ற வடிவமே வசனமாகும்.
- எதுகை, மோனை பொருந்த யாப்பிலக்கணத்திற்குள் வார்த்தைகள் அடங்கி அமைவது கவிதையாகும்.

**18. "தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்தலமோங்கும் கந்தவேளே" – தொடருக்குப் பதவுரை தருக.**

- தருமமிகு சென்னையில் – அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின்
- கந்தகோட்டத்துள் வளர்தலமோங்கும் – கந்த கோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளி இருக்கும் கந்தவேளே – கந்தன் என்னும் வேளே! (தலைவனே)

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 2 = 4**

**19. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.**

- பாத்திரங்களின் மனக்கவலைகள், அலைக்கழிப்புகள் ஆகியவற்றை எதிரொலிப்பதும், எடுத்துக்காட்டு வதுமாகப் பின்னணி இசை அமைகிறது. அத்துடன், பாத்திரங்களின் உணர்வுகளுக்கு விரிவுரை வழங்குவ தாகவும் இருக்கும்.

**20. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**

**"கடாஅ யானைக் கலிமான் பேக" – இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும், அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**

- படாஅம், கெடாஅ, கடாஅ – செய்யுளிசை அளபெடைகள்
- சொற்களின் இடையில் அமைந்த உயிர்நெடில் எழுத்துகள், செய்யுளில் ஓசைநயத்தை ஏற்படுத்த, நீண்டு ஒலித்துள்ளன.

**21. புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு வரைக.**

- தற்காலிகத் தங்குமிடம் அல்லது தற்காலிகப் புகலிடம் 'புக்கில்' எனப்படும். திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' எனப்படும்.

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 × 2 = 14**

**22. உவமைத்தொடர் ஒன்றினைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

அ. **கிணற்றுத்தவளைபோல் :** செய்தி இதழ்களைப் படிக்காமல் பாடநூல்களோடு மட்டுமே உறவாடும் மாணவர்கள், **கிணற்றுத் தவளைபோல்** உலகியல் அறிவின்றி வாழ்கிறார்கள்.

ஆ. **தாமரையிலை நீர்போல :** உண்மையான துறவியர், உலக ஆசைகளில் மனத்தைப் பறிகொடுக்காமல் **தாமரையிலை நீர்போல** இருப்பர்.

www.Padasalai.Net


23. புதிர்க்கேற்ற விடையை அறிக

அ) அடைமழை பெய்த அடுத்த, நாள்
படைபடையாய் வந்ததாம்
பரங்கி நாட்டு விமானம்;
எதிரி சுடாமலேயே
இறகொடிந்து இறந்ததாம் – எது?
**விடை :** ஈசல்

ஆ) தண்ணீரும் மழையும் இல்லாமல்
உடற்பயிர் பச்சையாய் இருக்கிறது;
பாக்கு வெற்றிலை போடாமலே
வாய் சிவப்பாய் இருக்கிறது? – எது?
**விடை :** பச்சைக்கிளி

24. **கீழ்க்காணும் சொற்களில் ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**அ) தந்தனன் – தா (த) + த் (ந்) + த் + அன் + அன்**

**தா** – பகுதி, 'த' ஆனது விகாரம்; **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம்; **த்** – இறந்தகால இடைநிலை; **அன்** – சாரியை; **அன்** – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

**ஆ) காவினெம் – காவு + இன் + எம்**

**காவி** – பகுதி; **இன்** – இறந்தகால இடைநிலை; **எம்** – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி.

25. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

**ஆ) கோவில்** – இறைவன் உறைவிடமாகக் கோவில் திகழ்கிறது.
பண்டைக் காலத்தில், கோ (அரசர்), வில் ஏந்திப் போரிட்டார்.

**அ) வெங்காயம்** – இந்தியாவில் வெங்காயம் உணவுப் பொருளாக உள்ளது.
துறவியர் தம் உடலை வெம் (துன்பம் தரும்) காயமாகக் கருதினர்.

26. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) நிலத்தக் கெளறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
நிலத்தைக் கிளர வேண்டுமடா! அப்பொழுதுதான் வயிறு நிரம்பும்.

ஆ) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.
அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியதுதானே?

27. **பிறமொழிச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் எழுதுக.**

அ) அவசாசம் – நேரம்
ஆ) சம்பளம் – ஊதியம்
இ) சர்க்கார் – அரசாங்கம்
ஈ) ஜீவனம் – வாழ்வு

28. **பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

அ) ஊண் (உணவு) – ஊன் (இறைச்சி) – சான்றோர், **ஊணாக ஊனை** உண்ணார்.

ஆ) தின்மை – திண்மை – உடல் **திண்மை**யுடையார், எளியவர்க்குத் **தின்மை** செய்தல் கூடாது.

29. **கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொற்களைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

அ) நேற்று முதல் ______ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
நேற்று முதல் **அணையின்** நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

ஆ) முருகன் ______ (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
முருகன் **வேகமாகச்** சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

30. **தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) வாழைக்**காட்டில்** குயில்கள் **அலறிக்**கொண்டும் காகங்கள் **கூவிக்**கொண்டும் இருந்தன.
வாழைத்**தோட்டத்தில்** குயில்கள் **கூவிக்**கொண்டும், காகங்கள் **கரைந்து**கொண்டும் இருந்தன.

ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் **குட்டியும்** யானைக் **குட்டியும்** கண்டேன்.
வனவிலங்குக் காப்பகத்தில், சிங்கக் **குருளையும்** யானைக் **கன்றும்** கண்டேன்.

www.Padasalai.Net



## பகுதி – III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

**31. “செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**

**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்” – இத்தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- செங்கதிர்களைப் பரப்பும் மாலைநேரத்துச் சூரியன், மேற்கில் மலைமேட்டின்மேல் தலையைச் சாய்ப்பான்; அதாவது, மறைவான். அவ்வேளையில், அந்தி நேரத்தில் வானம் முழுவதும் செந்நிறம் பரவும்.
- அதே வேளையில், விண்ணில் மீன்கள் கண்சிமிட்டும். இக்காட்சி, நாளும் நடைபெறும்.
- இந்த வரிகளைப் படிக்கின்றபோதே, மனக்கண்களால் இக்காட்சியைக் கண்டு சுவைக்க முடிகிறது.

**32. “வெயில் கண்ட பறவைகள் உற்சாகம் மீறிட**

**சங்கீதம் இசைக்கின்றன” – இடம் சுட்டி விளக்குக.**

**இடம் :** ‘பிறகொரு நாள் கோடை’ கவிதையில் கவிஞர் அய்யப்ப மாதவன், மழைக்காலத்தில் சூரியனின் திடீர்ப் பயண விரைவினை வருணிக்கும்போது, இவ்வடிகள் இடம்பெறுகின்றன.

**விளக்கம் :** சூரியன் திடீரெனத் தோன்றியதும் மழை பெய்த சுவடு மறைகிறது. நீர்த்துளிகள் மறைய, வானம் மேகம் நீங்கி வெளிச்சம் பெறுகிறது. அதனால் வெயிலைக் கண்டு மகிழ்ந்த பறவைகள், தங்கள் துயர் நீங்கியதுபோது உற்சாகம் பீறிட ஒலி எழுப்புகின்றன. இதனைக் கவிஞர், ‘பறவைகள் உற்சாகம் மீறிச் சங்கீதம் இசைக்கின்றன’ என்கிறார்.

**33. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வினை விளக்கி எழுதுக.**

- காட்டிற்குப் போன இராமன், கங்கையைக் கடக்க வேடுவர் தலைவன் குகன் உதவினான். பேரரசனாக இருப்பினும், வேடன் குகனிடம் நட்பு முகிழ்த்ததால், உடன்பிறந்தானாக ஏற்றான்.
- கிட்கிந்தையில் அனுமன் அழைத்துவந்த சுக்ரீவனை “உன் கிளை எனது. என் காதல் சுற்றம் உன் சுற்றம்; நீ என் இன்னுயிர்த் துணைவன்” எனக் கூறி, உடன்பிறந்தானாக இராமன் ஏற்றான்.
- சீதையைக் கவர்ந்துவந்தது தவறெனக் கூறியதை ஏற்காமல், அதற்காகக் கடிந்த அண்ணன் இராவணனை விலக்கித் தன்னிடம் அடைக்கலம் வேண்டி வந்த வீடணனை இராமன், உடன்பிறந்தானாக ஏற்றான். இவையே, **“குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான”** நிகழ்வாகும்.

**34. கீழ்க்காணும் குறளில் ஏகதேசஉருவகஅணி எவ்வாறு பயின்று வந்துள்ளது என்பதை விளக்குக.**

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

- செய்யுளில் கூற எடுத்துக் கொண்ட பொருள்களில் **ஒன்றைமட்டும் உருவகம் செய்து, பிறவற்றை உருவகம் செய்யாமல் கூறுவது, ஏகதேசஉருவகஅணியாகும்.**
- இக்குறளில் சுற்றத்தவரைப் புணையாக உருவகம் செய்தவர், சினத்தை நெருப்பாக உருவகம் செய்யாமையால், ஏகதேச உருவக அணி பயின்று வந்துள்ளது.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 × 4 = 8**

**35. நீவிர் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்?**

- நான் ஆசிரியரானால், எதையும் பொறுமையுடன் எடுத்துச்சொல்லிப் புரியவைப்பேன்.
- மாணாக்கர்களிடம் உண்மையான அன்பும் அக்கறையும் கொண்டவனாய் நடந்துகொள்வேன்.
- தேர்ச்சிக் குறைவு, மாறுபட்ட பழக்கவழக்கம் கண்டால், அக்கறையோடு கடிந்துகொள்வேன்.
- தவறு செய்தால், தவறு என்பதைப் புரிய வைப்பேன்.
- இனிய அன்பான வார்த்தைகளையே பயன்படுத்தி நெறிப்படுத்துவேன்.

www.Padasalai.Net



**36. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**

- திரைப்படத்தில் காட்சி சிறப்பாக அமைந்தால், வசனம் இரண்டாம் பட்சமாகிவிடும். திரைப்படத்தில் வசனம் இன்றி, காட்சிகளை அடுத்தடுத்து வைத்துக் கதையை நகர்த்துவர். திரைப்படத்தில் நடிப்பவரை முப்பரிமாணத்தில் காட்டும் காட்சிகள் இடம்பெறும்.
- ஒருவன் ஓடிவருவதாகக் காட்டிவிட்டு 'என்னாச்சி' என்று கேட்டால் போதும். இது காட்சி மொழியாகி விடும். ஒருவன் உணர்ச்சியைக் காட்ட முகத்தைக் காட்சியாகக் காட்டினால்போதும்.
- கட்டுப்படுத்த முடியாத கோபத்தைக் காட்ட நடிகன் கத்த வேண்டியது இல்லை; கண்ணாடிக் குடுவையை இறுகப்பிடித்து உடைப்பதைக் காட்டினால்போதும். இப்படியாகக் கதை நகர்வுக்கு திரைப்படக் காட்சி உதவுகிறது.

**37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – எவ்வாறு?**

- கணவன், மனைவி, மகன் ஆகிய மூவரும் வாழ்கின்ற தனிக்குடும்பம் வளர்ச்சி அடைந்தபோது, தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்பமே, மேலும் வளர்ந்து கூட்டுக் குடும்பமாக அமைந்தது.
- கணவனின் சகோதர சகோதரிகள், தாய், தந்தையர் இணைந்த குடும்பம் வளர்ந்து, இன்றைய கூட்டுக் குடும்பமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இவ்வகையில் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியாக இன்றைய கூட்டுக்குடும்பம் விளங்குகிறது.

**38. நேர மேலாண்மை பற்றிய சீனக் கதையைக் கூறுக.**

- சீனத்தில் யாங்செள என்கிற பகுதியில், நீச்சல் வீரர் பலர் இருந்தனர். ஆழமான நதியைக் கடக்கும்போது வெள்ளம் ஏற்படப் படகு கவிழ்ந்தது. பலர் நீந்திக் கரையை அடைந்தனர்; சிறந்த நீச்சல் வீரனோ தத்தளித்துத் தடுமாறினான்.
- "நீ அதிசிறந்த நீச்சல் வீரனாயிற்றே ஏன் தத்தளிக்கிறாய்?" என்று கேட்போது, "என் கச்சையில் ஆயிரம் பொற்காசுகள் இருக்கின்றன" என்று கூறினான். "அவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு நீந்திக் கரைசேர்" என வலியுறுத்தினர். அவனோ, அவற்றைவிட மனமில்லாமல் தன் அரிய உயிரை நீத்தான். 'எந்த நேரத்தில் எது முக்கியம் என்று சரியான முடிவு எடுப்பதில்தான் வாழ்வின் வெற்றியே அடங்கியிருக்கிறது' என்ற இந்தச் சீனக்கதை, நேர மேலாண்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 × 4 = 12**

**39. 'நுணலும் தன் வாயால் கெடும்' என்னும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுது.**

மிகவும் வசதியாக வாழ்ந்தவர் பரந்தாமன். அவர் மகன் எல்லப்பன். ஊரில், தன்னை அறிவாளியாகக் காட்டிக் கொண்டவன். வலிந்து சென்று பிறருக்கும் அறிவுரை கூறினான். ஊர்மக்கள் அவனை, 'எல்லாம் தெரிந்த எல்லப்பன்' என அழைத்தனர். பேராசிரியர் ஒருவர், எல்லப்பன் வீட்டுக்குச் சென்றார். அவர் பேராசிரியர் என்பதை அறியாத எல்லப்பன் வழக்கம்போலத் தன் பெருமைகளை அளவின்றிக் கூறித் தன் முதுகைத் தானே தட்டிக் கொடுத்துக் கொண்டான். அவன் கோமாளித்தனத்தை உணர்ந்த பேராசிரியர், அவனுடன் தமிழ், ஆங்கிலம், பொருளாதாரம், அறிவியல் ஆகியவை குறித்துக் கலந்துரையாடினார். தன் சாயம் வெளுத்துவிட்டதை அறிந்த எல்லப்பன், ''ஐயா! '**நுணலும் தன் வாயால் கெடும்**' என்பார்கள்! என்னை மன்னித்து விடுங்கள்'' என்று வேண்டிக்கொண்டான்.

**40. பொதுச்சொத்துகளைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் நீவிர் செய்ய வேண்டிய பணிகளைப் பட்டியலிடுக.**

[நம்முடைய வீட்டின்மீது நமக்கு இருக்கும் பொறுப்பினைப்போலவே, பொதுச்சொத்துகளின்மீதும் நமக்குப் பொறுப்பும் கடமையும் உண்டு. எவையெல்லாம் பொதுச்சொத்துகள் எனப் பட்டியலிட்டு, அவற்றைப் பாதுகாக்கும் வழிமுறைகளையும் கூறுக.]

| பொதுச்சொத்துகள் | அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் |
|---|---|
| அரசுப் பேருந்து | கல்லெறிந்து உடைக்கக்கூடாது. அதனால் இழப்பு நமக்கே! |
| வழிபாட்டுத் தலம் | புனிதம் காக்கப்பட வேண்டும்; மாசுபடுத்தக் கூடாது. சமய நல்லிணக்கம் வளர்க்க வேண்டும். |
| பள்ளிக்கூடம் | நம் உறைவிடமும் அறிவு பெறும் இடமும் ஆதலால், வகுப்பறையையும் பள்ளிச் சூழலையும் தூய்மையாக வைக்க வேண்டும். |
| மருத்துவமனை | கழிப்பிடத் தூய்மை தேவை; மருத்துவக் கழிவுகளைக் கண்ட இடங்களில் கொட்டி வைக்கக் கூடாது. அமைதி காக்க வேண்டும். |

www.Padasalai.Net


**41. தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner everywhere.

   கற்றல் என்பது பெரிய (பொக்கிஷம்) செல்வம்; அது, தன்னை உடையவரை அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் பின்தொடரும்.

2. A new language is new life.

   புதியதொரு மொழியை அறிவது, புது வாழ்வுக்கு வழியாகும்.

3. If you want people to understand you, speak their language.

   மக்கள் உன்னைப் புரிந்துகொள்ள விரும்பினால், நீ அவர்கள் மொழியில் பேசு.

4. Knowledge of languages is the doorway to wisdom.

   பலமொழி அறிவு என்பது, அறிவு வளம்பெற வாயிலாகும்.

(அல்லது)

**“அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது”** – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

இக்குறளில், **நிரல்நிறைஅணி** பயின்று வந்துள்ளது.

ஒரு செய்யுளில் முன்னர் கூறியவற்றோடு தொடர்புடைய செய்திகளைப் பின்னர்க் கூறும்போது, முன்னர்க் கூறிய வரிசையில், நிரலே நிறுத்தி, நேரே பொருள் கொள்ளுமாறு கூறுவது, ‘நிரல்நிறைஅணி’யாகும்.

இக்குறளில், ‘இல்வாழ்வு சிறக்க அன்பும் அறமும் இன்றியமையாதன; அவை ‘இல்வாழ்வின் பண்பும் பயனுமாகும்’ என்பது வலியுறுத்தப்பட்டது. இவ்வகையில், ‘இல்வாழ்க்கைக்கு அன்பு, பண்பு என்றும் அறம், பயன் என்றும் இயையுமாறு கூறியுள்ளமையால், (முறை) **நிரல்நிறைஅணி** பயின்று வந்துள்ளது.

**42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.**

மங்கைய ராகப் பிறப்பதற்கே நல்ல
    மாதவம் செய்திட வேண்டுமம்மா!
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ இந்தப்
    பாரில் அறங்கள் வளருமம்மா!
அல்லும் பகலும் உழைப்பவரார்? உள்ளத்து
    அன்பு ததும்பி எழுபவரார்?
கல்லும் கனியக் கசிந்துருகித் தெய்வக்
    கற்பனை வேண்டித் தொழுபவரார்?
அன்பினுக் காகவே வாழ்பவரார்? அன்பில்
    ஆவியும் போக்கத் துணிபவரார்?
இன்ப உரைகள் தருபவரார்? வீட்டை
    இன்னகை யாலொளி செய்பவரார்?

**– கவிமணி தேசிக விநாயகம்**

**மையக்கருத்து :**

மங்கையரே, அறம் செய்பவர்; இரவு பகலாக உழைப்பவர்; உள்ளத்தில் தோன்றும் அன்பினால். வீட்டையும் நாட்டையும் ஒளிபெற வைப்பவர்; அன்பிற்காக வாழ்பவர்; அன்பிற்காக உயிரையும் கொடுக்கத் துணிபவர் என்பதாம்.

**மோனைத்தொடை :**

சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனையாகும்.

www.Padasalai.Net


**சீர்மோனை :**

**ம**ங்கை, **மா**தவம் – **ம**; **ப**ங்கயம், **பா**ர்த்தல, **பா**ரில் – **ப**; **அ**ல்லும், **அ**ன்பு – **அ**; **க**ல்லும், **க**னிய, **க**சிந்து, **க**ற்பனை – **க**; **அ**ன்பினுக், **அ**ன்பில் – **அ**; **இ**ன்ப, **இ**ன்னகை – **இ**.

**எதுகைத்தொடை :** சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகையாகும்.

**அடியெதுகை :** மங்கைய, பங்கய – **ங்**; அல்லும், கல்லும் – **ல்**; அன்பினும், இன்ப – **ன்**.

**சீர்எதுகை :** அன்பினுக், அன்பில் – **ன்**; இன்ப இன்னகை – **ன்**.

**43. 'வானவில்' அல்லது 'காடின்றேல் நாடில்லை' என்னும் தலைப்பில் புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.**

| வானவில் | காடின்றேல் நாடில்லை |
|---|---|
| காலையில் மேலை வானில் | காட்டினை முல்லை என்பார் |
| காண்பது வான வில்லே! | காடிலையேல் நாடும் இல்லை! |
| மாலையில் கீழை வானில், | காட்டிலே மரங்கள் உண்டு |
| மாண்புறு வான வில்லே! | காட்டிலே உயிர்கள் உண்டு! |
| வான்முகில் தவழும் வேளை, | நாட்டிலே நம்வாழ் வென்றால் |
| வானவில் வண்ணம் ஏழே! | நன்மழை பெய்ய வேண்டும்! |
| 'விப்கியார்' என்று சொன்னால், | காட்டினைப் பாது காத்தால் |
| விளங்கிடும் வண்ணங் கள்தாம்! | காணலாம் மழையைத் தானே! |

## பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3 × 6 = 18**

**44. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.**

கவிதை எழுதுவதில் வெற்றி பெறுவதற்குரிய நெறிகளைக் கவிஞர் சுரதா எளிமையான கவிதை வாயிலாகவே விளக்குகிறார். அதற்கு அவர் எடுத்தாண்டுள்ள சொற்களும் நடையும் மிகவும் எளிமையானவை.

**கவிதை படைக்க வழி :**

அரிசிதான் உலையிலிட்டு ஆக்கினால் சோறாகிறது. அரும்புதான் இதழ் விரித்தபின் பூவாகிறது. அதுபோல் வசனமாகக் கையாளும் சொற்களை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவை அமையும்வகையில், அவற்றைக் குறித்து முறையாகக் கற்று அறிந்தபின், அவற்றைக் கையாண்டு கவிதை எழுதினால் கவிதையாக அமையும் எனக் கூறுகிறார்.

**கவிதை எழுதத் தொடங்குமுன் அறிக :**

நன்கு பழுத்த பழமே சாறு தரும். நீர் பாய்ந்த நிலத்தில்தான் உழவு செய்ய முடியும். அதுபோல், எழுத்து, எழுத்து அசையாகும் தன்மை, சீர்களின் அமைப்பு, அவற்றிடையே வரும் தளை, அவை கொண்டமையும் அடிகளைக் குறித்துத் தெளிவாக அறிந்துகொண்டபின் கவிதை எழுதத் தொடங்க வேண்டும்.

**நல்ல பாடல் அமைப்பு :**

சீர்களில் தேமாவும் புளிமாவும் காய்க்கும். ஏமாந்தால் தளை தட்டும். நல்ல கவிதைகள் படைத்தால் பூமீது வண்டுகள் வந்து தங்குவதுபோலப் பலரால் போற்றப்படும். அத்துடன் சாமானிய மக்களும் அறியும் வண்ணம் கவிதைகளைத் தமிழில் படைத்து அளிக்க வேண்டும். நம் முன்னோர்போல் எழுத்தெண்ணிக் கற்றால், படைக்கும் கவிதைகளில் அறமும் பொருளும் வெளிப்படும். புகழ் என்னும் சிறப்பு விளைய நல்ல கவிதைகளை எழுதவேண்டும் எனக் கவிஞர் சுரதா கூறுகிறார்.

(அல்லது)

www.Padasalai.Net



**'சினத்தைக் காத்தல் வாழ்வை மேம்படுத்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விரித்துரைக்க.**

தன் சினம் செல்லத்தக்க மெலியவரிடத்தில் அதனைச் செலுத்தாமல் காப்பவரே, உண்மையில் சினத்தைக் காப்பவராவார். தன் கோபம் செல்லத்தகாத வலியவரிடத்தில் அதனைக் காத்தால்தான் என்ன, காவாவிட்டால்தான் என்ன?

சினத்தினாலேயே தீய விளைவுகள் ஏற்படும் என்பதை அறிந்து, எவரிடத்திலும் சினம் கொள்ளுதலைத் தவிர்த்து மறக்க வேண்டும். சினம் என்பது, முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொன்றழிக்கிறது. இதனால், சினம் என்பதைவிட, நம் அழிவுக்கு வேறு பகை இல்லை என்பதனைத் தெளிக.

ஒருவன், தன்னைத்தானே காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வெளிப்படாமல் அடக்கிக் காத்தல் வேண்டும். அப்படித் தடுத்துக் காத்துக்கொள்ளவில்லை என்றால், அச்சினமே அவனை அழித்துவிடும்.

சினம் என்பது, தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்புப் போன்றது. அதுமட்டும் அல்லாமல், அந்தச் சினம் என்னும் நெருப்பானது, ஒருவனுக்குப் பாதுகாப்பாக அமையும் சுற்றத்தவராகிய தெப்பத்தையும் எரித்துவிடும்.

முப்பால் கூறும் இக்கருத்துகளை நோக்கச் 'சினத்தைக் காத்தலே வாழ்வு மேம்பட வழி' என்பதனைத் தெளியலாம்.

**45. 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இரண்டு பக்க அளவில் கட்டுரை வரைக.**

தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்பும் வடிவழகும் மிக்க நகரங்களுள் முதன்மையானது மதுரை மாநகரமாகும். இந்த நகரின் சிறப்புப் பற்றி, இக்கட்டுரையில் காண்போம்.

**மதுரை நகரின் தொன்மை :**

வைகை நதியின் கரையில் அமைந்திருக்கும் நகராகிய மதுரை, கடைச்சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது. தென்னிந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் மதுரை மாநகருக்கு உண்டு. பிற்காலப் பாண்டியர், நாயக்கர், ஆங்கிலேயர் ஆண்ட காலத்துக்கு முன்னரே, சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் இலங்கை மன்னன் விஜயன், தன் பட்டத்து அரசியான மதுராபுரி (மதுரை) இளவரசியை மணந்ததாக, வரலாற்று நூலான மகாவம்சம் கூறுகிறது.

**நகரின் அமைப்பு :**

மதுரை நகரின் நடுநாயகமாக மீனாட்சி அம்மன் கோவில் அமைந்துள்ளது. நான்கு புறமும் ஆடி வீதிகள் உள்ளன. அதை அடுத்துச் சித்திரை, ஆவணி மூல வீதிகளும் உள்ளன. மாதங்களின் பெயர்களைக் கொண்ட வீதிகள் விரிவடைந்து செல்கின்றன. இந்நகர், பல்வேறு அடுக்குகளைக் கொண்ட நகரமாகும். நான்கு பக்கங்களும் ஆயுதக்கிடங்கும், கோட்டை அகழியும் உள்ளன. மதுரை மாநகர், சிறப்பான நகர அமைப்போடு அழகாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

**சங்ககால மதுரை :**

தமிழ் இலக்கியங்களின் பொற்காலம், மதுரைச் சங்கங்களின் இருப்பிடமாகும். சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி ஆகிய நூல்களில், மதுரையின் சிறப்புகளைக் காணலாம். தமிழ்மொழி, பல்வேறு சிறப்புகளை மதுரை மாநகரால் பெற்றது.

**பண்பாடும் பழக்கவழக்கங்களும் :**

மதுரை, பண்பாட்டுச் சிறப்பு வாய்ந்த நகரமாகும். நட்பு, விருந்து உபசரிப்பு என்னும் பாரம்பரியச் சிறப்புகளைப் பெற்ற நகரமாகும். தென்னிந்திய உணவு வகைகளுக்கும், மல்லிகைப்பூவுக்கும் சிறப்பு வாய்ந்தது மதுரை. இங்கு விவசாயம், நெசவு போன்ற பல்வேறு தொழில்கள், நடைபெற்று வருகின்றன. இந்நகர், 'தூங்கா நகரம்' என்னும் சிறப்பினையும் உடையது. இங்குச் சமயம் தொடர்பான விழாக்கள், ஜல்லிக்கட்டு போன்றவை சிறப்பாக நடைபெறும்.

(அல்லது)

**கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

அழகியலை உருவாக்கத் தளம் அமைத்துத் தருகின்றது தொல்காப்பியம். எழுத்தையும் சொல்லையும் போன்று, செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கொண்டுள்ளது.

www.Padasalai.Net


**மொழிசார் கலை :**

உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி முதலியவை, மொழியின் வழக்குகளைக் கலையியல் வழக்காக மாற்றுகின்றன. மொழியின் தனித்துவமான பண்புகள், மொழிசார்ந்த கவிதைக் கலையாக (poeticalness) ஆகிறது.

**கவிதையின் நடையியல் கூறுகள் :**

பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவையாகும்.

**ஒலிக்கோலங்கள் :**

மொழி சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும் உருவாகிறது. கவிதையும் இசையோடு பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் பெறுகிறது. இதனையே பாடலின் ஒலிப்பின்னல் (Sound texture) என்கிறோம்.

"கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற் கரிதே" (புறம். 110)

என்னும் பாடல் வரிகளில் அமைந்த வல்லினமெய்கள், உண்மையான உணர்ச்சியைக் காட்டுகின்றன.

"படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை
கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம். 145)

"புணரின் புணராது பொருளே; பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே" – (நற். 16)

இப்பாடல் வரிகளில், உயிர் நெட்டொலிகளும், சில சொற்களும் திரும்பவரல் தன்மையால் நிகழும் ஒலிக்கோலம், சங்கப் பாடல்களில் ஒரு குறிப்பிடத்தக்க பண்பாகும்.

**சொற்புலமும் தொடரியல் போக்குகளும் :**

சொல்வளத்தில், உணர்வும் பொருளும், கலையும் பண்பாடும், வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன. ஒருபொருள் குறித்த பல சொல்லாகவும், பலபொருள் குறித்த ஒரு சொல்லாகவும், துறைகளுக்கும் சூழல்களுக்கும் புனைவுகளுக்கும் சொல்லே களமாய் வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

முல்லைக்கலியில் காளைகளின் இனம் பற்றிய சொற்களும், 'கிடை' என்ற குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களும் பல பெயர்களில் காணப்படுகின்றன. தனிச்சொல்லாகவும் தொகைமொழியாகவும் வாக்கிய அமைப்பில் சொற்புலம் காணப்படுகிறது. ஒலிக்கோலமும், சொற்புலமும், சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தைப் பண்படுத்துகின்றன. தமிழ் அழகியல் நடையைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரமாகும்.

**46. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.கவிமடை வேந்தன் :**

மகாகவி பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக் கவிஞர் ஆவார் . நாட்டின்மீதும் மொழியின்மீதும் அவர் கொண்டிருந்த பற்று, ஆழ்ந்து கிடக்கும் ஆன்மிகச் சிந்தனை, சமுதாய மறுமலர்ச்சிக்குப் படைத்தளித்த கவிதைகள், அவரை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன. மகாகவியாய், தேசியக் கவியாய் அடையாளப்படுத்தின. பாரதியின் படைப்புகளில் கடிதம் வரைதலும் ஒரு புதுச் சக்தியாகத் திகழ்கிறது.

**மொழிப்பற்று :**

மகாகவி பாரதி, பன்மொழிப் புலமை பெற்றவர். அந்த மொழிகளிளெல்லாம் உயர்ந்த மொழியாகத் தமிழ்மொழியைக் காட்டுகிறார். அதனை,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்ற அடிகளால் உறுதிப்படுத்துகிறார். இது, அவரின் மொழிப்பற்றை வெளிப்படுத்துகிறது.

www.Padasalai.Net



**நெல்லையப்பருக்கு வேண்டுகோள் :**

நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதத்திலும், "தமிழ், தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள்; புதிய புதிய சிந்தனைகள், புதிய புதிய உண்மைகள், புதிய புதிய இன்பங்கள் தமிழில் வளர்ந்துகொண்டே இருக்கவேண்டும். தமிழ், செழுமை அடைய வேண்டும்" என்னும் தம் விருப்பத்தை வேண்டுகோளாக வைக்கிறார். இங்கே பாரதியின் மொழிப்பற்று விருப்பமாக வெளிப்படுகிறது.

**சமூகப்பற்று :**

புரையோடிக் கொண்டிருந்த சமூகத்தைக் கரைசேர்க்க முனைந்தார். பெண்களை அடிமைகளாக்கிப் பேதைமையை வளர்த்தவர்களுக்குச் சரியான முறையில் சூடு கொடுத்துப் பாடியவர் பாரதி. அதனால்தான் 'இருள் நீக்கப் பாடிவந்த நிலா' என்றார் பாவேந்தர். நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில், பெண்ணுக்குச் சமவுரிமை வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். "தம்பி, ஆணும் பெண்ணும் ஒருயிர் இரண்டு தலைகள்; அவை ஒன்றுக்கொன்று தாழ்வில்லை; பெண்ணை அடிமை செய்வோன், தன் கண்ணைக் குத்திக்கொண்டவனாவான். பெண்ணை அடைத்து வைப்பவன், கண்ணை அடைத்தவனாவான் என்று எழுது" என வேண்டுகிறார் பாரதி.

**எழுதுக ! பேசுக ! :**

"தமிழ்நாடு வாழ்க; தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க; தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிகள் பெருகுக; அந்தப் பள்ளிகளில் நவீன கலைகள் எல்லாம் பயிற்சிப் பெற்று வளர்க" என்று, நெல்லையப்பரை எழுதச் சொல்கிறார். தொழில்கள், தொழில்கள் என்று முழங்கு; வணிகமும் இயந்திரங்களும் பெருகவேண்டும் எனப் பேசு; முயற்சிகள் ஓங்க வேண்டும்; இசை, சிற்பம், இயந்திர நூல், பூமிநூல், வானநூல், இயற்கைநூலென ஆயிரம் ஆயிரமாய்ப் பெருகவேண்டும் என முழங்கு தம்பி" என்று, கட்டளை இடுவதன்மூலம் பாரதியின் சமூகப்பற்று, தெளிவாய் வெளிப்படுகிறது.

(அல்லது)

**'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.**

மூக்கம்மாள், அந்த வீட்டில் காலெடுத்து வைத்தபோது, வெள்ளைச்சாமி சிறு பையன். அவனைத் தன் மகனைப்போல் பாதுகாத்து வளர்த்தாள். 'இந்தாடா வெள்ளை' என்று, உரிமையுடன் அழைப்பாள். அவள் என்ன வேலை செய்துகொண்டு இருந்தாலும் 'மதனி கஞ்சி வேணும்' என்று பசியுடன் சிணுங்குவான். கல்யாணம் ஆனவுடன், எல்லாம் முடிந்தது. அத்தனை பாசமும் அடிமனத்தில் அமுங்கிவிட்டது.

**மேலூரு பங்காருசாமியின் இறுதி முடிவு :**

தன்னை வந்து சந்தித்த வெள்ளைச்சாமியிடம், இறுதியாகச் சொன்னார் பங்காருசாமி: "இந்தா பாரு, எனக்குத் தரவேண்டிய முழுப்பணத்தையும் அடச்சிட்டு, அப்புறமா நிலத்துல இறங்கு. இல்லன்னா ரொம்ப சிரமப்படுவ" என, எச்சரித்து அனுப்பினார்.

**வெள்ளைச்சாமியின் இயலாத் தன்மை :**

முகத்தில் அறைந்தாற்போல் பேசிய பங்காருசாமியிடம், அதற்குமேல் கெஞ்ச மனமில்லாமல் வீடு திரும்பினான். என்ன செய்வதென்றே தெரியாமல் குழம்பிப்போய், வீட்டிலிருந்த ஆட்டுரலில் உட்கார்ந்திருந்தான். "என்னங்க, மேலூர்க்காரரு என்ன சொன்னாக" என்று, அவன் பெண்டாட்டி ஆர்வத்தோடு கேட்டாள். "விதப்பு நேரம், பாடுபட்டு அதுல வர்ற வருமானத்துல பணத்தக் குடுத்திருரேனு சொன்னேன். முடிவா முடியாது, நிலத்துல இறங்கவும் கூடாதின்னுட்டாரு" என்று சொல்லிவிட்டு, இரு கைகளையும் தலைக்கு அண்டக் கொடுத்துக் குனிந்து கொண்டான்.

**எல்லாம் உன்னால் வந்தது ! :**

"இதுக்குக் குனிந்து கொண்டு, உட்கார்ந்திருந்தா எப்படி? என்னத்தாச்சும் வித்துக் கொடுக்க வேண்டியதுதான்" என்று சலித்துக் கொண்டாள். வெள்ளச்சாமிக்குச் 'சுரீர்' எனக் கோபம் வந்து, "எல்லாம் உன் பேச்சக் கேட்டுக் கேட்டுத்தான் இந்த நிலைக்கு வந்திருக்கேன். பொறுப்பில்லாம நடந்துக்கிட்டா இப்படித்தான். என் மதனியப் பாரு. என்ன குடும்பப் பொறுப்பு! எவ்வளவு பொறுமை! பொம்பளன்னா அப்படி இருக்கணும்" என்று, ஆதங்கப்பட்டான்.

www.Padasalai.Net



**வாய்ப்பேச்சு வம்பாப் போச்சு! :**

வெள்ளச்சாமி சொன்னதுதான் தாமதம், உடனே வரிந்து கட்டிக்கொண்டு, பொரிந்து தள்ளினாள். அவள் பேசப் பேச, வெள்ளச்சாமிக்குச் சூடேறியது. ஒரு கட்டத்தில் அவள் மதனியைப் பற்றி இழிவாகப் பேச, ஆணியில் மாட்டியிருந்த சாட்டைக் கம்பை எடுத்து விளாசினான். அம்மா அழுததைப் பார்த்துக் குழந்தைகளும் அழுதன. சாட்டையை வீசி எறிந்துவிட்டு, வீட்டிலிருந்து வெளியேறி, எங்கேயோ போய்விட்டான். அவளும் அவள் அம்மா வீட்டிற்குப் புறப்படத் தயாரானாள்.

நடந்ததை மனைவி கூறக்கேட்ட முத்தையா, "தகப்பன் செத்த நாளிலிருந்து அவனைத் தோளில் தூக்கி வளர்த்தேன். ஆனால், பங்குபாகம் பிரிக்கும்போது அவன் கேட்ட 'நீ எனக்கு அண்ணாக்கும்...' என்ற அந்த வார்த்தை, என் நெஞ்சில் நெருப்பாய்ச் சுடுகிறது. கண்ணீரை அடக்கமுடியாமல் விம்மியபடி, அவன் எனக்குத் தம்பி இல்லை. நான் முறையாகப் பிரித்துக் கொடுத்த நிலத்தை, அவன் காப்பாத்தலைனு வருத்தப்படாதே.

அவன், நானூறு ரூபாய்க்கு நிலத்தைக் கிரையம் எழுதிக் கொடுத்திருந்ததை மறைத்து, இருநூறு ரூபா வாங்கியதாகத்தானே அவன் மனைவி சொன்னாள். "பொய் சொல்வதை அவனும் அவன் மனைவியும் கைவிடவில்லை. உடம்பெல்லாம் பொய்" என்று வெகுண்டு, பொண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கொண்டு ஆடியவன், அப்படித்தான் அழிவான்' என்று சொல்லிவிட்டு, நிலத்தை உழுவதற்குச் சென்றான்.

பங்காருசாமி ஆட்கள், பக்கத்து நிலத்தை உழுதுகொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்ட முத்தையா, மிகவும் வேதனை அடைந்தான். அவன் விழிகளில், நீர் கசிந்தது. வெள்ளைச்சாமி வெகு தொலைவில் நடந்து போய்க்கொண்டிருந்தான். முத்தையா, தன் வேலையை பார்த்தான். பகை போக வழியில்லை. தான் உதவ முயன்றால், தன் குடும்பம் கெட்டுப்போக வாய்ப்பு உண்டு என எண்ணினான்.

வளர்த்ததைச் சொல்லிச் சொல்லியே என் மனம் வேதனை கொள்ளச்செய்யும் அண்ணனையும் அண்ணியையும் உதவி நாடிப் போகமாட்டேன். கூலிவேலை செய்து பிழைத்தாலும் பிழைக்கலாமே தவிர, இனி அவர்களைத் தேடிப் போகக்கூடாது என்று, உறுதியுடன் ஊரை விட்டுச் செல்ல நடைபோட்டான் தம்பி. அண்ணன் தம்பி பாசம் நீக்கி, கோபத்தால் பகை வளர்த்தனர். அதன் விளைவை எதிர்காலம்தான் சொல்ல வேண்டும்.

## பகுதி – V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **(1 × 6 = 6)**

**அ) "ஒருமையுடன்" எனத் தொடங்கும் 'தெய்வமணிமாலை' பாடலை அடிமாறாமல் எழுதுக.**

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்ம்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

**ஆ) "புகின்" என முடியும் குறட்பாவை எழுதுக.**

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.